www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්


பக்கம் 20

ஒக்.09-15,1994

ரூபா 9/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 71



## போரை நிறுத்தும் கடிவாளம் யாரிடம்?

துருவியறியும் எக்ஸ்ரே ரிப்போர்ட்

## புதைகுழி வேட்டையும் ஜனாதிபதித் தேர்தலும்

அரசியல் அலசல்

மகாபாரதம்





லேடீஸ் ஸ்பெசல்

சினி.... ...விசிட்

இலக்கிய நயம்

## ஒருவருடமாக தூங்காத குழந்தை

## குழந்தைகளை குலுக்கலாமா?

மருத்துவ அட்வைஸ்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
பேச்சுக்களைவிட
செயல் பெருமதியானது.

ஆயினும்-இங்கே
சுகமான-சுவையான
பேச்சுக்களே பெரு மரியாதை பெறுகின்றன.

பேசுவதையெல்லாம்-
செய்தேயாகவேண்டும் என்று
கட்டாயமில்லாத காத்திரமற்ற சூழல்
செய்ய முடியாததையெல்லாம்
திசைகள் அதிரப்பேசலாம் என்றாக்கிவிட்டது.

குரு தட்சணையாக தன்
கட்டை விரலைக் கொடுத்த ஏகலைவனை
தெரியாத்தனமாக
தியாகி என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம்.
ஏகலைவன் தியாகியல்ல-அப்பாவி.

குருவின் நோக்கத்தில் இருந்த
குறுமதியும்-சூதும், வஞ்சனையும்-
புரியாமல்-கட்டைவிரலை
அறுத்துக் கொடுத்தது அப்பாவித்தனம்.

அப்படித்தான்-நாமும்
ஐந்து வருடத்திற்கு ஒரு முறை
தேர்தல் திருவிழாவில் தோன்றும்
அரசியல்வாதிகளுக்காக
கட்டைவிரலை கொடுத்து வருகிறோம்,
அழியாத மை பூசுவதற்காக.

கட்டைவிரலில் மை பூசிக்கொள்ளுமுன்
மெய் பேசக்கூடிய
செயல் இல்லாமல்-
திசை அதிரப் பேசாதே
என்ற கொள்கையிருக்கக்கூடிய
அரசியல் வாதிகளை இனம் காண்பதில்
எத்தனையோ தடவை தவறிப்போனோம்.

திருவாளர் பொதுஜனமும்
அப்பாவி ஏகலைவன் போலத்தான்
ஏமாந்து போய்க்கொண்டிருக்கிறார்.

சமீபத்திலே-
அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து
ஆவேசமாகப் பேசினார்கள்
கூட்டணியின் பிரதிநிதிகள்.

பத்திரிகைகளில் அச் செய்திவர
படித்தவர்களுக்கு பரம திருப்தி.

அதே பத்திரிகைகளில்
இன்னொரு செய்தி:
'அவசரகாலச்சட்டம் ஏகமனதாக
பாராளுமன்றத்தில் நிறைவேறியது.'

படித்தவர்கள் சிந்தித்திருந்தால்
நம் அரசியல்வாதிகளின்
சொல் ஒன்று-செயல் வேறு
விவகாரம் விளங்கியிருக்கும்.

எதிர்த்துப் பேசுவதாக காட்டிவிட்டு
சட்டம் நிறைவேற
தம் ஒத்துழைப்பை தூக்கிக்கொடுத்துவிட்டார்கள்.
வெளிநடப்பு செய்யும்
வழக்கமான நழுவல் தந்திரம்கூட செய்யாமல்-
இரகசியமாக தம் ஆதரவை
அள்ளிக்கொடுத்துவிட்டார்கள்
கூட்டணிப் பிரதிநிதிகள்.
அதன் அர்த்தம்தான்
ஏகமனதாக நிறைவேறியது என்பது.

இப்போது-சற்றுத் தாமதித்து
இதையேன் சுட்டிக்காட்டுகிறேன் எனில்,
இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில்
பெரும்பான்மை இன கட்சிகள் மட்டுமல்ல
நம் தமிழ் பேசும் கட்சிகளும்
அழகாகப் பேசுகிறார்களே தவிர
செயலில் நேர்மாறாகவே இருக்கிறார்கள் என்பதற்காகத்தான்.

'பெருந்தகைமீர் பொறுத்தருள்வீர்!
நாம் அப்படித்தான் ஆவேசமாய் பேசுவோம்.
ஆனால் உங்களோடு தான் நிற்போம்'
என்று-அதிகாரத்திலுள்ளவர்களின்
செவிகளில் செய்தி சொல்லும்
அரசியல்வாதிகள் பற்றி
பாவம்-திருவாளர் பொதுஜனம்
எங்கே தெரிந்து கொள்வது?

தெரிந்து கொண்டால்கூட
தெளிவான-உறுதியான-கட்டுக்கோப்பான
மாற்று சக்தி ஒன்று இருக்கிறதா....
ஆதரிக்க, அதனைச் சார்ந்து நிற்க?
அப்படியில்லை என்பதுதான் அந்தோ பரிதாபம்!

ஆரோக்கியமான-
அரசியல் தலைமைத்துவத்தின்
வறுமையை- வரட்சியைத்
தமிழர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆயுத ரீதியில் வலிமையானபோதும்
அரசியல் ரீதியில்
தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தும்
ஜனநாயக உள்ளடக்கத்தை
புலிகள் தொடர்ந்தும் புறக்கணித்துவருவதும்
துரதிஷ்டவசமான நிகழ்வாகத் தொடர்கிறது.


இவ்வாறான ஒரு நிலையிலே
சமாதானம் பற்றிய
எம் மக்கள் கனவுகள் யாவும்
கைப்பட முடியாதவைகளாகி வருகின்றன.

இனிப்பான பேச்சுக்களைத் தவிர
இறுக்கமான செயல் வீச்சுக்களை
காண முடியவில்லையே என்ற வருத்தம்
எம் மக்கள் மத்தியில் உள்ளது நிஜம்.
வருத்தத்தை தீர்க்க விருப்பம்
நம் அரசியல்வாதிகளுக்கு
ஏற்படுவது எப்போ?

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## ஆவியின் கனியாகிய அன்பு

"உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என்று வேதம் சொல்லுகிறது. (கலாத்தியர்-6:14)

இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் எங்களையே கேட்கவேண்டிய கேள்வி; நாம் ஒருவரிலொருவர் அன்பு செலுத்துகிறோமா?

இந்தக் கேள்விக்கு பதிலைத் தேடினோமானால் 'இல்லை' என்பதே பதிலாக வரும். ஏனென்றால்;

"மாமிசத்திற்குரிய இச்சைகள், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமை, கொலைகள், வெறிகள்" இப்படிப்பட்ட காரியங்களுக்கு நாங்கள் அடிமையாயிருப்பதனாலேயே மற்றவர்களுடன் அன்பு செலுத்தமுடிவதில்லை.

(எபேசியர்-5:2) வசனம் சொல்கிறது "கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்."

ஆகையால் நாம் தேவனுக்கு விரோதமான காரியங்களை விட்டுவிட்டு, ஆவிக்கேற்றபடி நடக்க கற்றுக்கொள்வோம். அதேபோல் ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்.

நாம் இப்படி நடந்துகொண்டால் ஆவியின் கனியாகிய அன்பு நம்மில் பூரண கிரியை செய்யும்.

மேரி ஜேக்கப்- கொழும்பு-06.

## பாடம் புகட்டிய பணிப்பெண்

பக்தீரியாவின் கவர்னராக இருந்த இப்றாகீம் என்பவருக்கு இன்ப சுகங்களில் ஈடுபாடு அதிகம். அவரின் படுக்கை அறை மிகவும் மென்மையாக இருக்கும். அதனை விரிப்பதற்கென்று ஓர் பணிப்பெண்ணை நியமித்தார் இப்றாகீம்.

அந்த பணிப்பெண்ணுக்கு ஓர் ஆசை. நாள்தோறும் விரிக்கிறோமே இந்த மென் மஞ்சம்- இதில் தானும் கொஞ்ச நேரம் படுத்து உறங்க வேண்டும் என்பதுதான்.

ஆனாலும் அந்த ஆசையை அச்சம் தடுத்தது. இருந்தும் இவள் துணிந்துவிட்டாள். அந்த மென் மஞ்சத்தில் ஏறிப் படுத்தாள். அந்த சுகத்தில் அவள் அப்படியே தூங்கிவிட்டாள்.

இப்றாகீம் அங்கு வந்தார். ஆ! என் படுக்கையில் படுக்க எத்துணை துணிச்சல் வேண்டும் இவளுக்கு? ஆத்திரத்தில் அதிர்ந்து கண்கள் சிவந்தன.

"எங்கே பணியாட்கள்? இவளுக்கு இருபத்தைந்து கசையடி கொடுங்கள்" என்று கட்டளையிட்டார்.

பணிப்பெண்ணோ நடுநடுங்கினாள். "எஜமானே கொஞ்ச நேரம் நான் இதில் படுத்திருந்ததற்கே இருபத்தைந்து கசையடிகள் கொடுக்க கட்டளையிட்டீர்கள். ஆனால் அல்லாஹ் உங்களுக்கு மறுமையில் இந்த மென் மஞ்சத்தில் படுத்து உறங்கியதற்கு எத்தனை கசையடிகள் கொடுக்க கட்டளையிடப் போகிறானோ அதை நினைத்தால் எனக்கு வருத்தமாயிருக்கிறது" என்றாள்.

இப்றாகீம் அப் பணிப்பெண்ணை மன்னித்ததோடு சிந்திக்கவும் செய்தார்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-68


வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**வசந்த மலர்வு**

வாழ்வின் வசந்தத்தில்
வந்துதித்த என் பூவே
சமரசத்தின் குரல் கேட்டு
உன் சங்கீத சிரிப்பொலியா?
வாடாது நீயும் வாழ்வில் மலர
வந்திடுமா ஒரு வசந்த மலர்வு?

தெ.லோஜனா
கொழும்பு-15.



**மகிழ்ச்சி**

பொருளாதார தடை
நீக்கியதற்கான மகிழ்ச்சியா?
விடுதலையான பத்து பேரில்(பொலிஸ்)
உனது தந்தையும் ஒருவரா?

வே.றொஷான்-ஹட்டன்.

### வியக்கப்பட்டவை

போர் விட்டுப்
போகுமென்றா
பூத்தது
இந்தப் பூஞ்சிரிப்பு?

மாஸ்டர்.எஸ்.நோபிராகவன்
அக்கரைப்பற்று-7.

**பாசம் எங்கே?**

பாசிசம் பேசும் மண்ணில்-உன்
பாசமும் தோற்கும் கண்ணே!

ச.மகாலிங்கம்-வெலிமடை.

**ஆரம்ப இன்பம்**

கண்ணீரில் வாழ்ந்துவரும்
மானிடனின் ஆரம்பம்
கற்பனையில் திளைக்கின்றதோ.

எஸ்.பஹூர்தீன்
புத்தளம்.

**தட்டைத்தரையினிலே**

மொட்டையாய் இருந்தாலும்
பட்டு உடல் பளபளக்கும்
முத்துநகை எழில் கொடுக்கும்
தொட்டுத்தூக்கா விட்டாலென்ன
துன்பமில்லை துயரமில்லை
தூயமதி முகம் மலரும்

குறிஞ்சிமகன்-கண்டி.

**சந்திரிக்கா வந்துவிட்டார்**

சந்திரிக்கா வந்துவிட்டார்
சாந்தி முரச மறைந்துவிட்டார்
சிந்தும் மழலைப் புன்னகையே
நொந்த மனதுக் கௌடதமே

பாத்திமா இஷ்கா
வெலிகம.

**நிலைக்குமா சிரிப்பு?**

புது யுகம் பிறக்குமென்று
புது அரும்பு சிரிக்கிறதோ?
புத்தியுடன் கதை தொடர்ந்தால்
புன்னகை நிலைத்து நிற்கும்!

மு.பராபரசிங்கம்-வவுனியா.

**எதிர்பார்ப்பு..**

மனித நேயம் மாளாமல்,
இரத்த ஆறு ஓடாமல்
அமைதிதனை எதிர்பார்த்து
அமர்ந்திருக்கும் அழகாமோ?

பஷீரா முஹைடீன்-பாலையூற்று.

**சின்னக்குயில்**

அமைதித்தாய்
அடியெடுத்துவைக்க
அவனியெங்கும்
மகிழ்ச்சிபொங்க
புன்னகையால்
வாழ்த்துப்பாடும்
சின்னக்குயில்.

ஆரையம்பதி-இதயம்.

**தூது!**

போர்த்தேசத்தில்
மலர்ந்த பூ
சமாதானத்திற்குத்
தூதுபோகப் போகிறதோ?

ஆரையூர்-மலர்,காத்தான்குடி.

**விடி விளக்கு**

இருண்ட தேசத்திற்காய்
உருவாகும்-ஒரு
விடி விளக்கு

சுப்பையா அந்தனி-பூண்டுலோயா.

**நாளைய மலர்ச்சி**

அன்பு மகனே..!
அழுதது போதும்
புன்னகை சிந்து
இது பூக்களின்
மாதம்..!
நாளைய மலர்ச்சி
இனி
ஜனநாயக வளர்ச்சி..!

ஷியானி நளீர்
அக்குறணை.

## கவிதைப் போட்டி இல-71



சற்று வித்தியாசமாகச் சிந்திக்கலாமே- முயலுங்கள். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள்.

சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.
அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 15.10.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 71
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**என் ஆசை**

சின்ன சின்ன ஆசை..
உன் மழலை சிரிப்புக்கு ஆசை.
முத்து முத்து ஆசை..
உன்னை கட்டி முத்தமிட
ஆசை..!

ப.சிவனேஸ்வரி(குமா)
மடுல்சீமை.

**சிரிக்கிறதொரு சின்னப்பூ**

சனத்தொகையை-கூட்டிவிட்ட
சந்தோசமா?
நிலைக்காது நித்திலமே
சாவும் சமருந்தான்
சர்வ நிச்சயம்.

பாண்டிருப்பு-கமலினி.

மலர் மொட்டு
மனம் விட்டு
மலருது முரசில் பட்டு.
இதை தொட்டு
எழுதும் கவி மொட்டு
மலரும் முரசின்
விழி பட்டு!

சுப்பையா கணபதி
கமேவெல.

## வாசகர் சாலை

'கொலை விழும் நேரத்தில் கொலையாளி கைது என்றதும் மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் ரசிகனுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! வினோவை காயத்திரியோடு ஒரு நாளைக்காவது வாழ விடுங்கள் சார்.

பாத்திமா ரிப்கா பாரிஸ், நுவர-எலியா.

□□

பெண்ணின் உடல் நிலையை உணர்ந்து கொள்ளாது இல்லறவியலில் தொடர்ந்து இன்பங் கான எத்தனிக்கும் ஆண்களுக்கு முரசில் வெளியிடப்பட்ட 'கர்ப்பம்' சிறுகதை படிப்பினை யூட்டும் ஒரு கதையாக அமைந்திருந்தது. இக்கதையை எழுதிய ஹரீரா அனஸிற்கும், முரசுக்கும் எனது பாராட்டுக்கள்.

கே.வின்சன்-மட்/சத்துருக்கொண்டான்.

□□

டியர் முரசே!

கதிரவன் கண்டு கண் விழிக்கும் தாமரை போல் முரசு கண்டு முகம் மலரும் ஜீவன்கள் நாம்.. நீ! வாழ்க! வளர்க! வெல்க!

ஏ.எம்.முஹாஜிரீன், ஏ.எம்.றிஸ்வான், றிஜாஸ், சபியா, றஸீமா-கஹட்டகஸ்திகிலியா.

□□

அன்பு முரசே! உன்னைக் கண்டுவிட்டால் போதும். என் வீட்டில் ஒரே போட்டி. உன்னை யார் முதலில் வாசிப்பது என்று. அதில் முந்திக்கொள்வது நான்தான். உன் ஆக்கங்கள் யாவும் அருமையிலும் அருமை. நீ மென்மேலும் சிறப்புடன் திகழ என் வாழ்த்துக்கள்.

செல்வி.பர்ஸானா ராஸிக்-அக்குறணை.

□□

18-24 செப்..வாரமலருக்கு

அரசியல், விளையாட்டு, சினிமா செய்திகள் ஆச்சரியப்பட வைத்தன. உலக செய்திகளும் விந்தைகளும் வியப் படைய வைத்தன. தொடர் சிறு கதைகள் எதிர்பார்ப்புக்களையும் படிப்பினையையும் தூண்டின. கவிதை, கட்டுரைகள் களிப்படையச் செய்தன. மிக்க நன்றி.

பர்ஷான் இஸ்மாயில்-நீர்கொழும்பு.

□□

வாரமொருமுறை என் கரங் களில் தவழும் முரசே! நீ எனக்கு அள்ளித்தரும் சிறுகதையுடன் பலவித மான பல்சுவையம்சங்களையும் தந்து மகிழ வைப்பவள் நீ.

வி.காந்தன்-கல்முனை.

□□

பல்சுவை அம்சங்களையும் ஒன்றுதிரட்டி வாரம் ஒருதடவை வலம் வரும் வண்ண முரசே, உன் பெயரை மேலும் விருத்தி செய்வதற்கு தினந்தோறும் எங்கள் கரங்களில் வருவாயோ தினமுரசே,

க.தவராஜா-அக்கரைப்பற்று-08.

□□

என்றும் என் இனிய தினமுரசு வாரமலரே! வாரா வாரம் உன்னை கண்டு களிப்பதில் எனக்கு அள வில்லாத மகிழ்ச்சி. உன்னில் உதய மாகும் சிறுகதைகள், கவிதைப் போட்டி, தகவல் பெட்டி, சினிவிசிட், பாப்பா முரசு, புகார் பெட்டி, உலக ரவுண்டப், தேன் கிண்ணம், லேடீஸ் ஸ்பெஷல், மருத்துவ விந்தை கள், ரசிகனின் கொலைவிழும் நேரம் இவை அனைத்தையும் அள்ளித்தரும் உனக்கு என் மனப்பூர்வமான நல்வாழ்த்துக்கள்.

பௌஸர் ஸலாம்-தர்காநகர்.

□□

நான் சவூதி அரேபியாவில் இருந்து உங்கள் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குகொள்வதால் போட்டி நிபந்தனைகளுக்கமைய அஞ்சல் அட்டை கிடைக்கவில்லை. எனவே கடித உறையினுள் போட்டிக் கூப்பனை வைத்து அனுப்பியுள் ளேன். பரிசு பெறுவது அல்ல என் நோக்கம். கடல் கடந்து இருந்தா லும் பங்குபற்றுவதேயாகும்.

செ.ஜெயசோதி-சவுதிஅரேபியா.



இனிய முரசே!

வாராவாரம் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். குறிப்பாக ரசிகனின் கொலை விழும் நேரம், இலக்கிய நயம் என்பன சுவையிலும் சுவையே.

நல்ல சிறுகதைகளை வழங்கி வரும் ஹரீரா அனஸ், ஷர்மிளா இஸ்மாயில் அவர்களுக்கு எனது உளம்கனிந்த பாராட்டுக்கள்.

எம்.ஷாரா-பொல்காவலை.

□□

சுடச்சுட அரசியல் செய்தி தொடக்கம் நாட்டு நடப்பு செய்தி வரை உடனுக்குடன் வாரமலரில் வெளியிடும் பத்திரிகை தினமுரசு ஒன்றுதான். இம்முரசு தினமும் ஓங்கி ஒலிக்கட்டும்.

வி.ரவிச்சந்திரன்
முறக்கொட்டான்சேனை.

□□

உனது ஆக்கங்கள் அனைத்தும் படு ஜோர். குறிப்பாக லேடீஸ் ஸ்பெஷல் எங்கள் மனதை தட்டி எழுப்புகிறது. உனது வரவு கண்டு நாங்கள் கொத்து மலராய் மலர்கிறோம்.

எஸ்.ஷாமிலா மும்தாஜ்-மருதமுனை.

□□

என்றும் என் அபிமான முரசே, ரசிகர்களாகிய நாங்கள் வாரா வாரம் உன்னில் எவ்வளவு பயன் களை அடைகிறோம். நீ தாங்கிவரும் அத்தனை அம்சங்களும் வியப்பில் ஆழ்த்துகின்றன. அத்தோடு அரசிய லில் நீ காட்டும் பக்க சார்பற்ற துணிச்சலையும் நாம் பாராட்ட மறக்கவில்லை. உலகில் எல்லா இடங்களில் வாழும் தமிழ் வாசகர் கைகளிலும் நீ தவழ எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள் முரசே.

நாகமணி தியோகுநாதன்,
எம்.எஸ்.வின்சன்-மட்டக்களப்பு.

□□

(11.09.94)ல் வெளிவந்த முரசின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', படித்தும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

நடந்த-நடக்கின்ற நடக்கப் போகும் ஒவ்வொரு அரசியல் நிகழ்வு களிலும் யதார்த்தமாக தீர்க்கதரி சனமாக விமர்சிக்கும் ஒரே பத்திரிகை நீ மட்டுமே.

எஸ்.உமா-வல்வை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# வடக்கில் புலிகளின் வெற்றிவிழாக் கூட்டங்கள்!

# கரும்புலிகளுக்கு மாபெரும் கௌரவம்

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையே யாழ்ப்பாணத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சூழலிலும் புலிகள் தமது இராணுவ நடவடிக்கைகளின் வெற்றி விழாக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.**

### கடற்கரும்புலிகளுக்கு அஞ்சலி

19.09.94 அன்று கடற்படையினரின் 'சாஹரவர்த்தன' கப்பல் தகர்ப்பில் பலியான கடற்கரும்புலிகளின் அஞ்சலிக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் மிகவும் பாரிய முறையில் நடத்தப்பட்டது.

கரும்புலிகளின் நினைவுக் கற்களும் நடுகை செய்யப்பட்டன.

லெப்-கேணல் நளாயினி, மேஜர் மங்கை ஆகியோரின் நினைவுக் கற்கள் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும், கப்டன் இசைவாணன் அல்லது லக்ஷ்மன் மற்றும் கப்டன் வாமன் ஆகியோரது நினைவுக் கற்கள் கோப்பாயில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்திலும் நடுகை செய்யப் பட்டன.

### புலிகளின் அரசியல் பிரிவு அறிக்கை

கடற்கரும்புலிகளின் வெற்றி நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கைக் கடற்படையின் 'சாஹரவர்த்தன' கப்பலை 'கடல் அரக்கன்' என்று வர்ணித் துள்ளது. மேலும் அந்த அறிக்கையில், "பெண் தளபதி ஒருவரது தலைமையில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட தாக்குதல் சாதனை மேல் சாதனையாக அமைந்துள் ளது. புதிய வரலாற்றையும் படைத்து விட்டது. ஏற்கனவே காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்டன் அங்கயற் கண்ணியினால் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று தாக்குதலுடன் ஆரம்பமான பெண் கடற்புலிகளின் சகாப்தம் லெப்.கேணல் நளாயினி வரை தொடர்ந்து பெரும் வெற்றிகளை தேடித்தந்து கொண் டிருக்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29.09.94 அன்று கடற்கரும்புலிகள் நினைவுநாள் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து வருடாவருடம் இந்த நினைவு நாள் அனுஷ்டிக்கப்படும் என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

### 'புலோப்பளை சமர் நினைவு'

கடந்த 30.09.94 அன்று யாழ்ப் பாணத்தில் புலோப்பளையில் மற்றொரு 'வெற்றிநாள்' கூட்டம் நடத்தப்பட்டது. கடந்த ஆண்டு சாவகச்சேரி புலோப்பளையில் படையினரோடு நடந்த மோதலை குறிக்கும் வகையில் இந்த நினைவுநாள் கூட்டம் நடத்தப்பட்டது. புலிகளின் முக்கிய பிரமுகர்கள் நினைவு நிகழ்ச்சிகளில் பங்குகொண்டனர்.

### பிரபாவின் உத்தரவுப்படி

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.வே.பிரபாகரனின் உத்தரவின்படி புலிகளின் பிரசாரத்திற்காக 'இன்னுமொரு நாடு' என்னும் வீடியோ திரைப்படம் தயாரிக்கப்பட்டு 01.09.94 அன்று யாழ்ப் பாணத்தில் வெளியிடப்பட்டது.

ஏற்கனவே, 'இது எங்கள் தேசம்', 'தாயகக் கனவு', 'தமிழோசை', 'சின்ன விழிகள்', போரம்மா' போன்ற குறும்படங் கள் தயாரிக்கப்பட்டன. இவற்றில் பல கனடா, சுவிஸ் போன்ற நாடுகளில் உள்ள திரையரங்குகளிலும் புலிகளின் கிளைக ளால் திரையிடப்பட்டுள்ளன.

### கூட்டங்களின் நோக்கம்

பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சூழ்நிலையிலும் மக்களின் மனோபாவம் மாறாதிருக்க வேண்டும் என்று புலிகள் விரும்புகின்றனர்.

சமாதானப் பேச்சுக்கள் பற்றிய எதிர்பார்ப்புக்கள் அளவுக்கதிகமாக உருவாகாதிருக்கவேண்டும் என்று புலிகள் அமைப்பினர் கருதுவதால் போரில் தமது வெற்றிகளை நினைவு கூருகின்றனர். பிரசாரங்களிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

தற்போதைய பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் முன்வந்துள்ளமையும் தங்கள் நவடிக்கைகளின் வெற்றிகளால் ஏற்பட்ட நிர்ப்பந்தமே என்பதை மக்களுக்கு நினை வூட்டுவதும் புலிகளது வெற்றிநாள் கூட்டங் களது நோக்கமாக இருக்கிறது. ■

## சுதந்திரக் கட்சி கூட்டத்தில் சல-சலப்பு

# வேட்பாளர் தெரிவில் அம்மையார் அதிருப்தி!

ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதற்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்ட தாக சிங்கள தினசரியான 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

சிறிலங்கா சுதந்திரக்கட்சி பணிமனையில் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்யும் கூட்டம் கடந்தவாரம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பொதுஜன முன்னணி யின் தலைவி திருமதி சிறிமாவோ தலைமை தாங்குவதாக இருந்தது. ஆயினும் திருமதி சிறிமாவோ கூட்டத்திற்கு வர தாமதமாகிய தால், திருமதி சந்திரிக்கா தலைமை தாங்கும் படி அமச்சரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி பொதுச்செயலாளருமான திரு. தர்மசிறி சேனநாயக்கா கேட்டுக்கொண்டார்.

திருமதி சந்திரிக்காவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாள ராக திருமதி சந்திரிக்காவின் பெயர் பிரேரிக்கப்பட்டது. பிரேரித்தவர் கல்வி-உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரண.

அதனை ஆமோதிக்க திரு அநுர ரத்வத்த எழுந்தசமயம் திரு.சி.வி. குணரத்னவும் ஆசனத்திலிருந்து எழுந்தார்.

உடனே திரு.அநுர ரத்வத்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். திரு.சி.வி.குணரத்ன பிரேரணையை ஆமோதித்தார்.

இப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு 10 நிமிடத்தின்பின் அங்கு வந்து சேர்ந்த திருமதி சிறிமாவோவிடம் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு பற்றி கூறப்பட்டது.

அதனைக் கேட்டதும் திருமதி சிறிமாவோ கலவரமடைந்தார். சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ஏற்கனவே ஜனாதிபதி வேட்பாளராக தன்னை தெரிவு செய்தமையை சுட்டிக்காட்டியதோடு, தான் சமூகமளிக்காத நிலையில் அந்த முடிவை மாற்றியது தவறு என்று கூறினார். தான் போட்டியிட விரும்ப வில்லை என்றாலும் தனது பிரசன்னமில்லாத நிலையில் இப்படியொரு முடிவு எடுத்திருக் கக்கூடாது என்றும் திருமதி சிறிமாவோ சுட்டிக்காட்டினார். இதனால் கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. அத்தோடு செயற்குழு கூட்டமும் கலைந்தது. இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பெரும்பாலான பொ.ஜ. முன்னணி உறுப்பினர்களும், தலைவர்களும் திருமதி சந்திரிக்கா போட்டியிடுவதையே விரும்புகின்றனர். எனவே திருமதி சிறிமா வோவும் திருமதி சந்திரிக்கா போட்டியிடு வதை ஆதரிப்பதை தவிர வேறுவழியில்லை.

## சமாதானப் பேச்சுக்கு இந்தியா எதிர்ப்பாம்

### யாழ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி

(வர்மா)

இலங்கை அரசும்-புலிகளும் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துவதை இந்தியா கடுமையாக எதிர்க்கிறது. இவ்வாறு யாழ்ப் பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

28.09.94 அன்று வெளியான 'உதயன்' பத்திரிகையில் மேலும் இதுபற்றி தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, "இலங்கை அரசோடு புலிகள் பேச்சு நடத்துவதை இந்தியா விரும்பவில்லை. தனது அதிருப்தியை இந்திய அரசு பிரதமர் சந்திரிக்காவுக்கு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் எதிர்ப்பைச் சமாளிக்கவே திரு.லயனல் பெர்னாண்டோ இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இந்தியாவிடம் புதிய அரசின் நிலையை விளக்குவதாகவே அவரது பயணம் அமைந்தது" என்று குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்தியா சமாதானப் பேச்சுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடாது" என்று யாழ் ஆயர் தெரிவித்துள்ளார்.

## ஏறாவூரில் தொடர்ச்சியான அரசியல் பழிவாங்கல்!

# அமைச்சர் பௌசியிடம் அழுதழுது முறைப்பாடு

(ஏறாவூர் நிருபர்)

கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னும் பின்னும் ஏறாவூரில் மிக மோசமான அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. இது பற்றி ஏறாவூருக்கு வருகை தந்த சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி அவர்களிடம் பலர் அழுதழுது தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விளக்கினர்.

இதுவரை 8 பெண்கள் உட்பட 28 பேர் வாள்வெட்டு, கத்திக்குத்து, துப்பாக்கிச்சூடு, ஆகியவற்றுடன் அடித்தும் தாக்கப்பட்டுள்ள னர். 11 வீடுகளும், ஒரு பஸ், இரு வான்கள் சேதப் படுத்தப்பட்டதாகவும், 10 பேர் இன்னமும் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருப்ப தாகவும், 16 ஆசிரியர்கள் இடமாற்றத்திலிருப்ப தாகவும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 1990ம் ஆண்டு நிலவிய பயங்கர சூழ்நிலை போன்று தேர்தலை நெருங்கிய வாரத்திலிருந்து கடந்த வாரம்வரை ஏறா வூரில் காணப்பட்டது. இரவானதும் மக்கள் பயந்து தமது வீடுகளில் அஞ்சியபடி வாழ்ந்தனர்.

ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரியிலும், மட்டு மாவட்ட ஐ.தே.க.பா.உ. செய்யதலி மௌலானாவின் இல்லத்திலும் இடம்பெற்ற வைபவங்களில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர்,

"ஏறாவூரில் பெரிய அரசியல் பிரச்சினை கள் உள்ளன என்பதை நான் அறிந்து கொண்டுள்ளேன். இது பற்றி பிரதம மந்திரி சந்திரிக்கா அம்மையாரிடம் எடுத்துச் சொல் வேன்" என்றார். மேலும் அவர்: "மீண்டும் ஒக்ரோபர் மாதம் 24ம் திகதி உங்கள் பகுதிக்கு நான் வருவேன். ஒவ்வொரு மாதமும் நான் வர எண்ணியுள்ளேன். அதிகாரிகள் குறுகிய மனப்பான்மையுடன் நடந்து கொள்ளக்கூடாது. தாதிமார் நோயாளிகளுடன் அன்பாக நடந்துகொள்ள வேண்டும். மட்டு வைத்திய சாலையை போதனா வைத்திய சாலையாக தரம் உயர்த்துவோம். தற்காலிக சேவையிலுள்ள வைத்தியசாலை ஊழியர்கள் 500பேரை நிரந்தரமாக்குவோம். இப்பகுதியில் சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்த 19 ஆயிரம் வாக்காளர்களும் தமக்கு ஒரு மந்திரி இல்லையே என்று கவலைகொள்ள வேண்டியதில்லை.

"உங்களின் பிரதிநிதியாகவே நான் வந்துள்ளேன். உங்களின் குறைகளைக் கண்டறிந்து சேவையாற்றுவேன்" என்றார்.

இதேவேளை ஏறாவூர் பொலிசாரால் தேர்தலையொட்டிய வன்செயல் காரணமாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு காவ லில் வைக்கப்பட்டிருந்த ஜுனைல் (22) எனும் வாலிபன் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது பெற்றோர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறையிட்டுள்ளனர். ■

## அம்பாறை மாவட்ட பிரசாரம்

# நிந்தவூரில் ஆரம்பம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விருக்கும் பிரதமர் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, அம்பாறை மாவட்டத்திற்கான தனது முதலாவது பிரசாரக் கூட்டத்தை நிந்தவூரிலே ஆரம்பிக்க விருக்கிறார்!

கடந்த பொதுத் தேர்தல் சமயம் பிரசாரக் கூட்டம் ஒன்றுக்கு நிந்தவூருக்கு வராதுபோன ஏமாற்றத்தை தவிர்க்குமுகமாக தேர்தல் முடிந்தபின் முதலில் 'நிந்தவூர் வருவேன்' என அவர் உறுதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ●

## "தமிழ் ஈழமே விடிவுக்கு வழி"

### கடற்புலித் தளபதி சூசை பேச்சு

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் விசேட தளபதி சூசை, இயக்க உள் பிரச்சனை காரணமாக தடுத்துவைக்கப்பட் டிருப்பதாக கொழும்பில் இருந்துவரும் சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. அச்செய்தி பற்றி முரசும் கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தது.

சமீபத்தில் நடந்த கடற்கரும்புலிகளின் நினைவுநாள் கூட்டத்தில் சூசை கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

வடமராட்சியில் நடைபெற்ற நினைவு நாள் கூட்டத்தில் உரையாற்றிய சூசை தமிழ் மக்களின் விடிவுக்கு தமிழ்ஈழமே ஒரே தீர்வாகும் என்று குறிப்பிட்டார். சூசையின் உரை யாழ்ப்பாண பத்திரிகை களிலும் வெளியிடப்பட்டிருந்தது. ■

### மட்டக்களப்பு செய்திகள் — தேனீ

# விலை குறைந்தபோதும் வயிறு நிரம்பவில்லை

## உணவு விடுதிகளை நம்பியிருப்போர் புலம்பல்

### பிரதேச சபைகளின் அமையம்

மட்டக்களப்பு-மாவட்ட பிரதேச சபைத் தலைவர்கள், உபதலைவர்களை பிரதி நிதித்துவப் படுத்தும்-சபையொன்று அண்மை யில் அமைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட பிரதேச சபைகளின் அமையம்- என்பது இந்த அமைப்பின் பெயர். மட்டக் களப்பு- மாநகர சபையின் முதல்வர் திரு. செழியன் ஜே.பேரின்பநாயகம் இவ்வமை யத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவானார். செயலராக-திரு.றொபேட் நவரெத்தினராசா (ஆரையம்பதி பிரதேச சபைத் தலைவர்) பொருளாளராக போரதீவுப்பற்று பிரதேச சபையின் உபதலைவர் எம். நவரத்தின ராஜாவும் தெரிவாகினர்.

### செய்தித்துறையில் பயிற்சி

செய்தித் துறையில் பாடசாலை மாணவர் களுக்கு-பயிற்சியையும், அறிவையும் வழங்கும் நோக்குடன் மட்டக்களப்பு தொழில் சார் செய்தியாளர் சங்கம் இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வை நடாத்தவுள்ளது. மாவட்டத்தைச் சேர்ந்த அறுபது மாணவர்கள் பயிற்சி நெறியில் பங்கேற்பர். மட்டக்களப்பு பிராந் திய கல்வித் திணைக்களம் இதற்கான அனுசரணையை வழங்கும். தேசியத் தினசரி களின் பிரதம ஆசிரியர்கள், செயலமர்வில் கலந்துகொண்டு சிறப்புச் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### விலை குறைந்தது அளவு சிறுத்தது

கோதுமை மாவுக்கு அரசு விலை குறைப்பு செய்துள்ளது. எனினும் இடியப்பம், பிட்டு, றொட்டி, தோசை போன்ற உணவு களின் விலை குறையவில்லை. அளவுப் பரிமாணத்திலும் இவை சிறுத்துள்ளன. பாணின் விலை குறைக்கப்பட்டுள்ளது. அதுவும் நிறை குறைந்தேயுள்ளது. கடைகளை தமது உணவுக்கு நம்புவோர் இதனால் மனம் பேதலித்துப்போயுள்ளனர்.

### மாநகர மண்டபத்தை தாருங்கள்

மட்டக்களப்பு அரசு அதிபர் ஆர். மோனகுருசாமி-பிரதி தபால் தந்தி தொடர்பு கள் அமைச்சர் ஜனாப்.எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவுக்கு மட்டக்களப்பு செயல கத்தில்-வரவேற்பளித்து கௌரவித்தார். பிரதி அமைச்சர் கொள்கை விளக்கப் பிரசங்கம் செய்தார். திணைக்களத் தலைவர் கள், பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரி கள், மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் ஜே.பேரின்பநாயகம் ஆகியோர் பங்குகொண்ட னர். முதல்வரின் பேச்சு சர்க் கரைப் பந்த லில் தேன்மாரி பொழிந்ததுபோல் இருந்தது. "எனக்கு என்ன தேவை இருக்கிறது? ஒன்றுமே இல்லை. எனக்கு என் பிரதேச வரியிறுப்பாளர்களின் சொத்தான மாநகர மண்டபத்தை- குடிமனைகள், அரசடி நூலகக் கட்டிடம், வை.எம்.எச்.ஏ.கட்டிடம், ஆகிய வற்றை மீளப் பெற்றுத் தாருங்கள் படையின ரிடமிருந்து' எனக் கேட்டார்.

### தனிச் சிங்களத்தில்

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட பிரதேச சபைத் தலைவர்கள், மட்டுநகர் மாநகர முதல்வர், ஆணையாளர்கள், சூழல் சுற்றாடல் இணைப்பதிகாரிகளுக்கான ஒரு நாள் கருத்தரங்கொன்று அம்பாறை நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபை இக்கருத் தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. கருத்தரங்கு தனிச் சிங்களத்திலேயே நடைபெற்றது. சற்று சலசலப்புக்குப்பின்னர்- தமிழர்கள் மொழி ஆங்கிலம் என நினைத்து ஆங்கி லத்தில் பேசினார் பங்குபற்றிய உயர் அதிகாரி. போதிய ஆயத்தம் இல்லை- சமநேர தமிழ் மொழி பெயர்ப்புக்கு. இனியும் இந்தப் பிழை நடக்காமல் பார்த்துக்கொள்ளுவோம் என்ற குரலும் கேட்டது. அரச கரும மொழி அந்தஸ்து என்னவாயிற்று என முணுமுணுத் துக் கொண்டு வெளியேறினர் மொழியை விளங்கிக் கொள்ளாத பிரதேச சபைத் தலைவர்கள்.

### பிள்ளையாரும்-திருமணங்களும்

திருமணங்கள் சொர்க்கத்தில் தீர்மா னிக்கப்படுகின்றன என்பர். ஆனால் மட்டக் களப்பு- பிரதேசத்திலுள்ள பிள்ளையார் சந்நிதிகளில் திருமண வைபவங்கள் நிறை வேற்றப்பட்டன. அண்மையில் எதிர்கொண்ட சிறப்புத் தினமொன்றில் மட்டும் மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் கோவிலில் ஒரே நேரத்தில் எட்டுத் திருமணங்கள் நடை பெற்றன. சுற்றியுள்ள ஏனைய பிள்ளையார் சந்நிதிகளில் ஒரே தினத்தில் முப்பது திருமணங்களை பிள்ளையார் நிறைவேற்றி வைத்தார். கோவில்களில் இடமின்மையால் இல்லங்களிலும், மண்டபங்களில் திருமணங்கள் கைபிடிக்கப்பட்டதையும் தேனீ அவதானித்தது.

## ஐந்தில் கிடையாதது உயர்தரமானாலும் கிடையாதோ?

(கண்டி நிருபர்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்தோருக்கு கிடைக்க வேண்டிய உதவிப் பணம் அவர்கள் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியெய்தியபோதும் கல்வி அமைச்சினால் வழங்கப்படவில்லை. இந்த பாரபட்சம் குறித்து 250க்கும் மேற்பட்ட கடிதங்களை கல்வி அமைச்சுக்கு எழுதியும்கூட பதில் கிட்டாமை வேதனையைத் தருவதாக மத்திய மாகாண முதலமைச்சர் திரு.டபிள்யூ.பீ. திசாநாயக்க மாகாண சபைக் கூட்டத்தின்போது தெரிவித்தார்.

மடவளை மதீனா மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த ஏழைச் சிறார்களுக்கு 1993 ஆண்டு இறுதிவரை 1,50,000/=ரூபா நிதி வழங்கப்படாமல் உதாசீனம் செய்யப்பட்டுவருவதை முதலமைச்சர் அறிவாரா என மாகாண சபை உறுப்பினர் திரு.லால் விஜயநாயக்க (பொ.ஐ.மு) சபையில் கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே முதலமைச்சர் மேற்கண்ட வாறு விளக்கம் கொடுத்தார். புலமைப் பரிசில் பரீட்சை உபகார நிதி மாகாண சபையால் வழங்கப்பட மாட்டாதெனவும் அதற்கு கல்வி அமைச்சே பொறுப்பு எனவும் சுட்டிக்காட்டி இதனை கல்வி அமைச்சர் திரு.ரிச்சட் பத்திரனவுக்கு அறிவிப்பதாகவும் முதலமைச்சர் மேலும் விளக்கம் கொடுத்தார். ●

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# "சந்திரிக்கா ஆட்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

## கைதான மீனவர்களிடம் கடற்படை விசாரிப்பாம்

(வவுனியா நிருபர்)

கடந்தமாத இறுதியில் யாழ்ப்பாணம் கட்டைக்காட்டில் இருந்து காங்கேசன்துறை சென்றுகொண்டிருந்த கடற்படையினர் கடலில் காணப்பட்ட படகொன்றின்மீது தாக்குதல் நடத்தினர். அதில் இரு மீனவர்கள் பலியாகினர் என்று யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

மூன்று மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். விசாரணையின் பின் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தம்மிடம் தகவல் தெரிவிக்கையில், சந்திரிக்காவின் ஆட்சி பற்றிய அபிப்பிராயம் என்னவென்று கடற்படையினர் விசாரித்தனர் என்றும், அதற்கு மீனவர்கள் பதில் சொல்லும்போது, சந்திரிக்கா ஆட்சியில் சமாதானம் ஏற்படும் என்று நம்புவதாக தெரிவித்தனர் என்றும் புலிகளின் குரல் வானொலியில் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மூவரினதும் முகங்களை சாக்கினால் கட்டிய கடற்படையினர், பருத்தித்துறையில் பொருட்களை இறக்கிக்கொண்டிருந்த 'ஹபரணை' கப்பலுக்கு அருகில் போட்டு விட்டுச் சென்றனராம். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் மூன்று மீனவர்களும் காப்பாற்றப்பட்டனர் என்றும் புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது.

## பணிப்பெண்மீது பயங்கர வதை!

## அமெரிக்க நீதிமன்றம் தண்டனை

(ஏ.எல்.எம்.நஜீம்)

அமெரிக்க நாட்டில் இலங்கைப் பணிப்பெண்ணை கொடுமைப்படுத்திய குவைத் நாட்டவர் ஒருவருக்கு அமெரிக்க நீதிமன்றம் சிறைத் தண்டனையும், அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது- இலங்கையைச் சேர்ந்த வசந்தா கெதர (வயது 27) எனும் பணிப்பெண்ணை மாடி வீட்டிலிருந்து எங்கும் போகாமலும், ஒரு நாளைக்கு ஒரு துண்டு பாண் வீதமும் கொடுத்து கொடுமைப் படுத்தி வந்த குவைத் நாட்டைச் சேர்ந்த தலால் அல்ஸாங்கி எனும் 31 வயதையுடைய பட்டதாரி மாணவருக்கு அமெரிக்க மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.ரயா ஸொபல் தண்டனையாக ஒரு வருடமும் ஒரு நாளும் சிறைத் தண்டனையும், 13,415 அமெரிக்க டொலர்கள் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

அமெரிக்க நீதிபதி திரு ரயா ஸொபல் தனது தீர்ப்பில் குற்றவாளியின் இரண்டு வயது மகன் சுகயீனமாக இருப்பதனால் இரண்டு வருட தண்டனையை ஒரு வருடமாக குறைத்ததாகக் கூறினார். கடந்த மார்ச் 14ம் திகதியிலிருந்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அல் ஸாங்கி தான் இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யவிருப்பதாக கூறினார். எனினும் இவர் வீட்டுக் காவலிலேயே இருக்க வேண்டிவரும்.

வாதியின் வழக்கறிஞர் இவ்வழக்கு பற்றி கூறுகையில் இது நவீன கால அடிமைக் கதையாகும் என்று வர்ணித்தார். வீட்டு வேலைகள் அனைத்தையும் பணிப்பெண்மீது திணித்த அல்-ஸாங்கி ஒரு தடவை பணிப்பெண்ணுக்கு பல்வலி ஏற்பட்டும் மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெறக் கூட அனுமதிக்கப்படவில்லை. மேலும் தொலைபேசியில் பேசவோ அல்லது கடிதங்கள் அனுப்பி வைக்கவோ அனுமதிக்கவில்லை என்றும் புகார்களில் கூறப்பட்டது.

## "அக்குறணை ஸாஹிரா" பெண்கள் கல்லூரி

## "தேசியப் பாடசாலை" ஆண்கள் கல்லூரி

(அக்குறணை நிருபர்)

அக்குறணையின் கல்விப் பங்களிப்பிற்கு மிக முக்கியமான கல்விக் கூடங்களாக விளங்குவன அக்குறணை ஸாஹிராக் கல்லூரியும் அக்குறணை அல்-அஸ்ஹர் தேசியப் பாடசாலையுமாகும். கடந்தகாலங்களில்- தேர்தல் சமயங்களில் எல்லாம் முன்னேற்றங் காணாத அக்குறணையின் கல்வி நிலமைகளைப்பற்றியே அதிகமாக வேட்பாளர்களின் கவனம் திரும்பியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. எல்லா அரசியல் மேடைகளிலும் பொ.ஐ.ஐ.மு வேட்பாளர்கள் இக்குறையினை விலா வாரியாக சுட்டிக் காட்டித் தீர்வு காணும் பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இவ்விரு கல்லூரிகளும் தற்பொழுது ஆண்களும் பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து கல்வி கற்கும் கலவன் பாடசாலைகளாகவே இருந்து வருகின்றன.

இந்த முறையை மாற்றி ஸாஹிராக் கல்லூரி புளுகொஹத்தன்னை எனுமிடத்தில் ஒதுக்குப்புறமாக அமைந்திருப்பதால் அதனைப் பெண்கள் பாடசாலையாகவும் தேசியப் பாடசாலையை ஆண்கள் பாடசாலையாகவும் மாற்றியமைத்து இவ்விரு கல்லூரிகளின் தற்போதைய கல்வி மந்த நிலமையை உயர்வுக்குக் கொண்டுவர பரவலான பூர்வாங்க நடவடிக்கைகளை புத்திஜீவிகள் ஒன்று சேர்ந்து ஆரம்பித்துள்ளார்கள். விடயம் காலக்கிரமத்தில் உயர்மட்டப் பேச்சு வார்த்தைகளுக்கான அங்கீகாரத்தைப் பெறவிருக்கிறது.

## சிறப்பாக நடந்த ஒன்றுகூடல்

கொழும்பு பல்கலைக்கழக தமிழ் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் வைபவம் அண்மையில் பல்கலைக்கழக KG மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

தமிழ்பேசும் மாணவர்களின் கலைத் திறமைகளை மட்டுமன்றி, தமிழ்-முஸ்லிம் மாணவர்களிடையே ஒரு புரிந்துணர்வையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தும் விதமாக நிகழ்ச்சிகள் அருமையாக அமைந்திருந்தன.

மேலும் தமிழ் சங்க ஒன்றுகூடலில் சில மாணவர்கள் ஆங்கிலப் பாடல், சிங்கள, இந்திப் பாடல்களையும் பாடியது, மாணவர்களின் பரந்த மனப்பான்மையைக் காட்டுவதாகவே அமைந்தது.

பொதுவாகக் கூறுவதாயின், சட்டபீட மாணவியான செல்வி ரம்யாவின் பாடல் உட்பட எல்லா நிகழ்ச்சிகளும் இரசிக்கும்படியாக அமைந்திருந்தன என்றால் அது மிகையில்லை.

## முஸ்லிம் மாணவர் மத்தியில்

## நபி பிறந்ததின போட்டிகள்

(ஹேவாஹெட்ட நிருபர்)

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம் இம்முறையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தின நினைவாக முஸ்லிம் மாணவர் மத்தியில் போட்டி நிகழ்ச்சிகளை நடாத்த ஒழுங்குகளை செய்துள்ளது.

மத்திய மாகாண முஸ்லிம் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மௌலவி.ஏ.ரஸ்ஸாக் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

பாடசாலை மட்டத்திலும் இறுதியில் மாகாண மட்டத்திலும் நடாத்தப்படவுள்ள இப்போட்டி நிகழ்ச்சிகளில், பேச்சு, இஸ்லாமிய கீதம், எழுத்தணிக்கலை, கவிதை, கஸீதா என்பன அடங்கும்.

மாணவர்களை ஊக்கப்படுத்தி, இந்த போட்டி நிகழ்ச்சிகளில் பயிற்றுவிக்கும் முயற்சிகளில் இப்பகுதி பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் துரிதமாக ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

## "புலிகளால் பாதிக்கப்பட்ட கிராமங்கள்"

## புனரமைக்க அபுதாபியிலிருந்து உதவி

(துபாயிலிருந்து ஏ.எல்.எம்.நயீம்)

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தலைநகரான அபுதாபியிலுள்ள சிறிலங்கா சிங்கள அசோசியேஷன் இளைஞர்கள், புலிகள் இயக்கத்தினரால் பாதிக்கப்பட்ட கிராமங்களை புனரமைக்க உதவ முன்வந்துள்ளனர்.

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. அருண கீத்சிறி கூறுகையில்- "எமது நலன்புரி சங்கம் ஏற்கனவே ஒரு இலட்சம் ரூபா செலவில் 10 வீடுகள் மாதுறு ஓயா பிரதேசத்திலுள்ள போகம்யாய எனும் கிராமத்தில் கட்டுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதுவே எமது முதல் நடவடிக்கையாகும். மேலும் இதுபோன்ற பத்து திட்டங்களை மாதுறு ஓயா பிரதேசத்திலுள்ள தந்திரி மலை எனும் இடத்தில் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளோம்.

"இத் திட்டம் அபுதாபி இயக்கத்தினதும், நெஷனல் ஹீரோஸ் அமைப்பினதும் கூட்டு நடவடிக்கையாக மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நெஷனல் ஹீரோஸ் அமைப்பு கடந்த வருடம் கொல்லப்பட்ட ஆயுதப்படை தளபதி டென்ஸில் கொப்பேகடுவையின் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டதாகும்" என்றார்.

இப்புனரமைப்புக்கான நிதிப்பணம் அண்மையில் எமிரேட்ஸிற்கு வருகை தந்த இலங்கையைச் சேர்ந்த மீகொட பன்னாலோக தேரோவிடம் கையளிக்கப்பட்டது.

## இலக்கியச் செய்திகள் இரண்டு

## "தமிழருவியில் சங்கமித்த நாடகங்கள்"

(எம்.எஸ்)

மொரட்டுவைப் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தமிழருவி' என்ற பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி சமீபத்தில் புதிய கதிரேசன் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மொரட்டுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.ஜி.டி.எஃப்.ரி.சில்வா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மாணவ, மாணவியரின் கடுமையான முயற்சியினால் எல்லா நிகழ்ச்சிகளும் வெகு சிறப்பாகவே அமைந்திருந்தன. இருப்பினும் நிகழ்ச்சியில் இடம்பெற்ற நாடகங்கள் இரண்டும் அனைவரது பாராட்டையும் பெற்றன.

முதலாவதாக இடம்பெற்ற 'எந்தையும் தாயும்' என்ற நாடகம் (ஹெலி+துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்துடன் கூடிய பின்னணி இசையுடன்) ஆரம்பித்தது முதல் இறுதிவரை யாழ்ப்பாணத்தின் நடைமுறைப் பிரச்சினைகளை நகைச்சுவை கலந்து அருமையாகப் படம்பிடித்துக் காட்டியது.

இந்நாடகத்தில், அனைவரும் தத்தமது பாத்திரங்களைத் திறம்படச் செய்த போதிலும், சங்கரப் பிள்ளையாக நடித்த த.முருகதாசும், ஐயாத்துரையாக நடித்த ச.திருக்குமரனும் அசத்தினார்கள். பாராட்டுக்கள்.

அடுத்து இடம்பெற்ற 'புதைமுகங்கள்' என்ற நாடகத்தின் கதை, நெறியாள்கையை இரா.இரவீந்திரன் செய்திருந்தார். (கதை- தொழிலாளர் ஒடுக்குமுறை, புரட்சி பற்றியது) சொல்ல முடியாத ஒரு கதை, சொல்லக் கூடிய வகையில் சொல்லப்பட்டது! ரவியின் நெறியாள்கை 'ஏதோ ஒரு இலக்கை' தொட்டதென்பது உண்மை.

மற்றும் இந்நாடகத்தின் நடிப்பைப் பொறுத்தவரை ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதைப்போல், எல்லா மாணவர்களும் அருமையாகச் செய்தனர். பாராட்டுக்கள்...சுருக்கமாகச் சொன்னால் தமிழருவி தேனருவியாய் இனித்தது!

## இந்து மாணவர் சங்க ஆண்டுமலர்

(ஹேவாஹெட்ட நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் அதன் ஆண்டு மலரான 'இந்து தருமம்' எனும் மலரை விரைவில் வெளியிடவுள்ளது.

'இந்து மதம் காட்டும் ஆன்மீக வழி' என்பதே இந்த ஆண்டு மலரின் பிரதான கருப்பொருளாகும் என்று இந்து மாணவர் சங்கம் தெரிவிக்கின்றது.

இந்த பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர் கலாநிதி இ.சிவகணேசனின் தலைமைத்துவத்தின் கீழ் இந்து மாணவர் சங்கம் இந்த மலர் வெளியீட்டுக்கான ஏற்பாடுகளில் தற்சமயம் ஈடுபட்டுள்ளது.

இந்த மலருக்கான பல்கலைக்கழக பல பீடங்களையும் சேர்ந்த இந்து மாணவர்களிடத்தில் துணுக்குகள், கட்டுரைகள் முதலான ஆக்கங்களை வரவேற்பதாகவும், தரமான மூன்று ஆக்கங்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கப்போவதாகவும் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் அறிவித்தல் விடுத்துள்ளது.

## திடீர் சுகாதார வேட்டை

திருக்கோவில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களது பிரிவுக்குட்பட்ட திருக்கோவில்- தம்பிலுவில் ஆகிய பகுதிகளில் திடீர்ச் சுகாதாரப் பரிசோதனையொன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இச் சுகாதார வேட்டையில் திருக்கோவில்/ஆலையடி வேம்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு.எம்.தேவராஜன், பொத்துவில் பிரதேசப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜனாப்.எம்.எஸ். எம்.அப்துல் மலிக், திருக்கோயில் பொ.சு.ப திரு.ரீ. ராஜசேகர, அக்கரைப்பற்று பொ.சு.ப திரு.பீ.பேரம்பலம் ஆகியோர் கொண்ட குழுவினரே ஈடுபட்டனர். ஹோட்டல், தேனீர்க்கடை, சாப்பாட்டுக்கடை, சில்லறைக் கடை சர்பத்கடை, ஐஸ்கடை, பேக்கரிகள் ஆகியன திடீர் பரிசோதனைக் குட்படுத்தப் பட்டன. இதன்போது பழுதடைந்த பால்மா பக்கட்டுக்கள் 50, பப்படம் பக்கட் 25, கோப்பிடின் 100, பணிஸ், பாண், வடை, பூந்தி, றோஸ்பாண் ஆகியன கைப்பற்றப்பட்டு உடனடியாக பொது மக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

## அதிகாரிக்கு நன்றி


புகார் பெட்டி விடயங்கள் புறக்கணிக்கப்படாது கவனிக்கப்படுவது கண்டு களிப்படைகிறேன்.

இந்த வகையில் சென்ற வாரம் புகார் பெட்டி பகுதியில் பாவனைக்கு உதவாத இறைச்சி என்ற தலைப்பை தாங்கி வந்த- என்னால் அனுப்பப்பட்ட செய்தி சம்பந்தப்பட்ட அதிகாரியை சம்மட்டி கொண்டு அடித்தது போலும்.

உரிய அதிகாரி உடன் நடவடிக்கை எடுப்பதாக எமதில்லம் வந்து எடுத்துரைத்தார். இதனால் முரசுக்கு முதற்கண் பாராட்டு- அதிகாரிக்கு அதன் மூலம் பாராட்டு.

எம்.சி.கலீல்-கல்முனை-05.


விளம்பரப் பகுதி



மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

தலைமைப்பீடம்
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3039

கொழும்பு இல்லம்-
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



நவராத்திரி கொலு பொம்மைகள்!
மாபெரும் தள்ளுபடி விற்பனை!!

நவராத்திரிக்கு வேண்டிய கொலு பொம்மைகள் அனைத்தையும் விஷேட தள்ளுபடி விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

நளினி ஸ்டோர்ஸ்
70, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி: 435492

* மொத்த வியாபாரிகளுக்கு விஷேச கழிவு.
* எங்களிடம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கோவில்களுக்கு வேண்டிய விக்கிரகங்கள், திருவாச்சி, குடை, தீபவகைகள், பித்தளை மணி, தூய்மையான கவரிமான் முடியில் செய்த வெஞ்சாமரை, பித்தளை மற்றும் எவர்சில்வர் பொருட்கள்.
* பரத நாட்டிய அணிகலன்கள்,
* என்றென்றும் உங்கள் எண்ணங்களில் மறவா வர்ணப் படங்களை அழகிய முறையில் பிறேமிங் செய்து கொள்ள,
* கவரிங் அணிகலன்கள்.
* ஹொங்கொங்கிலிருந்து தருவிக்கப்பட்ட சிலைட் வகைகள் மற்றும் லிப்ஸ்ரிக், கியூடெக்ஸ், பொட்டு, மஞ்சல் வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

எமது விசேட நவராத்திரி கொலு பொம்மை காட்சியறை (Show Room) மற்றும் விற்பனை கூடத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

நளினி பிக்சர் பெலஸ்
இல.102, செட்டியார் தெரு,
கொழும்பு-11
தொ.பேசி: 329065

நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 440/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 225/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 115/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 P.O.BOX: 1772
கொழும்பு COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வீடியோ படப்பிடிப்பில் முன்னணி நிறுவனம்

VICTOP RECORDING STUDIO
356, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO-6

இல.358, J.T. Complex இல் வெகுவிரைவில் எமது நிறுவனத்தால் புதிய ஸ்ரூடியோ ஒன்று திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் எமது அன்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

அதுமட்டுமல்ல, மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த வீடியோ கமராக்களில் பதிவுசெய்வதோடு, ஸ்டில் புகைப்படங்களையும் சிறந்த முறையில் எடுத்துத் தருவோம்.


மற்றும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு தேவையான அலங்காரப் பொருட்கள் (மேக்கப் செற்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
* T.V.–டெக் வாடகைக்கு
* 24 மணி நேரம் குளிரூட்டப்பட்ட எயர்போட்டிற்கான வான் சேவீஸ்.

உங்கள் மின்சார உபகரணங்கள் பழுதடைந்துவிட்டதா? 592453, 078 69749 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் இல்லத்தில் உங்கள் கண்முன் திருத்தித் தரப்படும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**வடக்கு–கிழக்கு தமிழ்பேசும் மக்களது தாயகம்! அதிகாரத்திற்கு வந்தவர்களோ, வரக்கூடியவர்களோ அதனை பகிரங்கமாக ஏற்கத் தயங்குவது ஏன்?**




## நாரதர்

பெடுக்கும்.

இனவிரோதம் என்பது ஒரு சிக்கலான விவகாரம்.

இனங்களின் சமத்துவத்தை பேணும் ஜனநாயக ரீதியிலான தீர்வு மற்றும் நிர்வாக முறைகளால் எந்தவொரு இனமும் பாதிக்கப்படாமல் இருக்கும் ஏற்பாட்டை செய்ய முடியும்.

அப்படி ஒரு ஏற்பாடு உள்ளபோதும் இன உணர்வுகள் இனவாதமாக மாறக் கூடும். ஆனால் பாதுகாப்பான ஏற்பாடுகள் உள்ள போது எந்தவொரு இனமும் அதனால் பாதிக்கப்படாத தன்மையைப்

# போரை நிறுத்தும் கடிவாளம் யாரிடம்?

ஆரம்பத்தில் அனைத்துமே இனிப்பாகவும், சுலபமாகவும் வெளியே தெரிந்தது போல உண்மையாகவே நிலமை இல்லை.

17 வருட ஒரே கட்சி ஆட்சி முடிந்ததும், புதிய பிரதமர் வருகையும் சூழல் பற்றிய சுலபமான மதிப்பீடுகளுக்கு இடமளித்து விட்டது.

ஆட்சி மாற்றத்தோடு எல்லாமே தலைகீழாக மாறிவிடும்-என்று எதிர்பார்த்தவர்கள் நாட்டின் நிலவரத்தை சரியாக கணிப்பிடத் தவறிவிட்டார்கள்.

ஒரு சந்திரிக்காவோ அல்லது இன்னொருவரோ உடனடியாக சகலவற்றையும் மாற்றியமைக்க முடியும் என்று எதிர்பார்ப்பது எத்தனை பெரிய தவறு.

இலங்கை சுதந்திரம் அடைந்த 1948ம் ஆண்டு தொடக்கம் மெல்ல உருவாகி வளர்ந்து, தீவிரம் பெற்றுள்ள இனப்பிரச்சனையை ஒரே ஒரு தனிநபர், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற பாணியில் ஒரே இரவிலோ, அல்லது ஒரே மாதத்திலோ தீர்க்க முடியுமா என்ன?

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா அறிவித்த சம்பள உயர்வை வேண்டுமானால் புதிய அரசாங்கம் தடுத்து வைக்கலாம்; நிறுத்திவிடலாம்; நிராகரிக்கலாம்.

பாண் விலையையும் குறைக்கலாம். இனப்பிரச்சனையும், போரும் பாண் விவகாரம் போன்றதல்ல.

இனவாதம் தனி நபர்களால்தான் தூண்டப்பட்டது. அந்த மதிப்புக்குரிய தனிநபர்களில் திருமதி சந்திரிக்காவின் தந்தையும் அடக்கம். தாயாருக்கும் அந்தப் 'பெருமை' சேரும்.

இனவாதத்தை உருவாக்குவது சுலபம். கவர்ச்சிகரமான சில கோசங்கள் கைவசம் இருந்தால் போதும்.

"24 மணிநேரத்தில் தனிச் சிங்கள சட்டத்தை கொண்டுவருவேன்!" என்று அமரர் பண்டாரநாயக்கா பேசிய அப்பட்டமான அரசியல் சுயநல கோசம் மாதிரி சில கோசங்கள் தேவைப்படும்.

அவ்வளவுதான்-நெருப்பு பற்றிக் கொள்ளும். பிறகுதான் வம்பு. வளர்த்துவிட்டவர்கள்கூட அந்த நெருப்பை அணைக்க நினைத்தாலும் முடியாது.

அமரர் பண்டாரநாயக்கா - தந்தை செல்வாவோடு ஒப்பந்தம் செய்தபோது அவர் வளர்த்துவிட்ட இனவாதமே அவருக்கு எதிராக திருப்பப்பட்டது.

திருப்பிவிட்டவர் பின்னாளின் அதிஉத்தமர் ஜே.ஆர்.ஜயவர்த்தனா.

ஜே.ஆருக்கு ஒன்றும் தமிழ் பேசும் மக்கள்மீது கோபம் கிடையாது.

அவருக்கு-அவரது அரசியல் வளர்ச்சிக்கு உரம் தேவைப்பட்டது. இனவாத உரம் சுலபமாக கிடைத்தபோது எடுத்துப் பயன்படுத்திக்கொண்டார்.

ஆனால்-அதே ஜே.ஆர். பின்னர் அதிகாரத்திற்கு வந்தபோது ஊரடங்கு உத்தரவு போட்டுவிட்டுத்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைக் கொண்டுவர வேண்டியிருந்தது.

தனிமனிதர்கள்-மிகச் சிறந்த புத்திசாலித்தனமான தனிமனிதர்கள் தம் காலகட்டத்தில் உள்ள நிலவரங்களைப் புரிந்து கொள்கிறார்கள். ஆராய்ந்து அறிந்து கொள்கிறார்கள். அதிலே சிலர் தம்க்குள்ள பங்கைப் புரிந்துகொண்டு நடவடிக்கைகளில் இறங்குகிறார்கள்.

அவர்களது கருத்துக்கள்-நடவடிக்கைகள் அந்தக் காலகட்டத்தில் மக்களிடம் மதிப்புப் பெறுமானால் குறிப்பிட்ட தனிநபர்களால் செல்வாக்குப் பெறமுடிகிறது. அந்தச் செல்வாக்கின் மூலம் சாதனைகளையும் படைக்க முடிகிறது.

தமது காலத்தில் வாழும் ஏனையோரை விட, முன்கூட்டியே புத்திசாலித்தனத்தோடு சூழலைப் புரிந்து செயல்படுவது ஒன்றே சிறந்த தனிநபர்களுக்குரிய தனித்துவமாகிறது.

ஆனால் மக்கள் ஆதரவும், சூழலுக்கு ஏற்ற கருத்தும் இல்லாது போனால், ஒரு தனிநபர் தான் வாழும் காலகட்டத்தில் தனித்துவமான-தாக்கம் செலுத்தும் தலைவராக முடியாது.

அமரர் பண்டாரநாயக்கா, திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா போன்றவர்கள் சிறந்த புத்திசாலித்தனமான தனிநபர்கள்தான்.

ஆனால்-ஒரு மிகப் பெரும் தவறு செய்தார்கள்.

நாட்டின் சூழலை செழுமைப்படுத்தி முன்கொண்டு செல்வதற்குப் பதிலாக, தம் அரசியல் நலன்களுக்கு ஏற்றவகையில் பயன்படுத்த நினைத்தார்கள்.

கொஞ்சம் பொறுமையாக யோசித்து அரசியல்- பொருளாதார கொள்கைகளை வகுத்து தேர்தலில் முன்வைக்காமல், இனவாதத்தை சுலபமாகத் தூக்கி முன் வைத்துவிட்டார்கள்.

தாமே வளர்த்து அவிழ்த்துவிட்ட கடாய்களை அவர்களாலும் பின்னர் கட்டுப்படுத்த முடியாமல் போனதுதான் உண்மை.

அமரர் பண்டாவும், திரு.ஜே.ஆரும் தமது அதிகார இறுதிக் காலங்களில் இனப்பிரச்சனையை தீர்க்க விரும்பியிருக்கக்கூடும்.

ஆனால், அவர்கள் தமக்காக விரும்பி வளர்த்துவிட்டு விசுவரூபமாகிவிட்ட இனவாதம் அவர்களை முன்னே கால் எடுத்து வைக்க அனுமதிக்கவில்லை.

ஆனால்-ஜே.ஆர். இந்திய- இலங்கை ஒப்பந்தம் மூலம் சில அடிகளை முன்னே எடுத்து வைத்திருந்தார்.

என்றாலும், அப்போது-ஜே.ஆர். ஜெயவர்த்தனா என்ன கூறியிருந்தார் என்றால், எமது இளைஞர்கள் (சிங்கள) வடக்கே சென்று போரிட்டு சாகாமல் தடுத்திருக்கிறேன். இந்தியப் படையில் எத்தனைபேர் பலியாகிவிட்டனர் பாருங்கள். ஆக, நான் சிங்கள இளைஞர்களைக் காத்து, இந்தியப் படை மூலமாக புலிகளை ஒடுக்கி வருகிறேன். இழப்பில்லா வெற்றியல்லவா இது!" என்பது மாதிரியான தொனியில் பேசினார்.

சிங்கள மக்களது நலனை காப்பவராக தன்னைக் காட்டிக்கொள்ளவே அவ்வாறான பேச்சு.

சிங்கள மக்களின் எதிர்ப்பை தணிக்கவே "வடக்கு-கிழக்கு இணைப்புக்கு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு" என்ற விடயத்தை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்தார்கள்.

**வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது தாயகம்.**

அது ஒன்றுபட்டிருப்பது சிங்கள மக்களை பாதிக்கும் விசயமல்ல. சிங்கள மக்களது உரிமைகளில் எதனையும் பிடுங்கும் விவகாரமுமல்ல.

ஆனால்-இந்த நாட்டிலே அதிகாரத்தில் இருக்கின்ற, அல்லது அதிகாரத்திற்கு வரக்கூடிய எந்தவொரு சிங்கள அரசியல் தலைவரும் வடக்கு-கிழக்கு இணைந்துதான் இருக்கும்; இருந்தபடியே இருக்கட்டும் என்று பேசமுடியாது இருக்கிறதே ஏன்?



"வடக்கு-கிழக்கு மட்டுமல்ல முழு நாடுமே சிங்கள மக்களுக்கு சொந்தம்."

"தமிழர்களுக்கு இந்தியா இருக்கிறது. நமக்கு இந்தநாடு மட்டும்தானே இருக்கிறது."

"விடாதே பிடி" என்றெல்லாம் பிரசாரம் செய்யப்பட்டது.

அதன் தீவிரத் தொடர்ச்சியாக கிழக்கிலே சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன.

குடியேற்றத்திட்ட விடயத்திலே ஐக்கிய தேசியக்கட்சிக்கு உள்ள பங்கு தனிச் சிறப்பு வாய்ந்தது. அதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அதில் விருப்பமில்லை என்று அர்த்தமாகாது.

இவ்வாறு வடக்கு-கிழக்கும் சிங்கள மக்களுக்குரியதே என்று செய்யப்பட்ட பிரசாரங்கள்தான், இன்று வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வு என்றவுடன் சிங்கள மக்களை சந்தேகம் கொள்ளவைக்கிறது.

வடக்கு-கிழக்கிலே தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டிருந்தால் நாடு பிரிந்ததற்கு அது சமனாகிவிடும் என்று சிங்கள சாதாரண மக்கள் நினைக்கிறார்கள். அதாவது தொடர்ச்சியான இனவாதப் பிரசாரத்தால் அப்படி நினைக்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

**வடக்கு+கிழக்கு= தனிநாடு** என்பதுதான் இனவாத சூத்திரம் உருவாக்கியுள்ள தப்புக் கணக்கு.

தமிழ் பேசும் மக்களது பிரச்சனை தீரவேண்டும் என்று நினைக்கும் சிங்கள மக்களில் ஒரு பகுதியினர், "பிரச்சனை தீரத்தான் வேண்டும் ஆனால் தமிழ் பேசும் மக்களது தாயகம் கீயகம் என்று எதுவும் ஏற்கப்படக்கூடாது" என்றுதான் நினைக்கிறார்கள்.

எனவேதான்-இன்றுவரை பிரதமர் சந்திரிக்காகூட வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றியோ-பிரிப்புப் பற்றியோ தெளிவாக-பகிரங்கமாக எதனையும் கூறவில்லை.

ஆனால்,திருமதி சந்திரிக்காவுக்கு வடக்கு-கிழக்கு தற்போதுள்ள மாதிரியே இணைந்திருப்பதையிட்டு தனிப்பட்ட ரீதியில் எந்த ஆட்சேபனையும் கிடையாது என்றே தோன்றுகிறது.

தமிழ் பேசும் மக்களை பிரித்துவைத்திருக்க விரும்பவும் பழமையான சிந்தனை முறைகளை அவர் நாடுகிறவருமல்ல.

ஆனால்-ஏற்கனவே உருவாகியுள்ள-உருவாக்கப்பட்டுள்ள சூழல் அவரையும் அச்சுறுத்துகிறது.

இனவாதமே இன்றைய பின்னடைவுக்குக் காரணம். வடக்கு-கிழக்கில் தொடரும் போரால் பொருளாதார நாசமே தவிர நாட்டுக்கு நன்மை ஏதுமில்லை. இனவாதத்தால் மோதுவது தற்கால நாகரிகத்தை அவமதிப்பது போன்ற விசயம்தான் என்னும் புதிய சிந்தனை மரபு பிரதமர் சந்திரிக்காவிடம் காணப்படுவதை மறுக்கவியலாது.

ஆனால் தன் மனதில் உள்ளதையெல்லாம் ஒரு சாதாரண மனுஷிபோல திருமதி சந்திரிக்காவால் வெளியே பேசிவிட முடியாது.

ஏனெனில்-அரசியலில் சில சமயங்களில் உள்ளதை உள்ளபடியே பேசுவது ஆபத்தாகி விடுவதுண்டு.

வடக்கு-கிழக்கு இணைந்தே இருக்கட்டும் என்று இன்று பிரதமர் பேசுவாரேயானால் எதிரணி துள்ளியெழுந்துகொள்ளும். சில சமயம் அவரையே தூக்கியெறியும் பலமும் பெற்றுவிடும் என்பதுதான் சூழல்.

இந்தச் சூழலுக்கு திருமதி சந்திரிக்கா காரணமல்ல என்பது உண்மைதான். ஆனால்-இந்தச் சூழலை எதிர்த்துப் போராடும் முழுமையான பலத்தை தனி ஒரு மனுஷியாக நின்று அவரால் பெற முடியாது.

பொதுஜன முன்னணிக்கு விழுந்த அனைத்து வாக்குகளும் இனவாதத்திற்கு எதிரானவை என்று ஒரேயடியாகக் கூறிவிடமுடியாது.

இன்னொரு விடயமும் இருக்கிறது. இன உணர்வு என்பது மனம் சம்பந்தப்பட்ட விடயம்.

வீதியில் ஏற்படும் ஒரு சிறு மோதலில் கூட இனவாதம் தலையெடுக்கும்.

ஒரு சிங்களவரும்-தமிழரும் தனிப்பட்ட விவகாரத்தில் கைகலந்துகொண்டால்கூட அது இனவாதமாக மாற்றப்படலாம். 'தமிழன் அடிக்கிறான் பாருங்கள்' என்று குரல் கொடுத்தால் அனுதாபம் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதுபோல தமிழ் பேசுவோர் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் 'சிங்களவர்' ஒருவருக்கு எதிராகவும் அவ்வாறான இன உணர்வு தலை

பேணலாம்.

அதைவிடுத்து இனவாதம் ஒழிந்தது என்று தீர்வுக்கு முன்னரே திட்டவட்டமான முடிவுக்கு வரமுடியாது.

ஆனால், தமிழ் பேசும் மக்களுக்கு பிரச்சனை உண்டு. அதற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று பேசுவதை அனுமதிக்குமளவுக்கு- ஆதரிக்குமளவுக்கு இனவாதம் தணிந்துள்ளது; தளர்வு காட்டியிருக்கிறது.

அதேசமயம்-வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது தாயகம் என்ற கோட்பாட்டை ஏற்கமுடியாதளவுக்கு, அவ்வாறான தீர்வுக்கு அரசாங்கம் உடனடியாக வந்தால் நிலமை சங்கடமாகும் என்று கருதுமளவுக்கு காரணமாக இருப்பதும் இனவாதம்தான் என்பதை மறுக்க முடியாது.

வடிவங்கள், வெளிப்படும் முறைகள் மாறுபட்டாலும் இனவாதத்தின் அடிப்படை இன்னமும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையைத்தான் புதிய அரசாங்கமும், பிரதமர் சந்திரிக்காவும் எதிர்கொண்டுள்ளனர்.

சுருக்கமாகச் சொல்வதானால் நமது அரசியல் முன்னோர்கள் உருவாக்கி விட்டுச் சென்ற கேடுகெட்ட மிச்ச சொச்சங்களை சுத்தமாக துடைத்தழிக்க ஒரு கடினமான போராட்டம் அவசியப்படுகிறது.

இந்தப் போராட்டத்தில் தலைமை ஏற்கும் சக்தி பிரதமருக்கு இருக்கிறது. தகுதியும் இருக்கிறது. தமது தந்தையாரும், தாயாரும் செய்த தவறுகளுக்கு பரிகாரம் தேடும் பொறுப்புள்ள கடமையும் பிரதமருக்கு இருக்கிறது.

அதனை அவர் உணர்ந்துள்ளார் என்பதும் உண்மை.

ஆனால்-அவர் மட்டுமே தனித்து நின்றோ, அல்லது பொது ஜன முன்னணியில் உள்ள அவரது நம்பிக்கைக்குரிய சகாக்களுடன் இணைந்தோ மட்டும் இந்தப் போராட்டத்தில் வெற்றிபெற முடியாது.

திருமதி சந்திரிக்கா பற்றிய அதீதமான கணிப்பீடுகளை உருவாக்கும் விமர்சகர்கள் இதனைப் புரிந்துகொள்வதில்லை.

அந்த விமர்சகர்கள், பிரதமர் சந்திரிக்கா தம்மை கவனிக்கவேண்டும் என்பதற்காக "எல்லோரும் பிரதமரைக் கவனியுங்கள். அவர் சகலமும் வல்லவர்" என்று உரத்துச் சொல்லுகிறார்கள்.

சூழலை கவனிக்க விடுகிறார்கள் இல்லை. இதன்மூலம் பிரதமர் சந்திரிக்காவை அவர்கள் தர்மசங்கடமான நிலையில் தள்ளுகிறார்கள்.

எங்காவது புலிகள் தாக்கிவிட்டால் உடனே "சந்திரிக்காவாலும் தடுக்க முடியவில்லையே?" என்று பேசப்படும் நிலையையும்,

படைகள் தாக்கினால் "சந்திரிக்காவும் அனுமதிக்கிறாரே" என்று பேசும் நிலையும் உருவாகிறது என்றால் யார் காரணம்?

எல்லாமே சந்திரிக்கா எனனும் பிரசாரத்தில் ஈடுபட்டு, அவருக்கு வெளியே நிலவும் சூழலை மக்கள் அறியாமல் தடுக்கின்! -

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



தனித்துவ கட்சியின் துணைத் தலைவர் இணை ஆசிரியராகியே தீருவேன் என்று ஒற்றைக்காலில் நிற்கிறாராம். விசயமறிந்தது முதல் சம்பந்தப்பட்ட பத்திரிகை வட்டாரத்திலை ஒரே முணு முணுப்பாம். இணைத்தலைவர் யார் என்று அறிய ஆவலோ? கிழக்கு மாகாணத்திலை கல்முனையிலை உள்ள ஒரு ஊரின் பெயரோடை பழத்தின் மறு பெயரைச் சேர்த்துப் பாருங்கோ. அவர் பெயர் வரும்.

இந்தியாவில் பம்பாயிலை 'பிளேக்' நோய் பரவின செய்தியறிஞ்ச உடனை தமிழ்நாடு- சென்னையில் உள்ள துணிவியாபாரக் கடைகளிலை பட்டுச் சேலைகள் மாயமாகிப்போச்சுதாம். 'பிளேக் நோய்க்கும் பட்டுச் சேலைக்கும் என்ன சம்பந்தம் அய்யாத்துரை' எண்டு கேப்பியள். கதையைக் கேளுங்கோ, பம்பாயிலை சூரத் நகரிலை இருந்துதான் பட்டுச்சேலைக்குரிய சரிகை இறக்குமதியாகிறது. சூரத்திலை பிளேக். தீபாவளியோ கிட்டமுட்ட வருகுது. அதாலை பட்டென்று பதுக்கியாச்சு. பதுக்கினாத்தானே விலை ஏறும். பார்த்தியளோ, கொள்ளை நோய் வந்ததாலை வியாபாரிகள் சிலருக்கு கொள்ளை லாபம்!

பி.பி.சிக்கு மட்டும்தான் ரெண்டு எழுத்து தலைவர் பேட்டி கொடுத்தவர் எண்டு தெரியும்தானே? பலர் காத்திருந்தும் பார்க்க மறுத்துப்போட்டார். "இந்தியா இன்று" என்பதை ஆங்கிலத்தில் சொல்லிப் பாருங்கோ. அந்த பத்திரிகை ஆசிரியர் ரெண்டு எழுத்தாரிடம் "எங்கள் தலைவரை ஏன் முடிச்சனீங்கள்?" எண்டு கேட்க, ரெண்டு எழுத்தார் மறுக்க, அவவும் விடாமல் "ஆதாரம் இருக்கு" எண்டு சொல்ல பெரிய இழுபறியாப் போச்சாம். அதையெல்லாம் அறிஞ்சுதான் தலைவர் நேரடியாக சந்திக்கிறதை தள்ளிப் போட்டாராம்.

கொழும்பிலை நல்ல இடியோடு கூடிய மழை. யாழ்ப்பாணத் திலை இருந்து வந்த மூண்டு வயதுக் குழந்தை ஒண்டு, இடியைக் கேட்டு சொன்ன கொமன்ற்ஸ், "பலாலியிலை இருந்து சரியான ஷெல் அடி நடக்குது." பிஞ்சிலேயே பதிவாகும் எண்ணங்கள்.

## அதிரடி அய்யாத்துரை

கனடாவிலையும் போய் 'ஆக்சன் கிங்' விளையாட்டுக் காட்டின எங்கடை பொடியள் கொஞ்சப்பேரை திருப்பி அனுப்பிற யோசனை இருக்குதாம். விசயம் காதிலை விழுந்தவுடனை 'விலாசங்கள்' சிலர் சற்று அடக்க ஒடுக்கமாகிப்போட்டினம் எண்டு கேள்வி.

சிக பத்திரிகை ஒன்றில் வெளிவரும் விடயம் ஒன்றை தடுக்க சிலர் 'எழிய' வேலை செய்யினமாம். அப்படித்தடுக்க நினைக்கிறவை பிழை தானுங்கோ. ஆனால் ஒண்டு, சம்பந்தப்பட்ட விசயத்தை எழுதுறது மேல் உள்ள அதிகாரமான ஆள் என்பது மட்டும் போட்டோஸ்ரற் மூலமான ஆதார உண்மையுங்கோ. ஒண்டாயிருந்து ஒரே குட்டையில் ஊறி அனுபவப்பட்டவை காத்து மாறேக்கை தங்களுக்கை அடிபடுறதை ரசிக்கிறது ஒரு சுகமல்லோ. எப்பிடி என்ரை கோணம்?! அது சரி அதிகாரம் உள்ள ஆக்களைப் பற்றி மட்டும் குருநாதரின் கருத்து சுதந்திரம் ஏன் துடிக்குதில்லையாம்? துடிக்கட்டும் பார்ப்பம். சத்தியமா தோள் கொடுப்பம்.

'பிளேக்' நோய் சங்கதியோடை வந்த ஒரு பகிடி. சில வாரங்களுக்குமுன் பம்பாயிலை விநாயகர் சதுர்த்தி அமர்களமா நடந்தது. அதைக் கொண்டாடின அதே வீதியிலைதான் இப்ப எலி வேட்டை நடக்குது. அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் எண்டு கேட்டா நீங்கள் டியூப்லைட்! விநாயகரின் வாகனமல்லோ எலி.

போக்குவரத்துக்கு ரெண்டு எழுத்தார் தாராள அனுமதி எண்டு யாரோ செய்தி போட்டவையல்லோ. ஏற்கனவே வழங்கிய அனுமதியையும் ரெண்டு எழுத்தார் 'திலீபனுக்காக' ஒரு பத்துநாள் தடுத்து வைச்சதுதான் நடந்த கதை. 'பிளேக்' நோயை தடுத்தாலும் வதந்தியளை தடுக்கேலாது பாருங்கோ.

'பாட்டா'வாலை (செருப்பு) அடிக்கிறது இந்தக்காலம். பாட்டாவை அடிக்கிறது அந்தக்காலம். இதோ ஒரு நாட்டுப்பாட்டு.

அவன்: "மார்பளவு தண்ணியில
மன்னி-மன்னிப் போற புள்ள-உன்
மார்மேல் இருக்கும் அந்த
மாதுளங்காய் என்ன விலை?

அவள்: "மாதுளங் காயுமில்ல
மருக்காலம் பிஞ்சுமல்ல-என்
பாலன் பால் குடிக்கும்
பால் முலைடா சண்டாளா!"

அடியைப் பார்த்தியளோ. பாட்டுள்ளபோது 'பாட்டா' எதற்கு?

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

அதிரடி அய்யாத்துரையாருக்கு கொச்சிக்காய்ப் போடியார் மடல்.........

# அண்ணே! அரசியல்-கிரசியல் ஒண்டும் விளங்காமக் கிடக்கு!

இலக்சன் ஒஞ்ச புதினத்தில இருந்த நான். இஞ்சாருங்கோ- அண்ண சனாதிபதி இலக்சனும் வரப் போகுதாம் எண்டு- சீனிப் போடியார் காதுக்குள்ள ஊதிற்றுப் போறாரு. இதென்னடா புதினம்- சும்மா கிடக்க வழியில்ல. நமக்கென்ன வாறதப் பாப்பம். எத்தின இலக்சன் வந்தாலும் இந்தப் போடிய அசைக்க முடியாது.

நம்மட பக்கத்தில எல்லாம் அரசியல் கிரசியல் ஒண்டும் விளங்காமக் கிடக்கு. இலக்சனில கூட்டணி எண்டும், யு.என்.பி. எண்டும், பிஏ எண்டும் திரிஞ்சவ. இப்ப என்னடா எண்டா எல்லாரும் கூட்டணி- எம்பிர காலில விழுந்திட்டானுகளாம். அதால மாத்தம் கீத்தம் நடக்க மாட்டா எண்ட எக்களிப்பில கிடக்காங்க. பொம்பிள பள்ளியொண்டுக்குள்ள படிப்பிக்கிற ரெண்டொரு பொண்டுகளும் இலக்சனுக்கு முன்ன பச்சை கிச்ச எண்டு கதைச்சவையளாம். இப்ப என்னடா எண்டா- நாங்களும்தான் எண்டு கொண்டாடுறாங்களாம். கிடந்தா கிடக்கட்டும் கிழவியையும் என்னையும் உள்ள விடு எண்ட கததான்.

கால போக வெள்ளாமையும் வெட்டித்தாங்க. கரவாகு வட்ட கண்டத்திலயும் நல்ல விளைச்சல். எப்பதான் அங்க விளைச்சல் இல்லாமப் போன? வெட்டுக்கள்ளன் மழவந்து நனைஞ்சத்தில அஞ்சாறு போடிமாருக்கு சவுப்புத்தான். வெட்டுக்குள்ள மழ பொடு பொடுத்தா, அங்கால தள்ளு. கிடந்த பாயும் சீலம்பாயுந்தான். என்ன செய்யிற ஒருமாதிரி வெட்டிக் கிட்டி முடிச்சிப் போட்டாங்க.

வெட்டோட- அரிசிக்கும் விலை இறங்கித்து. நம்மட பிரதமர், பாணுக்கும் விலைய குறைச்சதால- களவெட்டியில எல்லாம்- நம்மட பாணுக்கு நல்ல சப்போட். இப்ப இங்காலப் பக்கத்து ஊடுகளில எல்லாம் பாணுக்கும், ஜேமுக்கும் நல்ல பொருத்தம் நடக்குது.

வாறதும்-மார்கழிப் பவ்வல் அண்ண. எங்கயும் இப்ப நல்ல மலிவு. பஞ்சம் கிஞ்சம் வரமாட்டா போல எண்டு- நம்மட பணிக்கருர பரசுராமப் போடி சொல்லித்துப் போறாரு.

நம்மட-பொக்கட்டு அண்ணன்ர- மூத்தவன்- முண்டாப்போடி கொஞ்சம் மனம் உடைஞ்சி போறாரு. கொஞ்சம் போட்டிற்ராரு போல. கண கணப்பா இருந்தாரு. என்னவாம் எண்டு கேட்டன். இந்த நெல்லுக் கொட்டைக்கும் விலையக் காணல்ல. எண்டாலும் பட்டறயில போட்டு வச்சி, வாறமாதம் நல்ல விலைக்கு விக்கலாம் எண்டு சொல்லித்துப் போறாரு.

அண்ண புதினத்த கேட்டயளோ- நம்மட படுவான் கரையில காலுக்கொண்டு, கைக்கொண்டு எண்டு எத்தின கலியாணம்! அங்க கிடந்த ஆம்பிளப் புள்ளயளுக்கும், குமருகளுக்கும்- காலங்காலத்தோட கைப் புடிச்சி வைச்சிப் போட்டாங்க, ஊரில உள்ள பெரிய ஆக்கள். கலியாணத்துக்குப் போய்- எம்பலப்பு நீட்டினதில எண்ட கை அறுந்து போன பருவம். என்னெண்டாலும் ஐம்பது ரூபாய்க்கு குறைய குடுத்திக்கையும் ஒண்ணா. மானம் மரியாதையும் பாக்கவேணும் தானே.

வாழைச்சேனைக்குள்ள- ஒரு கலியாணம் உலைஞ்சி போயித்தாம் எண்டு நம்மட நாசிவன்தீவு நமசிவாய அண்ணன் சொன்னாரு. கேக்கும் செய்ததாம். அதுக் கிடையால வேறாரோ- கூடச் சீதனத்த குடுத்ததால மாப்பிள்ள அந்தப் பக்கம்- சாஞ்சித்தாராம். கலியாணம் உலஞ்சி போனா அதப்போல சீர்கேடு ஒண்டுமில்ல.

போன கிழம- நம்மட சுகாதார மந்திரியும், நம்மட ஊருக்கு வந்து போன மாதிரி. மனுஷன், ஒரு மந்திரியும் செய்யாத வேலை ஒண்டச் செய்தாரு. ஆக்கள் ஒருவருர சொல்லையும் கேட்கல்ல. வாட்டுக்குள்ள எல்லாம் பூந்து புறப்பட்டு பாத்துப் போட்டாரு. ஆசுபத்திரி ஆக்கள் செய்யிற கிருத்தியங்களையெல்லாம் இப்பிடித்தான் பாக்க வேணுமெண்டு, கத்தாக்கு மரத்துக்குக் கீழ கூடுற கனவான்கள் கதைக்காங்க.

நம்மட மேயர், ஆக்கள், கீக்களெல்லாம் கனதியா நிண்டு மால மரியாத செஞ்சி வரவேற்றாங்க. மந்திரியும் தமிழர் கூட்டணி எம்.பிமாரு மொய்க்க வந்து இறங்கினாரு. இவையளும் கதிரைக்கு சப்போட் எண்டு கதைக்காங்க. முசிலிம் காங்கிரஸ் எம்.பிமார் ஒருவரையும்- கடுகுக்கும் காணயில்ல அண்ண. சின்ன மந்திரி ஒருவரும் இடையில வந்து திரும்பிப் போனதாம் எண்டு நம்மட சின்னவன்ட முத்துவாப்பா மார்க்கட்டுக் குள்ள வந்தவரு சொல்லித்துப் போறாரு. கயிட்டம் தொட்டுத் தெண்டும் ஒரு கத. நமக்கென்ன தெரியும்? ரகசியம்,

## கொச்சிக்காப் போடியார் கோபம்



"சின்ன இலக்சனில வெண்ட ஆக்களுக்கு எசண்டுத்துர கோசி குடுக்கிறதில்லையாம்."

"சுருட்டுச் சிப்பத்த மட்டக்களப்பில இறக்குங்கு- வாற மழப் பவ்வலுக்கு சுருட்டக் கிருட்ட இழுத்தித்து மீனக் கீனப் புடிப்பானுகள் நம்மட ஆக்கள்."

எண்டு பாத்தா, காத்து வாக்கில கனக்க கத காதில உழுந்துதான் போகுது.

இன்னுமொண்டு- அய்யாத்துரை அண்ண! நாம இரிக்கிற, நிக்கற இடங்கள தூசி துப்பரவா வைக்க வேண்டுமெண்டு. கதைக்க போன இடத்தில சிரிப்ப அடக்க ஏலாத கதையளெல்லாம், வந்த ஆக்கள் சொன்னதாம். கதைக்கத் தெரியாதவனுகள் கூட்டங் கொஞ்சலியில கூடினா இப்படித் தான்.

ஏசண்டுத்துரையும், கனக்க கூட்டம் கூட்டித் தள்ளுறாரு. பேப்பர் காரனுகளையும், எப்பம் தூரத்தில வைச்சிப் போட்டாராம்.

சின்ன இலக்சனில சனம் துண்டு போட்ட ஆக்கள-ஏசண்டுத்துர மதிக்கிற தில்லையாம். இவையளுக்கென்ன கோசி குடுக்கிற நான் எண்டு நினைக்காராம். சனத்த மதிக்கிறதில்லைத்தானே, எண்ட படியாத்தான் இப்படி எண்டு, ஆக்கள் கதைக்காங்க.

அய்யாத்துரை அண்ண, சில ஆக்களுக்கு சனமெண்டா ஏழாம் பொருத்தம். சனத்திர கயிட்டத்த கயிட்டமானவனுக்குத் தான் தெரியும்.

அண்ணே! எல்லாத்தையும் உதறிப் போட்டு கெனடா கினடாப் பக்கம் போவமெண்டு நினைச்சநான். அங்க நம்மட ஆக்கள் படுற பாட்டப் பார்த்தா, போறதுக்கும் மனமில்ல. புழைக்கத் தெரிஞ்சவனுக்கு, கூதலென்ன குளிரென்ன... நம்மட குஞ்சித் தம்பி போடியாரு சொல்லித்துப் போறாரு.

பேச்சி கீச்செண்டு ஒரு மாதிரி புகைஞ்சித்து கிடக்கு- பொறுத்துப் பாப்பம்.

அண்ணே! சரியான சந்தோஷம் எனக்கு- நமக்குள்ள கசப்பு கிசப்பில்ல எண்டு, சொன்னாப்பில, போயிலக்கட்டும் கொழும்பில வந்து இறங்கித்து. இனிப்ப கினிப்பத்தான் முதல்ல அனுப்பி-கைக் குள்ள போட்டவங்க முந்தின ஆக்கள். இப்ப என்னடா எண்டா, போயில சுப்பம் வந்து இறங்கிருக்கிற தெம்பில கோணர் பாரில-தொண்டய ஒரு நனவை நனைச்சிட்டு நடந்தா, நம்மட யாழ்ப் பாணத்து நடராசாட கடையில ஒரு சுருட்டும் பத்தினா, கேக்காத சூறுதான். ஆத்தில படுற காத்துக்கும் சோக்கா இருக்கும். அண்ண! வெகு காலம் யாழ்ப் பாணத்து சுருட்ட வாயில கவ்வி, இங்கால நம்மட கடையளுக்கும் கொண்டு வந்துத் தானுகளெண்டா இஞ்சத்தய ஆக்களும் வாற மழப்பவ்வலுக்கு சுருட்ட கிருட்ட இழுத்தித்து, மீனக்கீனப் புடிப் பானுகள் ஆத்தில. நம்மட வேல் முருகு அண்ணன்ர கடையில, அருள் அண்ணன் வவனியாப் பக்கம் போனதாம் எண்டு கேள்வி. போனாக்கீனாப் பாப்பம். சுருட்டுச்சிப்பம் கொண்டுவந்து இருக்கிறாரா எண்டு.

# வடக்கிலிருந்து மணப்பெண் வர புலிகளின் விதி-

வடக்கில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து வேறு பகுதிகளுக்குச் செல்வோர் புலிகளிடம் அனுமதிப் பத்திரம் (பாஸ்) பெறவேண்டும்.

பத்துத் தொடக்கம் இருபத்தி ஐந்து (10-25) வயதிற்கு உட்பட்ட ஆண்களும், (10-23) வயதிற்குட்பட்ட பெண்களும் வயதுக்கட்டுப்பாடு உடையவர்கள் என்று அழைக்கப்படுவர். இவர்கள் வெளிமாவட்டங்களுக்கு செல்வதாயின் கடும் விதிகளுக்கு உட்படவேண்டியிருக்கும்.

இதே சமயம் தற்போது வெளிநாடுகளில் உள்ள நம் ஊர் இளைஞர்களுக்கு நல்ல மவுசு நிலவுகிறது.

கேட்கும் சீதனத்தைக் கொடுத்து தமது பெண் பிள்ளைகளை திருமணம் முடித்துவைக்க வசதியுள்ளோர் விரும்புகிறார்கள்.

இவ்வாறான நிலையில் மணப்பெண் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியே வந்தால்தான் விமானத்தில் ஏற முடியும். அதற்கு புலிகளின் அனுமதி வேண்டும்.

அவ்வாறு அனுமதி கொடுக்க விடுதலைப் புலிகள் விதித்துள்ள கட்டுப்பாட்டு விதிகள் கீழே தரப்படுகின்றன:

"வயதுக் கட்டுப்பாடுடைய பெண் ஒருவர் திருமணம் செய்வதற்காக வடபகுதிக்கு வெளியே செல்ல வேண்டுமாயின் அவர் பதினெட்டு (18) வயதை தாண்டியவராக இருக்கவேண்டும்.

அத்துடன் தான் குறிப்பிட்டவரைத்தான் திருமணம் செய்யப்போவதாக உறுதிப்படுத்தி எழுதிய கடிதமும், தனது முழு அளவிலான புகைப்படமும் அனுமதிக்கான விசாரணைச் செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் பெண்ணின் பெற்றோர்களும் குறிப்பிட்ட ஆணின் பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு திருமணம் முடித்து வைக்கப் போவதாக எழுதிய உறுதிப்படுத்தல் கடிதத்தினை விசாரணை செயலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட ஆணின் முழு அளவான புகைப்படமும் ஒப்படைக்க வேண்டும்.

இதன் பின்பே குறிப்பிட்ட பெண்ணிற்கு பிணையாளி ஒருவரை நியமித்து அனுமதி வழங்கப்படும். குறிப்பிட்ட இருவருக்கும் திருமணம் முடித்த பின் அதை அத்தாட்சிப் படுத்துமுகமாக மணமக்கள் இருவரும் தம்பதிகளாக நின்று எடுத்த முழு அளவிலான புகைப்படத்துடன் விவாகப் பதிவுப் பிரதியையும் அனுமதி பெற்ற தினத்திலிருந்து மூன்றுமாத காலப்பகுதிக்குள் பிணையாளி மூலம், அனுமதி வழங்கிய செயலத்தில் ஒப்படைக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் பிணையாளி தனது பிணையை நீக்கிக்கொள்ள தவறும் பட்சத்தில் அதனால் அவருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு அவரே பொறுப்பாளியாக இருப்பார்."

-நன்றி- போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு- விடுதலைப் புலிகள்-

எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

# வடக்கே இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தம்

## பலப்பரீட்சை நிலையில் போர்நிறுத்தம் சாத்தியமா?

பிரசாரங்களுமே காரணம்.

அரசும்-புலிகளும் மிக நெருக்கமாகி விட்டது போன்ற தோற்றப்பாட்டை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜனத் தொடர்பு சாதனங்களே ஏற்படுத்தியிருந்தன.

மன்னார் கடலில் கடற் கரும்புலிகள் நடத்திய தாக்குதலின்பின் முன்னர் செய்யப்பட்ட பிரசாரங்கள் நேர்மாறான விளைவுகளை உருவாக்கின.

சந்திரிக்காவையும் புலிகள் ஏமாற்றி விட்டார்கள் என்று தென்னிலங்கையில் அபிப்பிராயம் உருவானது.

சிங்கள-ஆங்கிலத் தினசரிகளும் பேச்சு முயற்சிகளால் நம்பிக்கையீனங்கள் தெரிவிக்க ஆரம்பித்தன. காட்டூன்களும் வெளியிட்டன.

படையினர் மத்தியில் புலிகள் பற்றி இருந்த சந்தேகம் மேலும் அதிகமாகும். பொருளாதாரத் தடை விலக்கப்பட்ட பின் தாக்குதல் நடைபெற்றதால் அரசாங்கம்மீதும் படைகள் அதிருப்திப்படலாம் என்று ஊகித்துக்கொண்ட அரசாங்கம் உடனே செயற்பட்டது.

அச்சுவேலியில் புலிகளுக்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கைக்கு அரசாங்கத்தின் அனுமதியோடு இராணுவத்தளபதி நேரடியாகவே சென்றார்.

அச்சுவேலியில் 70 புலிகள்வரை பலியாகிவிட்டதாக செய்திகளில் சொல்லப் பட்டதில் பாதிகூட உண்மையில்லை.


வழக்கம்போல் பலியான பொதுமக்களின் எண்ணிக்கையும் புலிகளது கணக்கில் படையினரால் சேர்க்கப்பட்டது.

தாக்குதல் உத்தியிலும் மாற்றமில்லை. குண்டுவீச்சு, ஷெல் அடி உதவியோடு படை முன்னேறிவிட்டுத் திரும்பியது.

பேச்சுக்கு முயற்சித்தாலும் புலிகள் கை ஓங்க அரசாங்கம் அனுமதிக்காது என்று படையினருக்கு உறுதி தருவதற்கும்,

பேச்சு பேச்சாக இருக்கும், அடிக்கு அடியும் கொடுக்கப்படும், புலிகளிடம் ஏமாற மாட்டோம் என்று தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக்காட்டுவதற்கும்,

தமது இராணுவபலத்தை நிரூபித்த புலிகளுக்கு பதிலாக, அரசாங்கமும் பலமாகவே இருக்கிறது என்று வெளியுலகிற்கு தெரிவிக்கவும்-



அச்சுவேலி இராணுவ நடவடிக்கை பயன்படுத்தப்பட்டது.

இராணுவ ரீதியில் புலிகளை பாரியளவில் சேதப்படுத்த அந்த நடவடிக்கையால் முடியவில்லை. ஆனால் பிரசார ரீதியாக அரசாங்கத்திற்கு சொல்லிக்கொள்ளக்கூடிய தாக்குதல் நடவடிக்கையாக அது மாற்றப் பட்டது.

ஆனாலும், கிழக்கில் புலிபாய்ந்தகல் பகுதியில் புலிகள் நடத்திய பாய்ச்சல் அரசாங்கமும்-படைத்தலைமையும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து அசடுவழியச் செய்து விட்டது.

மறுபுறம்- புலிகளோ போர் நிறுத்தம் பேச்சுக்கு அவசியம் என்பதை வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

மோதல்கள் பேச்சு முயற்சிகளை பாதிக்காது என்று அரசாங்கம் சொன்னபோது புலிகள் மௌனமாக இருக்கவில்லை.

"அச்சுவேலி தாக்குதல் சந்திரிக்கா அரசில் சமாதானத்தை எதிர்பார்த்த மக்களுக்கு அதிர்ச்சி."

என்று யாழ்ப்பாணத்தில் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

"சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கை" என்று தெரிவித்தது இலண்டனில் உள்ள புலிகளது கிளை.

பாதுகாப்புப் படையினர் உடனடியாக ஒரு போர் நிறுத்தத்திற்கு தயாராக இல்லை என்று நாடி பிடித்தறிந்து கொண்டே புலிகள் போர் நிறுத்தம் அவசியம் என்னும் பந்தை வீசினார்கள்.

அந்த வீச்சுக்கு பயன் இல்லாமல் இல்லை. அரசாங்கம் திணறித்தான் போனது.

போரை நிறுத்தும் கடிவாளம் இன்னமும் தன் கைக்கு வரவில்லை என்று பிரதமர் வெளியே சொல்ல முடியாது.

படையினர் மத்தியில் உள்ள சந்தேகங்கள், புலிகள் பற்றி அரசுக்கு இருக்கக் கூடும் சந்தேகங்கள் பற்றியெல்லாம் வெளிப் படையாகப் பேச முடியாது.

மறுபுறம் பரபரப்பாக ஆரம்பிக்கப்பட்ட பேச்சு முயற்சியில் ஒரு தேக்கம் ஏற்பட்டது போல தோனிறியது.

இவ்வாறான நிலை ஜனாதிபதித் தேர்தலை சந்திக்கும் இக்கட்டத்தில் பாதகமாகும் என்று அரசாங்கம் உணர்ந்து கொண்டது.

எனவே-இரு முனைகளில் முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டன.

ஒருபுறம்-படையினரை போருக்கு தயார் நிலையில் வைத்திருக்கும் மனோநிலையை உருவாக்குவது.

பலாலியில் படையினர் பச்சை மோட்டார் சைக்கிள்களில் அதிரடிப் பயிற்சி ஆரம்பித்துள்ளது. பயிற்சி எடுக்கும் புகைப்படங்களும் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மறுபுறம்-சமாதான முயற்சிகளில் விருப்பத்தை காட்டும் வகையில் பேச்சு நடக்கும் வடபகுதியில் மட்டும் 'போர் நடவடிக்கைகளை இடைநிறுத்துவது'; கிழக்கில் மோதல்கள் தொடரும்.

போர் நிறுத்தம் என்பது கொட்டும் மழை ஓய்ந்து வானம் வெளுப்பாகுவது மாதிரியானது.

போர் நடவடிக்கை இடை நிறுத்தம் என்பது மழை பெய்துகொண்டே இருக்க குடைபிடித்துக்கொண்டு பேசுவது போன்றது.

ஆயினும் பலத்த காற்று வீசினால் குடை பறிக்கப்பட்டுப் போகலாம்.

எப்படியோ புலிகள் வீசிய 'போர் நிறுத்தம்' என்ற பந்தை எதிர்கொண்டு திணறிய அரசாங்கம், தனது விக்கெட்டைக் காப்பாற்றும் முயற்சியாக 'போர் நடவடிக்கை இடை நிறுத்தம்' என்று ஒரு அடி அடித்து விட்டிருக்கிறது.

இதன் மூலம் மீண்டும் பேச்சு முயற்சிகள் பற்றிய பிரசாரங்கள் சூடுபிடித்து ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு உதவ வழி ஏற்பட்டுள்ளது.

ஆயினும்-போர் நிறுத்தம் ஏற்பட இது ஒரு ஆரம்பமாக அமையுமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது.

கிழக்கில் புலிகள் தம் பலத்தைக் காட்டக்கூடும்.

மட்டுநகர் படுவான்கரைப் பகுதியில் படையினர் பலத்த தாக்குதல் ஒன்றை நடத்தியிருப்பதும் கவனத்திற்குரியது.

இரு தரப்புமே தம்மை பலமானவர்களாக காட்டிக்கொள்ளவே விரும்பும் நிலை இயல்பானதே.

ஆனால்-அடி-பதிலடி என்று மோதல்கள் தொடருமானால் பலப்பரீட்சைக்கு முடிவு இல்லாமல் போகும்.

இப்போது போரின் கடிவாளத்தில் படைகளும், புலிகளும் சரி சமமான பிடி வைத்திருக்கிறார்கள்.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் 'அறிவிக்கப்படாத போர் நிறுத்தம்' ஒன்றை இரு தரப்புமே கடைப்பிடித்திருக்கக்கூடிய நிலை இருந்தது.

ஆனால்-இரு தரப்புமே அச்சூழ்நிலையை கெடுத்துவிட்டதால் பலப்பரீட்சை தொடர்கிறது.

இரு தரப்பில் எந்தவொரு தரப்பும் தமக்கு பலவீனமான நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொள்ள தயாராக இல்லை.

ஒரு பலத்த அடியை புலிகளுக்கு வழங்கிவிட்டு போர் நிறுத்தம் செய்யலாம் என்று அரச தரப்பு நினைத்தால் புலிகள் தரப்பும் கைகட்டிக்கொண்டு இருக்கப் போவதில்லை.

எனவே-இரு தரப்பும் நிலைமைகளை உணர்ந்து விட்டுக்கொடுத்து நடப்பதில் தான் பூரணமான போர் நிறுத்தம் சாத்தியம்.

ஆனால்-விட்டுக்கொடுப்பது யார் என்பதில்தான் சிக்கலே இருக்கிறது.

இந்த சிக்கலை இரு தரப்பும் எவ்வாறு கையாளப் போகின்றன என்று வரும் வாரங்களில் தெரிந்துகொள்ளலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஜனாதிபதித் தேர்தலுக்கான புதைகுழி வேட்டை!
# மீண்டும் தோண்டப்படும் சூரியகந்த!!



வெற்றியைப் பெற்றிருந்தது. இவ் வெற்றியில் பெரும்பகுதி தென்மாகாணப் பிரதேசங்களிலிருந்தே கிடைத்திருந்தது.

கடந்தகால ஆட்சியின்போது தென் மாகாணத்தில் பெருமளவிலான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கக் காணப்படுகின்றன.

ஜே.வி.பி. தீவிரவாதத்தை முறியடிக்கும் நடவடிக்கைகள் என்ற ரீதியில் ஆயிரக்கணக்கானோர் கண்மூடித்தனமான முறையில் தென்னிலங்கையில் கொல்லப்பட்டிருந்தனர்.

மேலும் நூற்றுக்கணக்கானோர் பற்றி இதுவரை எந்தவிதமான தகவலும் கிடைக்காது இருக்கின்றது.

இந்நிலையில் காணாமல் போயிருப்பவர்களில் அநேகர் படுகொலை செய்யப்பட்டிருப்பதை ஊர்ஜிதப்படுத்துவதாகவே சூரியகந்த புதை குழி விவகாரம் காணப்படுகின்றது.

சூரியகந்த புதைகுழியைத் தோண்டி பகுப்பாய்வுகளை மேற்கொண்டிருக்கும் சட்ட வைத்தியத்துறையினர் பலர், கொல்லப்பட்டமைக்குச் சான்றாக பல்வேறு வகையிலுமான உருக்குலைந்த உடலுறுப்புக்களை தற்போது 'சூரியகந்த' புதைகுழியிலிருந்தும் சேகரித்து வருகின்றனர்.

ஜே.வி.பி. நாட்களில் தென்னிலங்கையில் படையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பாடசாலை மாணவர்கள் பலரது உடல் உறுப்புக்களே தற்போது சூரியகந்தப் புதைகுழியிலிருந்தும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. நடவடிக்கைகளை அடக்குவது என்ற ரீதியில் முன்னை அரசு எவ்வளவு தூரம் தனது இரும்புக்கரத்தைப் பிரயோகித்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாகவே சூரியகந்த விவகாரம் காணப்படுகின்றது.

புதிய ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்ததும் இரு முக்கிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கியவர்களாக இருக்கின்றனர். வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நல்லெண்ண அணுகுமுறைகளைக் கட்டியெழுப்புவதும், மறுபுறத்தே தென்னிலங்கையில் சூரியகந்தப் புதைகுழியைத் தோண்டி

ரீதியாகத் தீர்த்துவைப்பதில் ஆர்வங்கொண்டிருந்தால் உடனடியாகவே தமது சமரச முயற்சிகளை ஆரம்பிக்கவேண்டியது இன்றைய சூழ்நிலைகளில் மிகவும் இன்றியமையாததாகின்றது.

புதிய ஆட்சியாளர்களும், முன்னைய ஆட்சியாளர்களும் தற்போது ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கும்வகையில் தத்தமது தரப்பில் ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தென்னிலங்கை அரசியலாளர்கள் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளையே முன்னெடுப்பவர்களாக இருக்கக் காணப்படுவார்கள்.

வடக்கு-கிழக்கு பிரச்னைத் தீர்வு தொடர்பான பூர்வாங்கப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது பிரதிநிதிகள் நால்வரினது பெயர்களை அறிவித்திருந்தது. கூடவே புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் பேச்சுவார்த்தைகளை சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் நடத்தும் பொருட்டு போர் நிறுத்தமொன்றைக் கொண்டுவரும்படியும் சந்திரிகா அரசை வலியுறுத்தியிருந்தார்.

திரு.பிரபாகரன் போர் நிறுதத்தை பேச்சுவார்த்தைக்கான ஒரு நிபந்தனையாகக் குறிப்பிடவில்லை. ஆயினும் போர் நிறுத்தம் மிகவும் அத்தியாவசியமானதொன்றாகும் என்பதனையே பிரதமர் சந்திரிகாவிடம் உறுதியான முறையில் வலியுறுத்தியிருந்தார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியின் போதும் திரு.பிரபாகரன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு போர் நிறுத்தத்தைக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

வடக்கு-கிழக்கு பிரதேசத்தைப் பொறுத்தவரைமட்டுமல்ல, தென்னிலங்கையைப் பொறுத்தவரையிலும் போர் நிறுத்தமொன்று கொண்டுவரப்படுவது மிகவும் அவசியமானதாகவே இருக்கின்றது.

பிரதமர் சந்திரிகா அரசியல் ரீதியாக அனைத்தையுமே புதிதாக ஆரம்பிப்பதிலேயே ஆர்வங்காட்டி வருகின்றார். இன்றைய வடக்கு-கிழக்கு

அங்குள்ள மக்கள் சந்திரிகா தலைமையிலான அரசு புதிய சமரச முயற்சிகளை ஆரம்பித்து ஒரு நிரந்தர அமைதிக்கு வழியமைக்குமென்று எதிர்பார்த்தவர்களாகவே இருக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

கடந்த கால ஆட்சியின்போது வடபகுதி மக்கள் தென்னிலங்கை ஆட்சியாளர்கள்மீது பெருமளவு நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் சந்திரிகா அரசு மீது வடபகுதியினர் குறிப்பிடத்தக்களவு நம்பிக்கையை வைத்திருக்கக் காணப்படுகின்றனர்.

எனவே வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான சமரச முயற்சிகளை ஆரம்பிப்பதில் கால தாமதத்தை தவிர்ப்பதனையே புதிய ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

எடுத்த எடுப்பிலேயே வடக்கு-கிழக்கு சர்ச்சையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதென்பது இலகுவான காரியமல்ல. வடக்கு-கிழக்கு விவகாரம் பாரிய சிக்கல்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் அரசியல் பிரச்னை மட்டுமல்ல, மனிதாபிமானப் பிரச்னைகளும் பெருமளவில் புரையோடிப்போயிருக்கக் காணப்படுகின்றன.

இந்நிலையில் ஒரு பரந்துபட்ட அரசியல் ரீதியிலான அணுகுமுறையே வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து இன்று

### அலசுவது – இராஜதந்திரி

பெரிதும் தேவைப்படுகின்றது.

புதிய ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான சமரச முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான 'அத்திவார நடவடிக்கைகளை' மிக ஆழமாகவே போட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

கடந்த 26ந் திகதி அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் 35வது சிரார்த்ததினம் நாடு தழுவியரீதியில் விரிவாக அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

அமரர் பண்டாரநாயக்காவின் அரசியல் நடவடிக்கைகளை வியந்துரைக்கும் பல்வேறு கட்டுரைகள், அனுபந்தங்கள்

வகையில் பண்டா-செல்வா ஒப்பந்தம் என்ற பெயரில் தமிழ் அரசியல் தலைவர் அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் உடன்படிக்கையொன்றை கொண்டுவந்திருந்தார்.

இந்த உடன்படிக்கை இனப்பிரச்னைத் தீர்வில் அமரர் பண்டாரநாயக்கா காலப்போக்கில் கொண்டிருந்த நிலைப்பாட்டை புலப்படுத்துவதாக விளங்கியிருந்தது.

இருந்த போதிலும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை தோல்வியடையச் செய்வதில் பேரினவாத சக்திகளின் கரங்கள் நன்கு ஓங்கியிருந்தன.

எனவே இனப்பிரச்னைத் தீர்வுக்கென முன்வைக்கப்படும் எந்தவொரு ஒப்பந்தமோ அல்லது தீர்வோ பேரினவாதிகளின் கெடுபிடிகளுக்கு முன்பாக நிலைத்திருக்கமாட்டாதென்பதற்கு பண்டா-செல்வா ஒப்பந்தமும், அதனைத் தொடர்ந்து வந்த ஏனைய அரசியல் அணுகுமுறைகளில் தோன்றிய தோல்விகளும் நல்ல உதாரணங்களாக இருக்கின்றன.

இந்நிலையில் இன்றைய பிரதமர் திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஒரு புதிய சந்ததியினரைத் தலைமை தாங்கும் தலைவராக இருப்பதுடன், இலங்கை அரசியல் வரலாற்றில் இனரீதியிலான பிரசாரங்களைத் தோற்கடித்த தேர்தல் ஒன்றின் மூலமாக ஆட்சிக்கு வந்த ஒரு பிரதம மந்திரியாகவும் காணப்படுகின்றார்.

சந்திரிகா தமது தேர்தல் பிரசாரங்களின்போது அவரது தந்தையாரான அமரர் பண்டாரநாயக்காவைப் போன்று சிங்களம் மட்டுமே என்ற கொள்கையை முன்னெடுக்கவில்லை. அத்துடன் பேரினவாத சக்திகளைப் பலப்படுத்தும் எந்தவொரு வார்த்தைப் பிரயோகங்களையும் சந்திரிகா தமது அரசியல் நடவடிக்கைகளின்போது உபயோகித்திருக்கவில்லை.

எனவே சந்திரிகாவின் அரசியல் அணுகுமுறைகள், மற்றும் அவரது



# பண்டா காலத்திய இனவாத கருதுகோள்
# இன்றுவரை பாயும் இரத்த ஆறு

சூரிய கந்தப் பிரதேசம் மீண்டும் அரசியல் அரங்கில் முக்கியம் பெறத் தொடங்கியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிப்பிட்டியவிலுள்ள சூரியகந்தப் பிரதேசத்தில் காணப்பட்ட பாரிய புதைகுழியை புதிய ஆட்சியாளர்கள் மீண்டும் தோண்ட ஆரம்பித்துள்ளார்கள்.

இதுவரை நடந்து முடிந்துள்ள மகாணசபைத் தேர்தல்கள், மற்றும் கடந்த பொதுத் தேர்தல் ஆகியனவற்றுக்கு முன்பாகக் கூட சூரியகந்தப் பிரதேசத்தைப்பற்றி பொதுஜன ஐக்கிய முன்னணியினர் பிரஸ்தாபித்திருந்ததுடன், தற்போது ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கவிருக்கும் தறுவாயில் மீண்டும் சூரியகந்தயில் புதிய ஆட்சியாளர்கள் தமது புதைகுழி தோண்டும் படலத்தை ஆரம்பித்துவிட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் கடந்த பொதுத் தேர்தலின்போது பொதுஜன ஐக்கிய முன்னணி குறிப்பிடத்தக்களவு

முன்னைய ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதுமே இந்த இரு முக்கிய விடயங்களுமாகும்.

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையிலான புதிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், வடக்கு-கிழக்குப் பிரச்னையை அரசியல் ரீதியாகவே தீர்த்துவைக்கவேண்டுமென்பதில் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த வாரங்களில் புலிகளினால் கடற்படையினரின் 'சாகரவர்த்தன' ரோந்துக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டமை, மற்றும் படையினரால் பலாலியிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேஷன் ஜய ஹத்த' என்ற இராணுவ நடவடிக்கை என்பன வடக்கு-கிழக்கில் அசுரத்தனமாக உருமாறியுள்ள யுத்த நிலவரத்தையே வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில் புதிய ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கு சர்ச்சையை அரசியல்

யுத்தம் புதிய ஆட்சியாளருக்கு ஒரு சவாலாக இருக்கலாம். ஆயினும் எந்தவொரு நிலையிலும் புதிய ஆட்சியாளர்கள் இன்றைய யுத்த நிலவரத்துக்குப் பொறுப்பாளிகளாகக் காணப்படவில்லை.

வடக்கு-கிழக்கு யுத்தம் அநாவசியமானது. மனிதாபிமானமற்றது: அரசியல் தீர்வு காணப்படவேண்டும்: என்றெல்லாம் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தமது தேர்தல் பிரசாரங்களின்போது தீவிரமாகவே முழங்கிவந்தனர். இந்நிலையில் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தைகள் என்பவற்றுக்கான சாதகமான சூழ்நிலைகள் தோற்றம் பெற்றுள்ள தறுவாயில், புதிய ஆட்சியாளர்கள் தேர்தல் பிரசாரங்களின்போது தாம் சொன்னதைச் செய்யவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள வடபகுதியில் இருந்து கிடைக்கும் தகவல்களைப் பார்க்கும்போது,

என்பவற்றைத் தாங்கியவையாக செய்திப் பத்திரிகைகள் வெளிவந்திருந்தன. இலங்கையின் அரசியலில் ஒரு புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்து, புதிய அரசியல் சிந்தனைக்கு வழிவகுத்தவராகவே அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா வர்ணிக்கப்பட்டிருந்தார்.

ஆயினும் அமரர் பண்டாரநாயக்காவின் காலத்தில் முனைப்படைந்த இனவாதக் கருத்துக்களே இலங்கையில் இன்று ஓர் இரத்தப் பிரவாகத்தையே உருவாக்கியிருக்கக் காணப்படுகின்றது.

அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா சிங்களம் மட்டுமே (Sinhala only) என்ற இனவாதக் கொள்கையை வலியுறுத்தி தமது அரசியல் நடவடிக்கைகளைக் கட்டியெழுப்பினார். இருந்தபோதிலும் அமரர் பண்டாரநாயக்கா இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்னைகளைத் தீர்க்கும்

பொதுத் தேர்தல் வெற்றி என்பன இனவாதத்தை பெரும்பான்மை சிங்கள மக்களின் இன்றைய சந்ததியினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனையே வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன.

இந்நிலையில் தமது கடந்த பொதுத் தேர்தல் வெற்றியையும், பாராளுமன்ற ஆட்சியை அமைப்பதற்கு மக்கள் தமக்களித்த அனுமதியையும், இனப்பிரச்னையைத் தீர்த்து வைக்கக் கோரும் நாட்டு மக்களின் அங்கீகாரமாகவே கருதவேண்டியவராக சந்திரிகா காணப்படுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் குதித்துள்ள இத்தருணத்தில் வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தமது நிலைப்பாட்டின் அடிப்படையில் அரசியல் தீர்வொன்றை விரைந்து முன்னெடுப்பதன் மூலமே சந்திரிகா எதிர்காலத்தில் தனது ஆட்சியை மேலும் பலப்படுத்திக்கொள்ள முடியும். ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பட்டங்களைக் குவித்த எட்டு சகோதரிகள்

**பெண்ணாகப் பிறந்தது பாவம் என்னும் பேச்சுக்கு ஒரு சாட்டையடி.**

ஒரே குடும்பத்தில் பிறந்த 8 சகோதரிகள் மொத்தம் 20 பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்ற பெருமைக்குரியவர்களாகத் திகழ்கின்றனர்.

டெற்றொயிற் மாநிலத்தைச் சேர்ந்த ஹேவியஸ் கிறீன், அவர் மனைவி ஜூலியா ஆகிய இருவருக்கும் வரிசையாக எட்டு பெண் குழந்தைகளே பிறந்தனர். இவர்கள் தாங்களாகவே படித்து பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பட்டதாரிகளாகி பெரும் பதவிகளை வகிக்கின்றனர். இருந்தபோதும் அத்தனை பேரும் தங்கள் பெற்றாரை விட்டுப் பிரியாமல் ஒன்றாகவே இன்றுவரை எந்தப் பிணக்குமின்றி வாழ்ந்து வருகின்றனர்.

இரு பெண் குழந்தைகளைப் பெற்ற பெற்றாரே பெரும் வேதனைகளையும் பிரச்சனைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. போதாததற்கு இரண்டும் எப்போதும் ஒன்றையொன்று பிடித்து விழுங்கும் நிலையிலேயே இருக்கும். ஆனால் ஹேவியஸ் குடும்பத்திலுதித்த பெண்கள் பெற்றவர்க்கே பெருமை தேடித் தருகிறார்கள்.

இவர்களில் மூவர் (மருத்துவத்துறை) டாக்டர்கள்: இருவர் உளவியலாளர்கள், ஒருத்தி பாடசாலை அதிபர், மற்றுமொருவர் கலாநிதி பட்டம் பெற்ற ஆசிரியர்; அடுத்த ஒருவர் இரசாயனவியல் பொறியியலாளர். மூத்த பெண் ஜூனுக்கு 46 வயதாகிறது. இவர் ஒரு பாடசாலை அதிபர். இளையவளான ஜேனற் இரசாயனவியல் பொறியியலாளர் பட்டத்தினை அண்மையில் பெற்றாள்.

ஒரு சாயத் தொழிற்சாலையில் ஊழியராகக் கடமை பார்த்த ஹேவியசுக்கு 72 வயதாகிறது. இவர் தனது பெரிய குடும்பத்தின் செலவுகளைச் சமாளிக்க சாயத் தொழில் வேலையுடன் வேறு இரு பணிகளையும் பார்த்தார். அதுமட்டுமல்லாமல் ஓய்வு நேரங்களில் படித்து அவரும் பட்டதாரியானார். இப்பொழுது டெற்றொயிட்டிலுள்ள பெந்தக்கோஸ்த தேவாலயத்தில் போதகராகவும் கடமை பார்க்கிறார். மனைவி ஜூலியாவுக்கு 68 வயதாகிறது.

கணவன்-மனைவி இருவருமே தங்கள் குழந்தைகளை கருத்துடன் வளர்த்துவந்தனர். அவர்கள் படித்து முன்னேற வேண்டும் என்பதற்காக எவ்வளவோ தியாகங்களைப் புரிந்துள்ளனர். பிள்ளைகளும் படித்து ஒவ்வொருவரும் புலமைப் பரிசில்களைப் பெற்றே பட்டங்களைப் பெற்றார்கள் என்று-தாங்கள் பட்ட பெரும் பாட்டுக்கு ஏற்ற பலன் கண்ட மகிழ்வில் பெருமை கொள்ளுகின்றனர்.

"எங்கள் முன்னேற்றத்துக்கு எங்கள் பெற்றோரின் தூண்டுதலே காரணம். அவர்கள் அளித்த ஊக்கம்தான் இன்று எங்களை பெருமை கொள்ள வைத்திருக்கிறது" என்று பிள்ளைகள் கூறுகிறார்கள்.

தனது பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றிக் கூறும்போது ஹேவியஸ்" கல்வியே சிறந்த வாழ்க்கைக்கான திறவுகோல். என் பிள்ளைகள் பழைய முறையினைத் தழுவியே படித்தார்கள். படியுங்கள் என்று அவர்களை நாங்கள் வற்புறுத்துவதில்லை. படிப்பதனால் ஏற்படும் பயன்களை அவர்கள் உணரவைத்தோம். வகுப்பில் முதலாவதாக வரவேண்டும் என்று எந்தப் பிள்ளையையும் நாங்கள் தூண்டவில்லை. அவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவி, முன்னேறுவதைக் கண்டோம்" என்று கூறுகிறார்.




"என் பிள்ளைகள் அனைத்தும் பத்தரை மாற்றுத் தங்கள்" என்று ஜூலியா கூறுகிறார். பிள்ளைகள் எல்லாரும் பியானோ வாசிக்கக் கற்றுக்கொண்டிருப்பதுடன் ஒவ்வொருவரும் வெவ்வேறு வாத்தியக் கருவியினை மீட்டவும் பயின்றுள்ளனர்.

# பெண்களுக்கான பயிற்சி—2

## இதனால் இப்படி

**பயிற்சி 1**

ஒரு கையை உயரே செங்குத்தாக தூக்கிக்கொள்ளவும். பிறகு நேரே வளைந்து மற்றொரு கை பாதத்தில் நன்கு பரவி இருக்குமாறு வைக்கவும். இவ்வாறு கைகளை மாற்றி மாற்றி செய்யவும்.

**இதன் பயன்:** உடல் எடை அதிகமாகி விடுமே என்ற கவலை பட்டென்று பறக்கும் வகையில் உடல் 'சிக்' என்று ஆகிவிடும்.



**பயிற்சி 2**

உடலை வளைவான நிலைக்கு கொண்டுவந்து, பின் கால்கள் இரண்டையும் ஒரே மாதிரியான அசைவில் ஒரு நிலைக்கு கொண்டு வந்து, பிறகு மெதுவாக அந்த நிலையிலேயே எழ முயற்சிக்க வேண்டும். இதுபோல் பல தடவைகள் தொடர்ந்து செய்யவேண்டும்.

**பயன்:** உடல் நல்ல கட்டுக்கோப்பை பெறுகிறது. அதிகமான சதைகள் இந்த பயிற்சியின் மூலம் அகற்றப்படுகின்றன. தவிர வேலைகள் செய்யும்போது ஏற்படும் மூச்சிரைச்சலும் ஒழிந்துபோகும்.

## ஆவாரையும் பெண்களும்

பெண்களுக்கு தலையில் உள்ள பொடுகும், பேனும் ஒழிய வேண்டும். ஈர்கள் மறைய வேண்டும் என்பது தலை(யாய) பிரச்சனை.

பொடுகை ஒழிக்க ஒரு சுலபமான வழி இருக்கிறது.

ஆவாரை தெரியுமோ? (தெரியாவிட்டால் கேட்டு அறியுங்கள்)



ஆவாரை இலையைப் பறித்து, அதை அம்மியில் வைத்து விழுதுபோல் அரைக்க வேண்டும். பிறகு அத்துடன் அதேயளவு களிமண்ணைக் கலந்து பிசையவேண்டும்.

முடியின் வேர்பாகம்வரை ஊடுருவும் வரையில் நன்றாக அழுத்தித் தடவ வேண்டும். இவ்வாறு பத்து நிமிடம் ஊறவைத்து விட்டு பின்னர் தலை முழுக வேண்டும்.

இவ்வாறு வாரத்திற்கு இரு தடவை செய்து வந்தால் பொடுகு போசுக்கென்று மறைந்துவிடும்.

ஆவாரை இலையை அம்மியில் அரைத்து உடலில் தேய்த்துக் குளித்துப் பாருங்கள். உடல் அழுக்கு மறைந்து தோல் மினு மினுப்பாகிவிடும்.

-ஆதாரம்-'அதிசய மூலிகை ஆவாரை' நூல்-

## ஆலோசனைகள்

புழுங்கல் அரிசி 250 கிராம், பாசிப்பயறு 125 கிராம். வெந்தயம் 125 கிராம் இவற்றை ஒன்றாக கலந்து வைத்துக் கொண்டு தினமும் காலையில் இரண்டு அல்லது மூன்று தேக்கரண்டி எடுத்து ஒரு கப்பில் நீருடன் கலந்து குக்கரில் வைத்து குழையவிட்டு உப்பு நெய் கூட்டிச் சாப்பிட்டு வருவது கருவுற்ற பெண்களுக்கும், பால்தரும் தாய்மார்களுக்கும் மிகவும் ஆரோக்கியம் தரும்.



## லேடீஸ் ஸ்பெசல்

### பாலூட்டும்போது...

புட்டியில் குழந்தைகளுக்கு பால் புகட்டும் போது படுக்கையில் ஒருக்களித்து வைத்தும், தலையணையில் சாய்த்து வைத்தும் புகட்டலாகாது. குழந்தைக்கு புரையேறும் ஆபத்தும் உண்டு.

ஒவ்வொரு மாதமும் மாதவிலக்கு ஏற்படும் போது வயிற்றில் வலி உண்டானால், அவர்கள் அடுத்தமுறை மாதவிலக்குக்கு மூன்று நாட்களுக்கு முன்பு முருங்கை கீரையை இடித்து சாறெடுத்து வெறும் வயிற்றில் அதிகாலையில் பருகிவந்தால் வலி இருக்காது.

### பருப்பு உதவும்

மாங்காய் மிகவும் சூடு. புளிப்புத் தன்மையுள்ள பச்சை மாங்காயை தின்றால் பற்களில் கூச்சம் உண்டாகும். இவை இரண்டிற்கும் மாப்பருப்பு மிகச் சிறந்த மருந்தாகும். மாங்காய் அரிந்து தின்ற பின்பு அந்தக் கொட்டையை உடைத்து உள்ளிருக்கும் பருப்பில் சிறு துண்டு வெட்டி நன்கு மென்று தின்றால் போதும். உடம்பில் உஷ்ணம் சேராது. பற்கூச்சமும் அகலும்.



### சூப்

காரட், பீட்ரூட் கிழங்குகளை சம அளவு சேர்த்து 'சூப்' வைத்து தினமும் பருகினால் நோயிலிருந்து மீண்டவர்கள் அதி அற்புதமாகக் குணமடைவார்கள்.

### தனிச்சுவை


கொத்துக்கறி வறுவல் செய்ய வேண்டுமா? வழக்கம்போல் வெங்காயம், மசாலா கலந்து வாணலியில் போட்டு வறுத்துக்கொள்ளுங்கள். முக்கால் பதம் வெந்தவுடன், அத்துடன் இரண்டு, மூன்று முட்டைகளை உடைத்து ஊற்றி, நன்றாக பிரவுன் நிறத்திற்கு வரும்படி வறுக்கவும். இப்போது சுவைத்துப் பாருங்கள். 'என்ன சுவையாக இருக்கிறதா?' இந்த வறுவலை பிரட் துண்டுடன் சேர்த்து, சாண்ட் விச்சாக செய்து சாப்பிட்டு பாருங்கள். அருமையாக இருக்கும்.

## நீங்களும் செய்து பாருங்கள்


### ஸ்பிறிங்கர் பிளவர் (பூ)

**தேவையான பொருட்கள்:**
தங்கநிறக் கம்பி-1 டசின்
மெல்லிய கலர் ஸ்ரொக்கிநெற் (விரும்பியபடி)
மகரந்தம் சிறுகட்டு
கம் ரேப் (ஒட்டுவதற்கு)
கட்டுக்கம்பி
நூல் (கட்டுவதற்கு)
பச்சைநிற ஸ்ரொக்கிநெற் 1

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**
**பெரிய பூ:** 10 அங்குல அளவில் 5 துண்டுக் கம்பிகள்
**பெரிய பூ:** 9 அங்குல அளவில் 5 துண்டுக் கம்பிகள்
**மொட்டு:** 7 அங்குல அளவில் 3 துண்டுக் கம்பிகள்
**இலை:** 6 அங்குல அளவில் 3 துண்டுக் கம்பிகள்



படம் 1. இதழ்



படம் 2. இலை

**செய்யும் முறை:**

முதலில் சைக்கிள் சில்லுக் கம்பி ஒன்றினை எடுக்கவும். அதன்பின்னர் மேற்குறிப்பிட்ட அளவிலான 10 அங்குல தங்க நிறக் கம்பியை சில்லின் கம்பியில் இலேசாக சுற்றவும். சுற்றிய கம்பியை இலேசாக வெளியே (இழுத்து) தனியே எடுத்து சிறிது நேராக இழுத்து இரு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கவும். இவ்வாறு இதழ்களுக்கான கம்பிகளை அமைத்துக்கொள்ளவும். மொட்டுக்கும் அவ்வாறு அமைக்குக.

#### எஸ்—எஸ்

(உ+ம் படம் 1)

அமைத்த அக்கம்பிகளுக்கு மெல்லிய கலர் ஸ்ரொக்கிநெற் போட்டு கட்டவும். கட்டிய இதழ்களை தனித்தனியே வைத்துக் கொண்டு மகரந்தம் 4 நெட்டுகளை எடுத்து கட்டுக்கம்பியினால் சுற்றிக்கட்டவும். அதன் பின்னர் அமைக்கப்பட்ட இதழ்களை அருகருகே வைத்து நூலினால் கட்டவும். கட்டிய நூல்கள் தெரியாமல் கம்ரேப்பினால் சுற்றவும். இதன் பின்னர் இதழ்களை இலேசாக வளைக்கவும். இவ்வாறு அடுத்த பூவையும் செய்துகொள்ளுங்கள்.

இதேபோன்று மொட்டையும் செய்து கம்ரேப் சுற்றிய பின் மொட்டு இதழில் ஒன்றை நன்றாக கீழ்நோக்கி வளைக்கவும். அடுத்த இதழை இலேசாக வளைக்கவும். அடுத்த இதழை வளைக்க வேண்டாம்.

**இலை:** மேற்குறிப்பிட்ட அளவிலான கம்பியினை எடுத்து இரு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கவும். முறுக்கப்பட்ட கம்பியை படம் 2ல் காட்டப்பட்ட வடிவத்தில் அமைத்து பச்சைநிற ஸ்ரொக்கிநெற் போட்டு கட்டிக்கொள்ளவும். அமைக்கப்பட்ட இலைக்கு கட்டுக்கம்பியினால் சுற்றி கட்டி இலையின் தண்டுப் பகுதியை அமைத்து கம்ரேப் சுற்றவும். இதேபோன்று அடுத்த இரு இலைகளை அமைத்துக்கொள்ளவும்.

**இவ்வாறு அமைக்கப்பட்ட பூக்கள், மொட்டு, இலைகளை கொப்பாக கட்டும் முறை:**

முதலில் மொட்டையும் இலையில் ஒன்றையும் வைத்து ஒரளவு தடிப்பான கட்டுக்கம்பியில் இணைத்து கம்ரேப்பினால் சுற்றி அதை அடுத்து பூக்களில் சிறிய பூவில் ஒன்றையும் இலைகளையும் வைத்துக் கட்டிவிடப்பட்ட கம்ரேப்பினால் சுற்றவும். அதன்பின் அடுத்த பூவையும் வைத்து மீண்டும் கம்ரேப்பினால் சுற்றவும். இவ்வாறு அமைக்கப்பட்ட கொத்து மலரை சிறு மலர்சாடியில் வைத்து அழகுபடுத்திக் கொள்ளுங்கள். விருந்தினர் மேசைக்கு மிகவும் அழகாக இருக்கும்.

## விலை போகும் விக்

அமெரிக்காவில் ஒரு காலத்தில் பெண்களின் மத்தியில் பிரபலமாக இருந்தவர் ஜாக்குலின் கென்னடி.

தலை அலங்காரம் முதல் உடை அலங்காரம் வரை அவர் எப்படியோ அநேகமான அமெரிக்கப் பெண்களும் அப்படியே.

ஜாக்குலின் கென்னடிக்குப் பிறகு அதே யளவு பிரபலம் கிடைத்திருப்பது ஹில்லாரி கிளின்டனுக்குத்தான்.

ஹில்லாரியின் பெயரில் அமெரிக்காவில் அறிமுகமாகியுள்ள 'விக்' மிகவும் பரபரப்பாக விற்பனையாகிறது. இத் தகவலை வெளியிட்டிருப்பவர் ஜாக்குலின் விக் கம்பனித் தலைவர்



## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### பால் பலகாரம்

காலையில் அல்லது பிற்பகல் தேனீர் வேளையில் பரிமாறுவதற்கேற்ற சுவையான பலகாரம் இதுவாகும். குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை விரும்பி உண்பார்கள்.

பால்பலகாரம் என்பதனால் பசும்பால் அல்லது தேங்காய்ப்பால் பாவிக்கலாம்.

**தேவையானவை:**
உழுத்தம்பருப்பு
(உடைத்து தோல் நீக்கியது)- 200 கிராம்
பச்சை அரிசி- 200 கிராம்
சீனி அல்லது வெல்லம்- 150 கிராம்
பால்-200 கிராம் அல்லது
தேங்காய்ப்பால்- 1/2 மூடியிலிருந்து பிழிந்தெடுத்தது.
தாவர எண்ணை- அளவாக
ஏலக்காய்- 4
உப்பு-அளவாக

**செய்முறை:**

1. உழுத்தம் பருப்பையும் அரிசியையும் நன்றாகக் கழுவி 90 நிமிடம்வரை ஊற வைக்கவும். பின்னர் எடுத்து அரைத்து உப்பையும் அளவாக சேர்க்கவும்.
2. பசும்பாலானால் அதனைக் கொதிக்க வைத்து நன்றாக ஆறவைக்கவும். தேங்காய்ப்பால் கொதிக்க வைக்க வேண்டியதில்லை. பாலுடன் சீனி அல்லது வெல்லம் ஏலக்காய்த்தூள் போட்டுக்கலக்கி வைத்துக் கொள்ளவும்.
3. உழுந்து- அரசிக் கலவையினை எடுத்து உருண்டைகளாக உருட்டி, உழுந்து வடைபோல் தட்டி நடுவில் துளையிட்டுக் கொள்ளவும்.
4. வாணலியை அடுப்பில் வைத்து எண்ணையைவிட்டு அது கொதிக்கும் போது மா (வடை) உருண்டையினைப் போட்டு பொரிந்ததும் எடுத்து ஆற வைக்கவும். கடதாசியைப் பரப்பி அதன் மேல் அவற்றை வைத்தால் எண்ணை உறிஞ்சப்பட்டு விரைவில் ஆறிவிடும்.

05. இந்த வடைகளை பாலில் சில நிமிடங்கள் ஊறவிட்டு எடுத்துப் பரிமாறவும்.

## யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

## முரசின் பரிசு

**தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.**

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**முரசின் பரிசு**
**கூப்பன் இல 10**
**உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை**

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக் சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சுவையான நிஜச் செய்தி

# கைவைத்தால் கால் முறியும்

# காதல் முதலைகளின் மோதல்



முன்பின் பழக்கமில்லாத ஒரு பெண்ணின் கையை போய் இழுத்தால், அவ்வாறு இழுத்தவன் ஆணழகன்-மன்மதனாகவே இருந்தாலும் அவள் தன் காலிலுள்ள செருப்பைத்தான் கழற்றுவாள். இது மனிதர்களுக்கு மட்டும் பொருந்தும் பண்பல்ல. சகல சீவராசிகளுக்கும் இது பொதுவானதே!

ரெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள எல் பசோ மிருகக் காட்சிச் சாலையில் நடைபெற்றது இந்த உண்மைச் சம்பவம்.

எட்டடி நீளம் கொண்ட 232 இறாத்தல் எடை கொண்ட 'ஹம்பி' என்ற பெயருடைய ஆண் முதலை கொண்டு வந்து சேர்க்கப் பட்டது. இதனை அடைத்து வைத்த கூண்டுக்கு அருகிலேயே, அதே காட்சிச்சாலையில் தன் பிறவி முதல் வாழ்ந்துவந்த பெண் முதலை மின் கூண்டு இருந்தது.

தங்கள் தங்கள் கடமைகளை முடித்து விட்டு ஊழியர்களும் அன்றிரவு ஓய்வெடுக்கச் சென்றுவிட்டனர். அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும் ஹம்பியின் கூண்டை அடைந்த ஊழியர்களுக்கு பெரும் அதிசயம் காத்திருந்தது.

ஹம்பி காயம் பட்டு குற்றுயிராய்க் கிடந்தது. அடுத்த கூண்டிலிருந்த பெண் முதலையோ வெற்றிக் களிப்பில் மிதந்தது. அதிகாரிகள் அழைக்கப்பட்டனர். மருத்துவர்களும் வந்தனர். இரு கூண்டுகளுக்கு மிடையில் ஒரு ஓட்டை காணப்பட்டது.

காயப்பட்ட ஹம்பியை காட்சிச் சாலை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர். மிருக வைத்தியர் டாக்டர் அந்தனி ஸ்மித் பரிசோதனை செய்தார். ஹம்பியின் வலது கை (மேல்புறக்கால்) எலும்பு பல இடங்களில் உடைந்து காணப்பட்டது. வேதனையால் துடித்தது அப்பிராணி. மிருக எலும்பு முறிவு மருத்துவத்தில் பேர்போன டாக்டர் ஜிம் கொஸ்ச்மன் தருவிக்கப்பட்டார். நான்கு மணிநேரம் சத்திரசிகிச்சை நடைபெற்றது.

முதலையின் கால் எலும்புத்துண்டுகளை இணைக்க துருப்பிடிக்காத உருக்குத் தகடு பொருத்தப்பட்டது. ஒவ்வொரு பக்கமும் மும்மூன்றாக 6 ஸ்குறூ ஆணிகள் போடப் பட்டு கால் பொருத்தப்பட்டது. எனினும் காயத்தை தைப்பது பெரும் பிரச்சனையாகி விட்டது. முதலையின் உடல் முழுவதும் மிகத் தடிப்பமான செதில்கள் காணப் படுவதால் அவற்றினூடாக தையல் போடுவது கடினமாகவே இருந்ததாம். எப்படியோ சில வாரங்களில் முதலையின் கையும் காயமும் குணம் கண்டது.

மீண்டும் அதே கூண்டில் ஹம்பியைக் கொண்டுபோய்விட்டனர். காவலர்களும் ஊழியர்களும் கண்டுகொள்ளாத வேளையில் காதலன் ஹம்பி கம்பிகளை வளைத்து மீண்டும் (முதலைக்) காதலியிடம் சென்று வாலாட்டியுள்ளார்.

நன்றாக மீண்டும் வாங்கிக்கட்டினார்.

அதுமட்டுமல்லாமல் பெண் முதலை, ஹம்பியின் வலது கால்மீது கடித்து மீண்டும் ரணமாக்கிவிட்டது. கட்டுக்கடங்காத காதல் வெறி கொண்ட முதலை ஹம்பி மீண்டும் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார். முன்பு நடந்ததைப்போன்று மீண்டும் ஒரு ரண சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

ரெக்ஸாஸ் மிருகக் காட்சிச்சாலைக்குக் கொண்டு வரப்பட்ட அன்றைய தினமே அருகே உள்ள கூண்டிலிருந்த பெண் முதலையை பலாத்காரம் பண்ணுவதற்காகவே கூண்டுச் சுவரை உடைத்துத் தாண்டிக் குதித்துள்ளார். பெண் முதலையோ கருணை எதுவுமின்றி அடித்து உதைத்து காயப்படுத்தியிருக்கிறது.

பருவ வயதை அடைந்த பெண் முதலையாருக்கு உரிய காதலராகவே ஹம்பி தெரிவு செய்யப்பட்டுக்கொண்டு வரப்பட்டார். பக்கத்திலிருந்து 'பார்த்துப் பேசிப் பழகி கருத்தொருமித்த காதலர்களாகட்டும்' என்று பார்த்தால், காதல் வெறிதலைக்கேறி காலை உடைத்துக் கொண்டார் ஹம்பி என்னும் முதலையார்.



ஹம்பியின் காலுக்கு தையல் போடுகிறார் டாக்டர் ஜிம் கொஸ்ச்மன்

# கற்காலக் குழந்தை கண்டுபிடிப்பு

# பழுதுபடாமல் இருந்த உருவம்



சூடான் நாட்டின் அடர்ந்த காடுகளில் அகழ்வாராய்ச்சியிலீடுபட்டிருந்த பெல்ஜியம் நாட்டு விஞ்ஞானிகள் விந்தையான ஒரு பொருளைக் கண்டுபிடித்துள்ளனர். 40,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கற்காலத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் உருவம்தான் அது. ஏறத்தாழ 5 வயதான அக்குழந்தைக்கு முன்புறம் உணவு வைக்கப்பட்டிருந்தும் அதனை உண்ணாமல் அடம் பிடித்த அக்குழந்தை உணவு கொள்ளாமலே பல நாட்கள் இருந்து தன் உயிரை போக்கியிருக்கிறது. ஆய்வுக் குழுவுக்குத் தலைவரான டாக்டர் கிலஸ் மேசன், அக்குழந்தையின் உருவ அமைப்பினை ஆராய்ந்தறிந்து பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். "இக்காலத் தாய்மார், உணவு உட்கொள்ள நாட்டமில்லாமல் அடம்பிடிக்கும் குழந்தைகளை தண்டிப்பதுபோல் அக்காலத் தாய்மாரும் தங்கள் குழந்தைகளைத் தண்டித்திருக்கிறார்கள். உணவினை குழந்தைகளின் முன் வைத்து, 'தின்னு அல்லது உன்னை இடத்தை விட்டு அசையவே விடமாட்டேன்' என்று மிரட்டியிருக்கிறார்கள். அத்தகைய மிரட்டல்களுக்கு ஆளாகிய குழந்தையே தான் விரும்பாத உணவினை உண்ணாமல் உண்ணாவிரதத்தை தொடர்ந்து கடைப்பிடித்து, இறுதியில் உயிர் துறந்திருக்க வேண்டும்". இதுதான் டாக்டர் மேசனின் கூற்றாகும்.

கற்காலமானமையினால் அக்காலப் பெற்றாரின் மனமும் கல்லாகவே இருந்திருக்க வேண்டும். அதனால்தான் உண்ணாவிரதம் இருந்த அந்தக் குழந்தைமீது எவருக்கும் கருணை பிறக்கவில்லை. உயிர் துறந்த பின்னரும் அக்குழந்தையின் உடலை அடக்கம் செய்யாமல் அந்த இடத்தைவிட்டு அகன்று சென்றனர்.

உணவைப் பார்த்த வண்ணம் கைகளைக் கட்டியபடி அந்தக் குழந்தை இருந்தவாறே உயிர் பிரிந்திருக்கிறது. எகிப்து நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உயிர் துறந்த அரச குடும்பத்தவர்களின் உடலை பலதரப்பட்ட சாதனங்களைக்கொண்டு பதப்படுத்தி வைத்து பாதுகாத்துள்ளனர். இந்தக் குழந்தையின் உடலுக்கு எத்தகைய பதப்படுத்தும் முறைகளும் அனுசரிக்கப்படவில்லை.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆளரவமோ, பிராணிகளின் நடமாட்டமோ அற்றிருந்த குகைக்குள் இந்த உடல் அப்படியே இருந்து வந்துள்ளது.

"இப்புதிய கண்டுபிடிப்பின் மூலம் எமது முதாதையினரின் வாழ்க்கை முறையினையும் வேறு பல அம்சங்களையும் கண்டறியும் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது" என்று டாக்டர் கிலஸ் மேசன் கூறுகிறார்.

# தகவல் பெட்டி



## உயிர்காக்கும் ஓட்டம்

இந்தியாவில் மேற்கு வங்காளத்தில், கல்கத்தா நகருக்கு மேற்கேயுள்ள பல கிராமங்களுக்குள் 50க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் செய்ய ஆரம்பித்தன. மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்தன. குடிசைகளை நாசம் செய்தன. பயிர்களையும் அழித்தன. ஆறுபேரை பிடித்து நசித்துக்கொன்று விட்டன. கிராமவாசிகள், துரத்தும் யானைகளிடமிருந்து தப்பிப் பிழைக்க ஓட்டமெடுப்பதை துணிவான படப்பிடிப்பாளர் தன் கமராவில் புகுத்திவிட்டார் படத்தில் காணப்படும் கிராமவாசி எப்படியோ தப்பிப்பிழைத்துக்கொண்டார் சீவ மரணப் போராட்டம் என்பது இதுதான்.



## நீங்களும் முயலலாம்

கடினமான மரக்குற்றியில் அறையப்பட்ட 8 அங்குல நீள இரும்பாணியை தன் பற்களால் இழுத்தெடுக்கிறார் ஃபிரான்கொய்ஸ் றஸ்ஸெல்.

சிக்காகோ ஒடிரோறியமொன்றில் 1933இல் இடம்பெற்ற இச்சாதனை 5 விநாடிகளுக்குள் செய்து முடிக்கப்பட்டது.

38 கிலோ மீற்றர்/ மணி வேகத்தில் ஓடும் புகையிரதத்திலிருந்து ஓடும் திசைக்கு எதிர்த் திசையில் பாய்ந்து குதித்து நிலை தடுமாறாமல் நிமிர்ந்து நிற்கிறார் டாக்டர் ஏ.பொயின் கெர்.

அமெரிக்க மாநிலமான ஜெர்சியில் 1932, ஜூன் 23ல் இச்சாதனை இடம்பெற்றது. நீங்களும் முயலலாம். (நம்மவர்களும் ஓடும் ரயிலில் இருக்கை பிடிப்பதில் சாதனை செய்கின்றனர்)



www.padippakam.com

# சினிவிசிட்

'அமைதிப் படை' மாபெரும் வெற்றிப்படம்.
அதே கூட்டணி சத்யராஜ், மணிவண்ணன், ரஞ்சிதா இணைந்து வழங்கிய 'தோழர் பாண்டியன்' தோல்விப்படமல்ல. ஆனாலும் தூள்கிளப்பிய படமும் அல்ல.
இப்போது சத்யராஜ்-மணிவண்ணன் கூட்டணி முழுமூச்சாக இறங்கியுள்ள படம் 'வீரப்பதக்கம்'. தயாரிப்பு சத்யராஜின் மனேஜர் ராமநாதன்.
சிம்மக்குரலோனின் 'தங்கப்பதக்கம்' மாதிரி, பேசப்படும் படமாக சத்யராஜுக்கு மற்றொரு வெற்றி விழாப் படமாக 'வீரப்பதக்கம்' அமையும் என்கிறார் மணிவண்ணன். ஊர்வசி-ராதிகா ஆகியோர் சத்யராஜுக்கு ஜோடிகள். ஊர்வசி அமைச்சராக நடிக்கிறார்.

வில்லத்தனமான- நையாண்டித்தனமான சத்யராஜ் இதில் தோன்றுவதால் இரசிகர்களை கவரும் என்று முன்கூட்டியே நம்பலாம்.
போலிஸ் ஐஜியாக வரும் சத்யராஜ் முதலில் குறுக்கு வழிகளில் முன்னேறும் கட்டங்களில் வில்லத்தனமாக பளிச்சிடுமாம்.
போலிஸ் அதிகாரி வேடத்தில் ஏற்கனவே சத்யராஜ் நடித்த 'கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு', 'புதிய வானம்', 'வோல்டர் வெற்றிவேல்' மூன்றும் வெற்றிப் படங்கள். வீரப்பதக்கமும் அந்த வரிசையில் சேரலாம்.



சத்யராஜ்
படம்-வீரப்பதக்கம்



## விழாவில் விஷேசங்க!

தலைப்பை பார்த்தவுடன் புதிய படமோ என்று நினைத்துவிடவேண்டாம்.
சமீபத்தில் சென்னையில் 'ஜென்டில்மேன்' படத்தின் 150வது நாள் விழாவுக்காக வந்தவர்களில் நான்கு நடிகைகள் சகலரையும் கவர்ந்தனர். மதுபாலா, கஸ்தூரி, நக்மா, ஹீரா. இவர்கள்தான் அந்த நாலுபேர்.
அடடே அடடா நவநாகரிக உடை என்ன, மேக்கப் ஸ்டைல் என்ன, மிடுக்கென்ன? நடப்பது என்ன அழகிப் போட்டியா, அல்லது பட வெற்றி விழாவா? என்று வியக்கவைத்து விழாவையும், விழிகளையும் விஷேசப்படுத்திய அந்தநாலு பேருக்கு நன்றி.

## அதேபோல்

'அண்ணாமலை' படத்தில் வரும் 'வந்தேன்டா பால்காரன்...' போன்று 'பாட்சா' படத்தில் 'நான் சண்டைக்காரன்...' என்ற பாடலொன்றை எழுதியுள்ளார் கவிஞர் வைரமுத்து.

# வீரப்பதக்கம்

## நடங்கலுக்கு வருந்தித் தொடர்கிறது

இடையில் தடங்கலாகியிருந்த 'நந்தவன தெரு' படத்தின் காட்சிகள் வெகுவேகமாக படமாகிவருகின்றன. கார்த்திக் தனது வீட்டின் முன் அமர்ந்து கோலம் போடுவதும், அதைக்கண்டு பெண்கள் நகைப்பது போலவும் காட்சி ஒன்றும் படமாக்கப்பட்டது. கார்த்திக்குக்கு படத்தில் 'சீனு' தான் பெயர். கார்த்திக் ஜோடி ஸ்ரீநிதி.

## வீ...

தெலுங்கில் சிரஞ்சீவி-மீ... இணைந்து நடித்துள்ள ... பெயரில் தயாராகி வரு... மரகதமணியின் இசையில் ... ஒலிப்பதிவு செய்யப்பட்டு...

## கவுண்டமணி...

கவுண்டமணிக்கு அதிஷ்ட... வந்திருக்கிறது. இந்தியில் ... சொக்குப் பொடி போட்டு ... ஜோடி சேர்ந்து நடித்துள்ளார் க.மணி. அது... படத்தின் பெயர் 'ராஜா எங்க ராஜா'. முழு... செந்திலும் இருப்பதால் உதைச் சுவையு... மனோரமா, வி.கே.ராமசாமி ஆகியோ... இயக்கம்-டி.விஜய். தீபாவளிக்கு வெ...

## நாசரின் உ...

நடிகர் நாசர் இயக்கியுள்ள 'அவ... திரைக்கு வரப்போகிறது. எம்.ஜி.ஆ... அர்ஜுன்வரை நீண்ட நடிகர்கள் ... பட்டியலில் நாசரும் சேர்ந்துகொ... அவதாரத்தில் ரேவதிக்கும் அற்பு... காட்டும் வாய்ப்பு வழங்... என்கிறார் நாசர். தெரு... வைத்து எழுதப்பட்டுள்ள ... 'அவதாரம்'. சகல ஜன... விசயங்களும் இருக்கும் ... உத்தரவாதம் தருகிறார் ...

## ஆரம்பித்தது படப்பிடிப்பு

விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்க குஷ்பூ ரஞ்சிதா அவரோடு ஒன்றுக்கு இரண்டாக ஜோடி சேர 'கருப்பு நிலா' படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகியது.
'ஊமை விழிகள்', 'உழவன் மகன்', 'தாய்நாடு' ஆகிய படங்களை இயக்கிய ஆர்.அரவிந்தராஜ் இயக்கும் 'கருப்பு நிலா' படப்பிடிப்பு பெங்களூர், கோவா, மற்றும் முக்கிய இந்திய நகரங்களில் நடைபெறும்.
ஸ்ரீவித்யா, எம்.என்.நம்பியார், ஆர்.சுந்தரராஜன் ஆகியோரும் நடிக்கிறார்கள். கதை-வசனம் கலைமணி, இசை-தேவா. ஒளிப்பதிவு-ராஜராஜன். ராவுத்தர் பிலிம்ஸ் அலுவலகத்தில் படப்பிடிப்பை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் விஜயகாந்த்.
இது ஒரு ராவுத்தர் பிலிம்ஸ் தயாரிப்பு என்பது சினிசிட் வாசகர்கள் அறிந்ததே.

## தொல்லை சுகன்யாவிடம் இல்லை

கதையை மாற்றச் சொல்வது, காட்சிகளை மாற்றச் சொல்வது, குறித்த நேரத்திற்கு படப்பிடிப்பிற்கு வராமல் தாமதிப்பது போன்ற தொல்லைகள் இல்லாத தமிழ்படவுலக நடிகை யார்? தயாரிப்பாளர்கள் கோரஸாகச் சொல்லும் பதில்-சுகன்யா!

## பிரபு நாயகன்

சரத்குமார்-சுகன்யா நடித்து தற்போது திரைக்குவந்துள்ள படம் ராஜபாண்டி. முக்தா பிலிம்ஸ் 'ராஜபாண்டியை' தயாரித்திருந்தது. நடிகர் திலகம் சிவாஜிகணேசனை வைத்து பலவெற்றிப்படங்களைத் தந்த முக்தா பிலிம்ஸ் அடுத்து தயாரிக்கும் படத்தில் பிரபுகதாநாயகன். கதாநாயகி யார் என்பது முடிவாக வில்லை. படத்தில் பொருத்தமான திகைக்கொடுக்கிறது.



பிரசாந்த்-கஸ்தூரி
படம்-கிருஷ்ணா

'நிலா' என்னும் படத்தை இயக்கிவருபவர் நம்பிராஜ். படத்தின் கதை-வசனமும் அவரேதான்.
ஜெயராம்-வினிதா நடித்து முடிவடையும் தருவாயிலுள்ள 'நிலா' படத்தை தயாரித்துள்ள அதே பட நிறுவனம் புதிய படம் ஒன்றுக்கு பூஜை போட்டுள்ளது.
புதிய படத்தை இயக்கி-கதை வசனம் எழுதும் பொறுப்பையும் நம்பிராஜனிடமே ஒப்படைத்துள்ளது.
படத்திற்கு 'எப்.ஐ.ஆர்.' (முதல் தகவல் அறிக்கை) என்று வித்தியாச ரகமாக பெயரிட்டுள்ளார்கள்.
கொலை-கொள்ளை போன்ற வழக்குகளில் முதலில் புகார் கொடுப்பவரின் மனுவை வைத்து வழக்குப் பதிவு செய்து, அதை நீதிமன்றத்திற்கு தெரிவிப்பதையே முதல் தகவல் அறிக்கை என்று சொல்லுவார்கள்.
அப்படியானால் படத்தின் கதையும் 'திரில்' தானோ?
ஊர்வசி-வினிதா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.
கதாநாயகனாக யாரைப் போடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.
கவுண்டமணி, செந்தில், சார்லி, ஜெய்கணேஷ், காந்திமதி, விஜயகுமார், மஞ்சுளா ஆகியோரோடு பம்பாய் இறக்குமதி அழகியும் இருக்கிறார். திரிலுக்கு கவர்ச்சி அழகு!

## கிளின்ரனை சந்திக்க விருப்பமில்லையா?


### கமல் சொல்லும் சேதி

'மகாநதி' படம் எதிர்பார்த்த அளவு சரியாக ஓடவில்லை என்ற வருத்தம் கமலுக்குத் தணியவில்லை. முன்பும் ஒரு பேட்டியில் மகாநதி ஓடாததுக்கு காரணம் கூறியிருந்தார். இப்போதும் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.
"இது ஏதோ முற்றும் கோணல் மாதிரி காரணமில்லை. இப்படி ஒரு படம் எடுத்தபோதும் சரி, வெளியிட்ட பிறகும் சரி போதுமான விளம்பரம் செய்யப்படவில்லை. 'நாயகன்' படத்திற்கு செய்தது போல செய்யப்படவில்லை.
நான் நடித்த 'ஜப்பானில் கல்யாண ராமன்', 'காதல் பரிசு' போன்ற படங்கள் தோல்வியடைந்தபோது யாரும் பெரிதாக வருத்தப்படவில்லை. ஆனால் 'மகாநதி' தோல்வியடைந்த சோகம் பலருக்கு உண்டு. அதை நினைக்கும்போது மனதுக்கு ஆறுதலாக இருக்கிறது."
என்று கூறும் கமலாஹாசன் உலகில் சந்திக்க விரும்புவோர் பட்டியலில் நெல்சன் மண்டேலா, அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் ஆகியோர் இருந்தாலும் அவர்களை சந்திப்பது அநாவசியம் என்று நினைக்கிறார். காரணத்தையும் கமலே சொல்கிறார். "அவர்கள் அரசியல்வாதிகள், நான் கலைஞன். சந்தித்தால் என்ன பேசுவது? அதைவிட எனது கலைக்குடும்பத்தைச் சேர்ந்த பிரான்சிஸ்டி கப்போலா, ஸ்டீபன் ஸ்பில் பர்க், அந்தனி ஹாப்கின் ஆகியோரைச் சந்திக்கவே விரும்புகிறேன்." என்கிறார். இதிலும் வித்தியாசம்தான் கமல் நீங்கள்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## எங்கள் குடும்பம்

எங்களது குடும்பம் ஒரு
இனிய குடும்பம்
தங்கமான குடும்பம் அது
நல்ல குடும்பம்

அப்பா தினமும் வேலை செய்து
உழைத்து வருகிறார்
அம்மா எம்மை அன்புடனே
வளர்த்து வருகிறாள்.

அப்பா இரவில் பாடங்களைச்
சொல்லித் தருகிறார்.

ஆசையுடன் யாவற்றையும்
வாங்கித் தருகிறார்.

அம்மா தினமும் உணவுகளை
ஆக்கித் தருகிறாள்
ஆசையுடன் பாட்டுப்பாடச்
சொல்லித் தருகிறாள்.


அண்ணா என்னைப் பல இடமும்
அழைத்துச் செல்லுவார்
அக்கா என்னை அலங்கரித்து
ஆனந்தம் கொள்வாள்.

ஜெ.சிவரங்கேசன், இந்துக்கல்லூரி–திருகோணமலை.

"அன்பென்று கொட்டு முரசே! - அதில்
யார்க்கும் விடுதலை உண்டு;
பின்பு மனிதர்க ளெல்லாம் - கல்வி
பெற்றுப் பதம் பெற்று வாழ்வார்."
–சுப்பிரமணிய பாரதியார்–

### பாப்பா முரசு சிறுகதை

# செய்யும் தொழிலே தெய்வம்



ஓர் ஊரில் நான்கு சகோதரர்கள் வாழ்ந்தனர். வேலன், பாலன், சீலன், கண்ணன் ஆகிய அந்த நான்கு சகோதரர்களும் நான்கு வகையான தொழில்கள் செய்து ஊர் மக்களுக்கு அயராது சேவை செய்தனர்.

வேலன், நன்கு விவசாயம் செய்து தானியங்களையும், காய்கறிகளையும் பயிர் செய்து மக்களுக்கு வாரி வழங்கி, அவ்வூர் மக்களின் பேரன்பிற்குப் பாத்திரமாய் விளங்கினார்.

பாலன், உடைகள் தயார் செய்து கொடுத்து வந்தார். மக்களின் விருப்பத்திற்கேற்றவாறு அவர் உடைகள் தைத்து விநியோகித்தார். அவரை மக்கள் பெரிதும் மதித்து வந்தனர்.

சீலன், அவ்வூர் மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்து வந்தார். அங்கு வசிக்கின்ற மக்கள் அவரின் திறமையான கட்டடக் கலையை மதித்து அவரை வாழ்த்தினார்கள்.

கண்ணன் இனிமையாகப் பாடி மக்கள் எல்லோரையும் மகிழ்வித்து வந்தார். அவர் பாடும் பாடல்களைக்கேட்டு, மக்கள் எல்லாரும் மெய்மறந்து நிற்பார்கள்.

ஆக நான்கு பேரும் தங்கள் வேலைகளில் மிகவும் ஆற்றல் பெற்றவர்களாக இருந்தார்கள். அதனால், அந்த நால்வரையும் பெரிதும் மதித்துப் பாராட்டிப் பெருமை அடைந்தனர் ஊர்மக்கள்.

ஆனால் பாட்டுப்பாடும் கண்ணனுக்கு மட்டும் அந்த ஊர் மக்கள் கூடுதல் அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறார்கள் என்பதை மற்ற மூன்று சகோதரர்களும் உணர்ந்து கொண்டனர். நாளுக்கு நாள் கண்ணனுக்கு இருக்கும் மதிப்பு மக்கள் மத்தியில் கூடிக்கொண்டே போவதை மூவரும் கண்கூடாகப் பார்த்து கண்ணனின் மீது பொறாமை கொண்டார்கள்.

"உறங்காமல் உழைக்கின்றோம். உருக்குலையப் பாடுபடுகின்றோம். இடுப்பொடியத் தொழில் செய்கின்றோம். ஆனால் அந்த கண்ணன் மட்டும் எந்த வேலையும் செய்யாமல் பாடுவது ஒன்றையே பிழைப்பாக்கிக் கொண்டிருக்கிறான். இவனால் எந்த நன்மையும் மக்களுக்குக் கிடையாது. இந்தச் சமுதாய முன்னேற்றத்திற்கும் அது ஒரு சதவீதம்கூட உதவப் போவதில்லை. அப்படி இருந்தும் மக்கள் மத்தியில் அவன் செல்வாக்கு எப்படிப் பெருகுகிறது? உணவு, உடை, இருப்பிடம் எல்லாம் கொடுக்க, அவற்றை அனுபவித்துக்கொண்டு கண்ணனைப் போற்றுகிறார்களே. அவர்களுக்காக நாம் ஏன் உழைக்க வேண்டும்?" என்று ஆவேசமாகப் பேசினார் வேலன்.

"ஆமாம் இனிமேல் நாம் உழைக்க வேண்டாம். நாமும் கண்ணனைப் போல பாடகர்களாவோம். பாடுவது மிகவும் சுலபம். யாரும் இதுவரை கேட்டிராத புதிய புதிய பாடல்களைப் பாடி ஊர்மக்களை நம் வசமாக்குவோம். அதன் பிறகு பாருங்கள்... கண்ணனின் மதிப்பு தன்னாலே குறைந்து விடும். அதன் பிறகு நாம் மூவரும்தான் ராஜாக்கள். மக்கள் நம் பாட்டை இரசித்து, பாராட்டி போற்றுவார்கள்." என்றான் பாலன்.

"ஆமாம் அதுதான் சரி, இனிமேல் நாம் பாடல்களை இயற்றவேண்டும். அது ஒன்றுதான் கஷ்டம். மற்றபடி வேலன் சொன்னதுபோல் பாடுவது எளிது. நாம் இந்தத் தொழிலையே செய்யலாம்" என்றார் சீலன்.

அடுத்ததாக அம்மூவரும் செயலில் இறங்கினர்.

வேலன் விவசாயம் செய்வதை நிறுத்தினார். பாலன் துணிகள் தைக்கும் கடையை இழுத்து மூடினார். சீலன் வீடு கட்டும் தொழில் செய்வதை நிறுத்தினார். இதனால் போதிய உணவு, உடை இருப்பிடங்கள் பற்றாக்குறையால் மக்கள் துன்பப்படத் தொடங்கினர்.

ஆனால், அவர்கள் மூவரும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் பாட்டுக்களை எழுதுவதிலும், அவற்றைப் பாடிப் பார்ப்பதிலும் நேரத்தைச் செலவிட்டார்கள்.

இதனால் ஊர் மக்கள் அனைவரும் அந்த மூவரின்மீதும் மிகவும் வெறுப்புக் கொண்டார்கள். ஒரு சிலர் ஏசிப் பேசவும் ஆரம்பித்தார்கள்.

ஆனால் அந்த மூவரும் எதையும் காதில் வாங்கிக்கொள்ளாமல் பல இசைப் புத்தகங்களை வாங்கிக் குவித்து, அவற்றைப் படித்துப் பார்த்து நல்ல இலக்கிய தரமுள்ள பல பாடல்களை இயற்றினார்கள். அதில் வெற்றியும் கண்டார்கள்.

"ஆஹா... குயிலைப்போல கூவுவோம். மைனாவைப்போல பாடுவோம். முகிலைப் போல முழங்குவோம். கடலைப்போல ஆர்ப்பரிப்போம். யாழைப்போல இசைப்போம்," என்று ஜன நடமாட்டம் அதிகம் உள்ள தெருவில் நின்று கத்தினார்கள்.

அவர்களின் கூச்சலைக் கேட்டு ஊர் மக்கள் அவர்களைச் சுற்றிக் கூடினார்கள்.

"எங்கே பாடுங்கள் பார்ப்போம்" என்றார் ஒரு பெரியவர்.

முதலில் வேலன் பாடினார். அவரது குரல் ஆந்தை அலறுவது மாதிரி இருந்தது. பாலன் பாடினார். ஏதோ பல்லி கத்துவது போல் இருந்தது, அவரது குரல். அடுத்து சீலன் பாடினார். அவர் பாடியதைக் கேட்டுப் பல கழுதைகள் ஓடிவந்து அவர்களைச் சூழ்ந்துகொண்டு கத்த ஆரம்பித்தன.

அவர்களின் கோமாளித்தனமான பாடல்களையும், அருவருப்பான குரலையும் கழுதைகள்தான் இரசிக்க முடியும் என்பதை உணர்ந்த மக்கள் கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

மூவரும் இப்படிப்பட்ட அவமானத்தைக்கண்டு மனம் குறுகி நின்றார்கள்.

அப்போது, அங்கே வந்த கண்ணன் தன் இனிய குரலில் பாட ஆரம்பித்தார். உடனே கூட்டத்தினரின் கேலிச் சிரிப்பு அடங்கி அமைதி நிலவியது. கண்ணனின் பாடலைக் கேட்டு அனைவரும் மதி மயங்கினர்.

அப்பொழுதுதான் மற்ற மூவருக்குமே ஒரு உண்மை புரிந்தது. யார் யாருக்கு எது எதில் பற்றுதல் இருக்கிறதோ அதிலேதான் அவர் வெற்றிகொள்ள முடியும் என்பதுதான் அந்த உண்மை.

"கண்ணனுக்குப் பாடத் தெரிவதுபோல் நிலத்தில் இறங்கி பாடுபடத் தெரியுமா? துணி தைக்கத் தெரியுமா? கட்டடம் கட்டத்தான் தெரியுமா? எதுவுமே தெரியாது. அதுபோல்தான் அவனது செயலான பாட்டை நம்மால் பாட முடியவில்லை. ஆக நாம் நால்வருமே நான்கு துறைகளிலும் திறமையான நிபுணர்கள்தான். ஒழுக்கத்தோடு போட்டி போட்டு இத்தனை நாள் நாம் காலத்தை வீணாக்கி விட்டோமே? நாம் இப்பொழுதே நம் தொழிலுக்குத் திரும்புவோம்," என்றார் வேலன்.

அவர் சொல்லிவிட்டு வயலை நோக்கிச் செல்ல மற்ற இருவரும் தத்தமது தொழில்களுக்குச் சென்றனர்.

அவர்கள் மனம் மாறியதால் விரைவில் அந்த ஊரில் வளங்கள் செழிக்கத் தொடங்கின. மக்களின் கஷ்டங்கள் நீங்கின. சகோதரர்கள் நால்வரும் சந்தோஷமாக ஒற்றுமையுடன் வாழத் தொடங்கினர். ●

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.10.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல. 60
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 58

**பரிசுக்குரியவர்**
பி.விஸ்வநாதன்-தமிழ் மகா வித்தியாலயம், உடப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**
ஆர்.பிரிஜட்-கப்ரியல் மகளிர் கல்லூரி, ஹட்டன்.
இ.லியோன்-டிஎஸ். சேனாநாயக்கா தேசிய பாடசாலை, கொழும்பு.
அஸ்கா சரூஜ்-அக்குறணை.
து.லிசாந்தன்-சரஸ்வதி தேசிய கல்லூரி, பதுளை.
ஆர்.மைதிலி-பசுமேல்வல தமிழ் வித்தியாலயம்.
நா.ரமணன்-இந்துக்கல்லூரி, கொழும்பு-04.
நவம் தர்ஷனா-இந்துக்கல்லூரி, வாழைச்சேனை.
ஐ.அஸீம் அஹமட்-கிக்குவல்லை.
கா.சத்தியப்பிரியா-வாழைச்சேனை.

## விடுகதைகளும் விடைகளும்

01. காலில்லை ஓடுவான், ஆனால் பாம்பு அல்ல. அது என்ன?
02. மரம் ஒன்று பூ இரண்டு. அவைகள் என்ன?
03. தாய் உறங்குவாள். மகள் உருளுவாள். அது என்ன?
04. கண் இருந்தும் தலையிருந்தும் முடியிருந்தும், மூளையில்லாதவன். அவன் யார்?
05. பகலிலே தொட்டு தொட்டுப் பார்ப்பாள். இரவிலே அணைத்துக் கொள்வாள். யார் அவள்?

**விடைகள்**
01. கடிகாரம் 02. தென்னம்பூ, தேங்காய்ப்பூ
03. அம்மி 04. தேங்காய்
05. கண் இமை.

எம்.ஐ.லபீபா-காத்தான்குடி-04.

01. ஒரே இடத்தில் பிறந்து, வளர்ந்து, இறப்பான். அவன் யார்?
02. உட்கார உதவுவான், படுப்பதற்கு உதவுவான். நடப்பதற்கும் உதவுவான். அவன் யார்?
03. மீசையுள்ளவன் துள்ளி துள்ளி ஓடுகிறான். அவன் யார்?
04. குடை போல் இருப்பான். மனிதர்கள் உண்பார்கள். அது என்ன?
05. வெட்டினாலும் வெட்டாத வெண்கல கட்டை. அது என்ன?
06. தந்தை சோறு போடுகிறார். தாய் கறி போடுகிறாள். அண்ணன் அறுபது தம்பிமாரைச் சுற்றி சுற்றி ஓடுகிறான். அது என்ன?
07. ஆழக்குழி தோண்டி அதில் ஒரு கொட்டை போட்டான். மேலே பார்த்தால் ஒன்பது கொட்டை. அது என்ன?

**விடைகள்**
01. மரம் 02. தரை 03. முயல்
04. காளான் 05. தண்ணீர்
06. கடிகாரம் 07. தென்னை

ஆ.புவனேஸ்வரம்-சிவசக்தி வித்தியாலயம், குறுமண்வெளி.

## வாழ்வோம் வாழவைப்போம்

### கவிதையாக ஒரு கதை



முன்னர் ஒரு நாள்
வேடன் ஒருவன்
விஷம் தடவிய
பாணம் ஏந்தி
வேட்டைக்கு போனான்.

மானைக் கண்டவன்
அம்பைத் தொடுத்தான்.
அது இலக்குத் தவறி
பாரிய விருட்சத்தில்
பதமாய்ப் பாய
காலப் போக்கில்
காய், கனியிழந்து
மரம், காய்ந்தும் போனது.

மரத்தின் பொந்தில்
மகிழ்வாயிருந்த ஆரம் விழுந்த
அழகிய கிளிக்கோ
அதைவிடக் கவலை
வேறொன்றுமில்லை.

அம்,
மரத்தைவிட்டும்
மரம் மாறுவதற்கு
மனமும் இல்லை.

வெளியில் வராமல்
இரையும் தேடாமல்
இறப்பதற்குக்கூட
சித்தமாய்ப் போனது!

இன்பமோ, துன்பமோ
இரண்டறக் கலக்கும்
இனிய கிளியின்
உயர்குணம் கண்டு
இறைவனே இரங்கி,
இவ்வுலகம் வந்தார்!

மனிதனே கூட
மறந்துபோய் விட்ட
கருணை மழையை
ஒரு,
கிளியிடம் கண்டார்!


மகிழ்ச்சியும் கொண்டார்!
பட்ட மரத்தினைப்
பசுமையாய் மாற்றினார்!
அழகிய விருட்சத்தை
அவனிக்குத் தந்தார்!

மரமும் வளர்ந்தது!
கிளியும் வாழ்ந்தது
அதனால் நாமும்
வாழவைத்தே வாழ்வோம்
என்று ஒரு
வரையறை வகுப்போம்!

வி.முரளிதரன்
கோட்டைக்கல்லாறு.

## எவரெஸ்ட் சிகரம்

- **எவரெஸ்ட் சிகரத்திற்கு இந்தப் பெயர் எப்படி வந்தது?**
இந்தியாவில் இங்கிலாந்து ஆதிக்கம் இருந்தபோது, இந்தியாவின் நில அளவையாளராக இருந்தவர் வெள்ளைக்காரர் சேர்.ஜோர்ஜ் எவரெஸ்ட். இவரது பெயரையே இந்த சிகரத்திற்கு வைத்துள்ளார்கள்.
- **எவரெஸ்ட் சிகரத்திற்கு வேறு பெயர்கள் உண்டா?**
ஆம்.நேபாளத்தில் 'சாகர் மேதா' என்றும் திபெத்தில் 'ஹோமோலுங்மா' என்றும் அழைக்கின்றனர்.



- **இது எவ்வாறு உருவாகியது?**
மெல்லிய பாறைகள் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கடுக்காய்ப் படிந்து உருவாகியது. இமயமலையும் இவ்வாறுதான் உருவாகியது.
- **எவரெஸ்ட்மீது இருமுறை ஏறிய பெண் யார்?**
இந்திய-நேபாள பெண்கள் மலையேற்ற சங்கத்தைச் சேர்ந்த சந்தோஷ் யாதவ்.
- **எவரெஸ்ட் சிகரம் இன்று எப்படி உள்ளது?**
மலை ஏறுவோர் தாங்கள் கொண்டு செல்லும் பல பொருட்களை அங்கேயே போட்டுவிட்டு வந்துவிடுகின்றனர். காலி ஒட்சிசன் சிலிண்டர்கள், மிஞ்சிய உணவுப் பொருட்கள், குடிநீர் போத்தல்கள் என எல்லா குப்பைகளும் சேர்ந்து குப்பை மேடாகக் காட்சி அளிக்கின்றது.

## மகாபாரத வேடிக்கை

மகாபாரதக் கதையைக் கேட்டால் யாவருக்கும் தெரியும். இந்த மகாபாரதம் என்பதில் சில எழுத்துக்களை நீக்கி வேடிக்கை பாருங்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| ம | கா | பா | ர | த | ம் |

01. 1.5.6 யானைக்கு பிடிக்கும்
02. 2.5.6 பத்து மைல்கள்
03. 3.5.6 ஊன்றி நடப்பது
04. 4.5.6 பெரும் தேர்
05. 2.4.6 உஸ்...ஸ்...ஸ்..!
06. 1.4.6 வளர்ப்போம்
07. 3.4.6 தூக்க முடியுமா?
08. 3.4.5.6 காந்தியின் ஜனன பூமி

**விடைகள்**
01. மதம் 02. காதம்
03. பாதம் 04. ரதம்
05. காரம் 06. மரம்
07. பாரம் 08. பாரதம்

எம்.இர்ஷாம் அமீர்
மஸ்கெலியா முஸ்லிம் வித்தியாலயம், மஸ்கெலியா.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தேன் கிண்ணம்

## ஏமாந்தது நானல்ல

என் புத்தியை–ஒரு
பழம்...பால்
அடிக்க வேண்டும்!

உனக்குப் பின்னால்
நானும்
எனக்குப் பின்னால்
என் மதியும்
அலைந்ததற்கு!

இனியும்
வேண்டாமடி!
என் தெருக்களில்–உன்
தரிசனங்கள்.
திசையை மாற்றிக்கொள்.
இல்லையேல்
தரிப்புப் புள்ளி வை.

உடையை
மாற்றிக்கொள்வதாய்
உங்கள்
உள்ளங்களையும்
எப்படியடி
மாற்ற முடிகிறது?

அலைகள்
பேசிக்கொள்ளும்
கரைகளின் ஓரம்
நுரைகளில் கால்கழுவி
உயிரும் உடலுமென்றாய்
நகமும்
சதையுமென்றாய்
இப்போதுதான்
புரிகிறது–அது
எதற்கு என்று.

நீ நானாக
மாறியபோதே–எனக்கு
சந்தேகம்தான்
இருந்தாலும்
இது உன்
இளமைத் துடிப்பென்றுதான்
எண்ணியிருந்தேன்.

உன் கர்ளத்தனத்தை
கண்டுகொண்டதால்
உன்
விலகலில்–எனக்கு
ஒரு
விடிவே இருந்திருக்கிறது.

என்
கண்களுக்கு தெரியுமா–இவள்
களங்கமானவள் என்று.....!
பாவம்
ஏமாந்தது நானல்ல
'எயிட்ஸ்'தான்.

**நிவேப்பிரியன்**
**பொத்துவிலூர்–03.**

## உயிர் கரைகிறது..

மனசு நொந்து
என் உயிர் கசிந்து
கண் மடல்–
தள்ளிக்கொண்டு
கண்ணீர் வருகிறது.

அன்பே!
நாம் சந்தித்த
நாட்களைப் போல்–ஏன்
நலிந்து விட்டது
உந்தன் தேகம்?

கூந்தலிடுக்குகளில்–
மறைந்து–என்
ஆண்மையை–
அவஸ்தைப் படுத்திய
அந்த அழகுகளா
இப்போ–இங்கு
அறுத்துப்போட்ட
இரு நிலவுகள் போல்..??

எண்ணும்போது.....
மனசு நொந்து
உயிர் கசிந்து
கண்மடல்–
தள்ளிக்கொண்டு
எனக்கு–
கண்ணீர் வருகிறது.

உன் இளமை பார்த்து
நான்–இமைக்க மறந்த
இனிமையான
பொழுதுகள்–
என்ன..?

இருட்டு இரவில்
திருட்டுத்தனமாய்–நாம்
இறுக அணைத்த
இன்பங்கள்–
என்ன..?

என் வரவு கண்டு–நீ
ஓடி வந்து
மடல்கள் தந்த
சுகம்தான்–
என்ன..?

இப்போ..
என் உயிரே–நீயும்
உருகி–உடைந்து
நலிந்து கிடக்கும்
நிலைதான்
என்ன..?

அன்பே–என்ன
உன்னில்–
இந்த மாற்றம்
என்ன..என்ன..?

'என்ன'–என்று
எண்ண–எண்ண
மனசு நொந்து
உயிர் கசிந்து
கண் மடல்–
தள்ளிக்கொண்டு
எனக்கு–
கண்ணீர் வருகிறது.

**அட்டாளைச்சேனை**
**யூயெல்–மப்றாக்.**



## எனக்குள் ஏதோ..

எனக்குள் ஏதோ..
பூதமாய் எழுவதும்
புள்ளியாய்த்
தேய்வதும்!

எனக்குள் ஏதோ..
எழுத்தில்
வார்க்க முடியாத
ஈயப் பாலங்கள்
இறுகிப் போயுள்ளதாக!

இவை..
வேதனைகள்–மனதில்
வெட்டிய வெறுமைகளா?
ஏகாந்தங்கள்
எனக்களித்த சாபங்களா?

எனது சுயநலங்கள்
அறுவடை செய்யப்பட்டு
உனது தன்னலங்கள்
தளிர்விட்டு
என் வாழ்வைச்
சப்பித் துப்பியதாலா?

நினைவுகளில்
சாமரம் வீசிய
சலனங்கள்..
சண்டமாருதங்களை
என் வாழ்வோடு
அவிழ்த்துப் போனதாலா?

தவணை கொடுத்துத்
தரப்பட்டதுபோல–உன்
நினைவையும்–உன்
அன்பையும்
சமுதாயம்
பறித்துக்கொள்ள முனைவதாலா?

எனக்குள் ஏதோ..
நச்சு முட்கள்
நெஞ்சத்தின் ஆழத்தில்

குத்தப்பட்டு
அணு அணுவாய்ச் சாவதாயும்..

எனக்குள் ஏதோ..
உறுதியான நம்பிக்கை–என்
இருண்ட வாழ்வின்
இறுதியிலாவது
விடிவெள்ளி தோன்றுமென...!

**.:.பஹீமா ஜஹான் ஸவாஹிர்**
**மெல்சிரிபுர.**

## ஏன் இந்தப் புன்னகை?

என் கவிதைக்குயிர் கொடுத்த
இளையவளே!
பசும் புல்லில்
படியும் பனித்துளியாய்
நீ
என்
மனதை தொடுகிறாய்.

நானோ
உன்
சவுந்தர்ய பார்வையால்
ஓர்..
மெழுகைப்போல்
உருகிப் போகின்றேன்!

நீயோ
ஏளனமாய் புன்னகைத்தே
மௌனச் சாடையால்
என்னை விரட்டுகின்றாய்
ஆனால் என்னவோ?

என்
வாயிலிருந்து வார்த்தையும்
பேனையிலிருந்து மையும்
சிதறாமல்–தினம்
உன்
பெயரையல்லவா
உச்சரிக்கின்றது..!

**சி.சபேசன்**
**கோட்டைக் கல்லாறு–01.**





## காதல் தேரிக்காய்...

குளிச்சக்கொண்டு..
போ..

கொண்ட நுனியால
தண்ணி வடிஞ்சி
பாவாடையால
நழுவும்
அப்போ..

சிரிச்சக்கொண்டு
போ..

ஓித்துப் பன ஓரத்தில
ஓித்தாப் புக்கட்டி
தூங்கப் போகிறன்..
கண்ணுக்குள்ள
வந்து கணகாட்டுப் படுத்து..

எதையாச்சம்
பேசித் தொல..

உன்னோட
பேசாம இருக்க முடியல..

பாடசாலைக்கு
வருவன்
வெள்ளைப் பர்தாவுக்குள்
பதுங்கித் திரி..

**பொத்துவில் பௌர்ணமி நிலா**

# சொன்னது நடந்தால்




# நோ–கொமன்ற்ஸ்




# கத்தரித்த கடி ஜோக்ஸ்

"நடிகர் கவுண்டமணி தேர்தலில் நின்று தோற்றுப் போனால் எதிர்க்கட்சிக்காரர்கள் எப்படிக் கூப்பிடுவார்கள்?"
"கவுந்தமணி."

□□



"ராஜேந்தர் மகன் சிம்பு. ராஜேந்தரை வைத்து படம் எடுத்தா என்ன பெயர் வைப்பான்?"
"பெற்றெடுத்த அப்பா."

□□

"ரி.விலே கிரிக்கெட் பார்க்கிறபோதுதான் பிச்சை வந்து கேட்பியா? போயி அடுத்த வீட்டைப் பாருய்யா."
"சோறு போடலனாலும் பரவாயில்லை. ஸ்கோரு எவ்வளவு என்று சொல்லு தாயி. அது போதும்."

# இந்த வாரம் உங்கள் பலன்

**(09.10.94 முதல் 15.10.94 வரை)**

**சோதிட மாமணி 'தில்லை'**

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | – சூரியன், புதன் |
| துலாம் | – வியாழன், வெள்ளி, இராகு |
| கும்பம்– | – சனி |
| மேடம் | – கேது |
| கர்க்கடகம் | – செவ்வாய் |

★ சந்திரன்–விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| புதன்- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | காலை 9 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப 1 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், உணர்ந்த வாழ்க்கை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நிலை மந்தம், கடின உழைப்பு. | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | உறவினர் கலகம், மனப்பயம். | பகல் 12 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் மனப்பயம், வெளியிடப் பயணம். | காலை 10 மணி |
| சனி- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 8 மணி |
| திங்கள்- | மனத் தைரியம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | மனக்குறை நீங்கும், பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- | துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் கேடு, கடன் பயம். | பகல் 12 மணி |
| திங்கள்- | செலவு மிகுதி, பிரயாணம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| புதன்- | தனலாபம், குடும்ப சுகம். | பகல் 12 மணி |
| வியாழன்- | அந்நியர் பகை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- | எதிர்ப்பு நீங்கும், பணவரவு. | காலை 6 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மேன்மை, பொருள் இலாபம். | காலை 7 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், புதிய முயற்சி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- | தனலாபம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, மனத்தைரியம். | பகல் 12 மணி |
| சனி- | குடும்ப சுகம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, கௌரவம். | பி.ப 3 மணி |
| திங்கள- | காரிய சித்தி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், பொருள் செலவு. | பகல் 12 மணி |
| புதன்- | வீண் குறைகேட்டல், கடன் தொல்லை. | காலை 8 மணி |
| வியாழன்- | தெய்வ நம்பிக்கை, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், மனப்போராட்டம். | பகல் 12 மணி |
| சனி- | கடன் பயம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி பலிதம், இழந்த பொருள் மீட்டல். | காலை 8 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, இடமாற்றம். | பி.ப 1 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், எதிர்பார்த்த நன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- | அந்நியர் சகவாசம், மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், நன்மதிப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, கடன் பயம். | காலை 8 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், மனக்குறை நீங்கும். | பி.ப 1 மணி |
| வியாழன்- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வெள்ளி- | வீண் குறைகேட்டல், மனப்பயம். | பகல் 12 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் பகை, மனக் கவலை. | காலை 8 மணி |
| புதன்- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பணவரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், எதிர்பார்த்த நன்மை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -9

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, எதிர்பார்த்த நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | தனலாபம், காரியசித்தி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | மனத்தைரியம், உயர்ந்த நிலை. | பி.ப 1 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, காரியசித்தி. | காலை 7 மணி |
| வியாழன்- | உறவினரால் மகிழ்ச்சி, மனக்குறை நீங்கும். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, பணக்கஷ்டம் நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- | பணவரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, தொழில் சிறப்பு. | காலை 8 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், பயனற்ற செயல். | காலை 6 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| புதன்- | வீண் குறை கேட்டல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, துயர் நீங்கும். | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, வெளியிடப் பயணம். | பி.ப 1 மணி |
| சனி- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | மனக்குறை நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | பணவரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| வியாழன்- | தெய்வ நம்பிக்கை, கௌரவம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | மனமகிழ்ச்சி, இட மாற்றம். | காலை 6 மணி |
| சனி- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்

# விழிகள் மூடாத–365 நாட்கள்!

## பச்சிளம் பாலகியின் பரிதாப நிலை!!

## வாய்பிளக்கும் சமாச்சாரம்





ஸ்கொத்லாந்தைச் சேர்ந்த மிட் கால்டர் நகரில் ஸ்ரீவன் என்ற தச்சுத் தொழிலாளிக்கும் ஹீதர் என்ற அவர் மனைவிக்கும் பிறந்த குழந்தை லூசி, அதன் வாழ்நாளில் தூங்கவே முடியாது. 24 மணி நேரமும் உறங்காமல் விழித்தே இருக்கவேண்டும். அவள் கண் அயர்ந்தால் உடனே அவள் உயிர் பிரிந்துவிடும்.

இத்தகைய கொடிய நோயுடன் போராடும் அக்குழந்தை கடந்த ஒரு வருடமாக தூங்கவேயில்லை. அக்குழந்தையைக் கண்காணிக்க–தூங்கிவிடாமல், எப்போதும் விழித்திருக்கும்படி பார்த்திருப்பதற்காகவே சிறப்புப் பயிற்சி பெற்ற தாதிமார் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செல்வதானாலும் இக்கருவியுடன் வேறு பல கருவிகளையும் எடுத்துச்செல்ல வேண்டிய நிலைதானுள்ளது.

லூசிக்கு ஏற்பட்டிருக்கும் நோயைக் கண்டறிய மிட் கால்டர் நகர மருத்துவர்கள் தொடர்ந்து ஏழு வாரங்கள் பரிசோதனைகளை நடத்தியுள்ளனர். அதன்பின்னர்தான் 'ஒண்டைன்'ஸ் கேர்ஸ்' என்ற முடிவுக்கு வந்துள்ளனர். கிரேக்க புராணக் கதைகளில் வரும் தேவதையின் பெயரே ஒண்டைன். தனக்குக் கீழ் பணிபுரியும் தொழிலாளர்கள் என்றுமே தூங்காதிருக்க வேண்டும் என்று அத்தேவதை அவர்களுக்குச் சாபமிட்டதாம்.

### இந்தக் குழந்தை உயிர் வாழ வேண்டுமானால் உறங்காமல் இருக்கவேண்டும்

-இது டாக்டர்கள் உத்தரவு-

லூசிக்கு உள்ள நோய் ஓர் அபூர்வமான–அபாயகரமான நோய். ஒரு கோடிக் குழந்தைகளில் ஒன்றுக்குத்தான் இந்நோய் ஏற்படும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். 'ஒண்டைன்'ஸ் கேர்ஸ்' (அதாவது-ஒண்டைன் எனும் தேவதையின் சாபம்) என்பது இந்நோய்க்கு வழங்கப்படும் பெயர். அத்தகைய கோடிப் பேரில் ஒருவராகும் நிலை லூசிக்கு ஏற்பட்டுள்ளது.

இக்குழந்தை பிறந்தவுடன் உடல் உடனடியாக நீலமாக மாறியது. இதனால் இதனை செயற்கை சுவாசக் கருவியுடன் பிணைக்கவேண்டியதாயிற்று. அன்றிலிருந்து இன்றுவரை குழந்தையுடன் செயற்கை சுவாசக்கருவி பிணைக்கப்பட்டுவிட்டது. எங்கு

லூசியின் தந்தையான ஸ்ரீவ் பெறும் வருமானம் குடும்பம் நடத்துவதற்கே போதுமானதல்ல என்பதனால் லூசியின் பராமரிப்பு மற்றும் மருத்துவச் செலவுகளை ஸ்கொத்லாந்து அரசே ஏற்றுள்ளது. சிறப்புப் பயிற்சி பெற்ற தாதிமார் தங்குவதற்கும் குழந்தை லூசியை வைத்திருப்பதற்குமான ஒரு தனிக்கட்டிடத்தை நலன் விரும்பிகள் அமைத்துக்கொடுத்துள்ளனர். இதனால் குழந்தையைப் பற்றிய கவலை எதுவுமின்றி பெற்றார் நிம்மதியாக வாழ்கின்றனர். எப்படியும் தங்கள் மகள் என்றாவது ஒருநாள் பூரண குணமடைவாள் என்ற நம்பிக்கையும் அவர்களிடமுண்டு. ●

# குலுக்காதீர்–குலுக்காதீர்–குழந்தைகளைக் குலுக்காதீர்!!

சிறு குழந்தைகளை விளையாட்டுக்காக மேலே தூக்கி எறிந்து பிடிப்பதும் கண்டபடி குலுக்குவதும் பேரபாயமாக முடியலாம். இவ்வாறு செய்யும்போது குழந்தை குதூகலமாகச் சிரிக்கும். குழந்தையைச் சிரிப்பூட்ட மேலும் மேலும் குலுக்குவதைத் தொடர்கிறார்கள். இதனால் குழந்தைகள் உயிர் பிரிந்துவிடவும் கூடும்.

எதுவித காரணமுமின்றி சிரித்து விளையாடிய குழந்தை திடீரென இறந்துவிட நேர்வதற்கும் குலுக்கலும், மேலே எறிந்து பிடிப்பதும் காரணமாகிறது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. திடீர் திடீரென பல குழந்தைகள் மரணமடைய நேரிடுவதை ஆராய்ந்த அமெரிக்க மருத்துவர் குழு ஒன்று இந்த உண்மையினைக் கண்டறிந்துள்ளது. இதனால் நாடு முழுவதும் பரவலாக எச்சரிக்கைச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

**"குழந்தை அழுதது. அழுகையை நிறுத்த அதனை உயரே தூக்கிக் குலுக்கினேன். சிரித்தது. ஆனால் அதனுடைய கண் பார்வையிழந்து போனமைக்கு என் செயலே காரணமாகிவிட்டது"** என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட ஒரு சுவரொட்டியில் தாய் மற்றும் பார்வை இழந்த குழந்தை ஆகியோரின் வர்ணப்படம் தென்படுகிறது.

**"குலுக்க வேண்டாம்.. குலுக்க வேண்டாம்... குழந்தையைக் குலுக்க வேண்டாம்"** என்ற வாசகங்களும் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகளும் எங்கும் காணப்படுகின்றன.

Shaken Baby Syndrome (SBS)



'குலுக்கப்பட்ட குழந்தைக்கான நோய்க்குறி' என்ற இயக்கம் பரவலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாஷிங்டனில் ஸ்போக்கேன் என்னும் இடத்திலுள்ள தேசிய சிறுவர் நலன்புரிச்சங்கம் அண்மையில் நடத்திய மாநாடு ஒன்றில் கலந்துகொண்ட மருத்துவர்களுக்கு இதுதொடர்பான விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. "குழந்தைகள் அடம்பிடித்தால் அல்லது அழுதால் எப்படி அரவணைத்து ஆறுதல் படுத்த வேண்டும் என்பதை பெற்றாருக்கு அறிவுறுத்துவதற்காக பேரியக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்" என்று இம்மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டது.

கனடாவிலும் இப்பொழுது இந்தப் பிரசாரம் தொடங்கியிருக்கிறது. இத்தகைய நோய்க்குறி தொடர்பாக கனடாவிலுள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு விரிவுரைகள் நடத்தப்படுகின்றன. ஆனால் இதனை விரிவாகக் கூறும் நூல்களோ பிரசுரங்களோ தற்போது இல்லை என்று தெரிகிறது.

பிள்ளைகள் குலுக்கப்படுவதனால் மூளையுடன் தொடர்புடைய நரம்பு மண்டலத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. அத்துடன் இருதயத்துக்கு அழுத்தம் அதிகரிப்பதனால் இருதயக் கோளாறும் ஏற்படுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் காம்–பெல் றிவர் எனும் இடத்தில் 2 மாதக் குழந்தை ஒன்று திடீரென இறந்தபோது இடம்பெற்ற மரண விசாரணையின்போது, அக்குழந்தை குலுக்கப்பட்டமையினால் இருதயக் கோளாறு கண்டு இறந்திருக்கிறது என்று டாக்டர் மார்கிரட் நோர்மன் தெரிவித்தார்.

# இது படுப்பதற்கு முன்..

## அவசியமான யோசனைகள்

தூக்கமின்றி தவிப்பவர்கள் பலருளர். இதற்கு பலப்பல காரணங்கள் இருக்கலாம். தூக்கமின்மை ஒரு வியாதியாகவும் சிலரை வாட்டுகிறது.

ஹாவார்டு மருத்துவப் பள்ளியின் பேராசிரியரான டாக்டர் கிரெக் ஜேக்கப் தலைமையில் 'தூக்கமின்மையும் நிம்மதியாகத் தூங்குவதற்கான சில வழிகளும்' தொடர்பான ஆராய்ச்சி ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆராய்ச்சியின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின்போது நல்ல பலன் கிடைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவற்றை சிகிச்சை என்று கூறாமல் பயிற்சி முறை என்று கூறுவதே பொருந்தும். நம்மவர்களுக்கும் இப்பயிற்சிகள் நல்ல பலனளிக்கலாம்.

- படுக்கைக்குச் செல்வதற்கு 3 முதல் 5 மணி நேரத்துக்குள் சுவாசத்துடன் தொடர்பான அல்லது உடலுறுப்புகளுக்கு உரமூட்டும் தேகப் பயிற்சி செய்யலாம்.
- பிற்பகல் 4.00 மணிக்குப் பின்னர் காபி, தேனீர், மென்பானங்கள் ஆகியவற்றைப் பருகவோ சொக்கலேற் போன்ற 'கஃபேன்' கலந்தவற்றையோ உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.
- படுக்கைக்குச் செல்வதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன் மன உளைச்சல் தரும் பிரச்சனைகளையிட்டு வேறு எவருடனும் உரையாடவோ, நினைத்து மனம் வருந்தவோ கூடாது. முக்கியமாக பணம் தொடர்பான எந்தச் சிந்தனையும் எழ லாகாது. உணர்ச்சியூட்டும் அல்லது திகிலூட்டும் தொலைக்காட்சிகளையும் தவிர்ப்பது நல்லது.

மெல்லிசை கேட்கலாம். நகைச்சுவை நாடகத்தை (தொலைக்காட்சியில்) பார்க்கலாம். நல்லறிவூட்டும் நூல்களைப் படிக்கலாம்.



- படுக்கையில் 7 மணி நேரம்வரை படுத்திருக்கும் பழக்கத்தை எற்படுத்திக் கொள்ளவும். விளக்கினை அணைக்கும் வேளையினையும் படுக்கையைவிட்டு எழும் நேரத்தையும் மணிக்கூட்டில் பார்த்து வைத்துக்கொள்ளுங்கள்.

படுக்கையில் கிடக்கும் நேரத்தைக் குறைத்துக்கொண்டால் முன்னதாகவே தூக்கம் வந்துவிடும்.

- உண்மையான உறக்கம் வரும் என்று கணிக்கும் நேரத்துக்கு 20 அல்லது 30 நிமிடத்துக்கு முன்னர் படுக்கைக்குச் செல்லலாகாது.
- உறக்கம் வரப்போகிறது என்ற உணர்வு வருவதற்கு முன்னர் வெளிச்சத்தை அணைக்கலாகாது. தூக்கம் வரும் நேரத்தை மணிக்கூடு உணர்த்தாமல் உங்கள் உடலே உணர்த்த வேண்டும் என்பதனை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.
- கண்களை தூக்கம் கலக்குவதற்குமுன் படுக்கைக்குச் செல்ல வேண்டாம். உறக்கம் வரும்வரை எதையாவது படிக்கலாம். அல்லது தொலைக்காட்சி பார்க்கலாம்.
- காலையில் ஒரே நேரத்தில் எழுந்திருக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் குறிப்பிட்ட ஒரே நேரத்தில்–இரவில் உறக்கம் வரும்.
- பகலில் இடைத் தூக்கம் 45 நிமிடங்களுக்கு மேல் நீடிக்கலாகாது. நீண்ட நேரம் தூங்கினால் இரவில் உறக்கம் வருவது தாமதமாகலாம். பிற்பகல் 4.00 மணிக்குப் பின் இடைத்தூக்கம் நல்லதல்ல.
- உங்கள் படுக்கை அறை படுக்கைக்கும் உங்கள் ஓய்வுக்கும் மட்டுமே தவிர வேறு பணிகளுக்குரியதல்ல என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். ●

# தொந்திக்கு பயிற்சி

இந்த முறையில் பயிற்சி செய்தால் தொந்தி விழாது. அதனால் இதயமும் பலமாகும்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

## அங்கம் 34

### எழுதுவது ரசிகன்

“வா”

இந்திரா காயத்திரியின் மணிக்கட்டில் பிடித்து தன் அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

எளிமையாக தெரிந்த அறையில் ஒற்றைக்கட்டில் இளநீல விரிப்பால் போர்த்தப்பட்டிருந்தது. கட்டிலுக்கு நேர் எதிரே மேலே சுவரில் மோனலிசா புகழ்பெற்ற புன்னகையைச் சிந்திக்கொண்டிருக்க, கட்டிலுக்கு அருகே இருந்த சின்னதான மேசையின் லாச்சி திறந்து ஒரு ‘ஆல்பம்’ வெளியே எடுத்தாள் இந்திரா.

“இரு காயத்திரி.”

கட்டிலைக் காட்ட காயத்திரி மௌனமாய் அமர்ந்தாள்.

ஆல்பத்தோடு காயத்திரியின் அருகே அமர்ந்து ஆல்பம் பிரித்தாள் இந்திரா.

உள்ளே ஒரு சிவப்பு ரோஜாப் படம்- போஸ்ட்காட் அளவில்.

காயத்திரியின் விழி விரிந்து புருவம் உயர்ந்ததை கவனியாது, இந்திரா மறுபக்கம் புரட்ட,

மூன்று அழகான இளம் பெண்கள் ஒன்றாய் நின்று கமராவைப் பார்த்து தாராளமாக புன்னகைத்தமைக்கு சாட்சியான புகைப்படம்.

காயத்திரி கூர்ந்து நோக்கினாள். ஆச்சரியம் அடர்த்தியாகியது.

புகைப்படத்தில் இடமிருந்து வலமாக முதலில் நின்றது-

சித்ரா-

இரண்டாவதாக சித்ராவோடு போட்டி போட்டு புன்னகைத்துக் கொண்டிருந்தது-

-இந்திரா-

முகத்தில் எந்த சேதமும் இல்லாத பளிச்சான இந்திரா.

மூன்றாவதாக-நின்று பூவாய் சிரித்தபடி-

-சூர்யா-

காயத்திரி இந்திராவை திரும்பி நோக்கினாள்.

இந்திரா அந்த புகைப்படத்தையே பார்த்துக்கொண்டு,

“இருவர் மட்டுமே இப்போது இருக்கிறோம்.”

“தெரியும். சித்ரா கொலையானது தெரியும்.”

“ஏன் என்று தெரியுமா காயத்திரி?”

காயத்திரி இந்திராவை பார்த்து பெருமூச்சொன்றை விட்டுக்கொண்டு,

“தெரிந்திருந்தால் இந்த நேரம் உள்ளே பிடித்துப் போட்டிருக்கலாமே இந்திரா. பிளீஸ் இந்திரா. உனக்கு உண்மைகள் தெரிந்திருக்கிறது. மறைக்காதே. உதவு. அது எல்லோருக்கும் நல்லது.”

இந்திரா சடுதியாய் திரும்பி காயத்திரியைப் பார்த்த பார்வையில் கோபம் இருந்தது.

“யார் அந்த எல்லோரும்?”

“நீ-நான் -உன் அண்ணா. அத்தோடு சூர்யா”

சூர்யா என்பதை சற்று அழுத்தியே சொன்னாள் காயத்திரி.

இந்திரா முகத்தில் சந்தேகமானாள்.

“சூரியாவை ஏன் இதிலே சேர்க்கிறாய் காயத்திரி?”

இந்திரா கேட்டதும் காயத்திரி மெல்லச் சிரித்தாள்.

“தலை இல்லாமல் வால் ஆடக்கூடாது இந்திரா. தலைவி இல்லாமல் சேனையை பிடித்து பயன் இல்லை இந்திரா. சூத்திரதாரியை விட்டு சுற்றியிருப்பவர்களை மடக்குவதில் லாபம் இல்லை இந்திரா.”

சொல்லியபடியே இந்திராவின் மடியில் இருந்த ‘ஆல்பத்தை’ எடுத்துக்கொண்டாள் காயத்திரி. இந்திரா தடுக்கவில்லை.

“நீ...நீ என்ன சொல்ல வருகிறாய்?”

காயத்திரி பதில் சொல்லாமல் ஆல்பத்தின் அடுத்த பக்கத்தை புரட்டி, விழி நிறுத்தினாள்.

அதிலே வினோ பாடிக்கொண்டிருந்தான். வினோவின் கையிலே மைக் இருந்தது. வினோவின் அருகில் சித்ரா நின்றுகொண்டிருந்தாள். சித்ராவின் இதழ்களில் புன்னகை நிறைந்திருந்தது.

“லவ் சீன்.”

என்று சொல்லி வாய்விட்டு - ஆனால் உரக்காமல் சிரித்தாள் காயத்திரி.

அதன் கீழே இன்னொரு படம். வினோ நடுவில் சோபாவில் அமர்ந்திருக்க, அவன் இருபுறமும் இடதில் சூர்யாவும், வலதில் சித்ராவும் அவன் தோளை இடித்துக் கொண்டு,

காயத்திரி இப்போது இந்திராவை திரும்பிப்பார்க்க, அவள் முகத்தை திருப்பி சுவரில் புன்னகைக்கும் மோனலிசாவை ஆராய்ந்தாள்.

ஆல்பத்தின் இன்னொரு பக்கம் புரட்டப்பட்டது.

அங்கே எதுவுமே இல்லை. வெறுமையான பக்கம்.

அடுத்த பக்கத்தை புரட்ட முயன்ற காயத்திரியை இந்திரா கையைப் பிடித்து தடுத்தாள்.

“பொறு காயத்திரி! அவசரப்படாதே. இதுவரை பார்த்த காட்சிகளுக்கு விளக்கம் பெற்றுக்கொள் முதலில்.”

இந்திரா சொல்ல, காயத்திரி ஆல்பம் மூடினாள்.

“சரி சொல்லு.”

என்றாள். இந்திரா கட்டில்விட்டு எழுந்து அந்த அறையின் வலது கோடிக்கும் இடது கோடிக்குமாய் நடந்தாள். அப்படி நாலு தடவை நடந்துவிட்டு சட்டென்று நின்று காயத்திரியை உற்று நோக்கினாள்.

“காயத்திரி உனக்கு மனோகரைத் தெரியுமா.”

காயத்திரி கொஞ்சநேரம் யோசித்து

“யார் பூபால் அன்ட் பிரதர்ஸ் மனேஜர் மனோகர்தானே?”

“யெஸ். வேறென்ன தெரியும்?”

காயத்திரி சற்றுத் தயங்க,

“மறைக்காதே. நான் உண்மையைப் பேசவேண்டுமென்றால், நீயும் உண்மையாக நடந்துகொள்ளவேண்டும்.”

“ரைட்! மனோகரும் நீயும் காதலித்தது தெரியும். மனோகர் உன்னை மட்டுமல்ல வேறு பலரையும் தொட்டது தெரியும். சித்ராவும் அதில் ஒருத்தியாய் சிக்கியது தெரியும்.”

நிறுத்திவிட்டு இந்திராவை ‘போதுமா’? என்பது போலப் பார்க்க,

“ஏன் நிறுத்திவிட்டாய் காயத்திரி?”

“தற்போதைக்கு இது போதும். இனி உன் முறை. நீ பேசு- நானும் பேசுவேன். ஓகே.”

“டபிள் ஓ கே.”

என்று சிரிக்க முயன்ற இந்திராவால் முடியவில்லை.

“இன்றைக்கு இது போதும். மனோ..”

“போதாது.”

“ஏன்?”

“ஹவுஸ்புள்ளான ஆசை!”

“எந்தத் தியேட்டரில்?”

“மனோகர் மனசென்ற தியேட்டரில்”

“உதைபடுவாய்.”

“அது பரவாயில்லை. செய்! பக்கத்தில் இருந்து தொடாமல் இருப்பது வதை. அதைவிட உதைபடுவதும் சுகம். எப்படியென்று கேள்.”

“மாட்டேன்.”

“என்ன உதைக்கவா?”

“இல்லை கேட்க மாட்டேன்.”

“தாங்க்யூ. நானே சொல்கிறேன். உதைக்கும்போது உன் காலோ கையோ என்னில் பட்டுத்தானே ஆவேண்டும். சோ..சுகம்.”

“வேறை ஏதாவது பேசு.”

“25 வயதிற்குள் வேறை எதைப் பற்றி பேசலாம் என்று நினைக்கிறாய்..? அதுவும் ஒரு மகா அழகி, யார் அது..? ஆ.. சுஸ்மிதா சென்னையே தூக்கிச் சாப்பிட்டு விடும் சுந்தரமேனி அருகில் இருக்க..”

பேசி முடிக்கவிடாமல் இந்திரா உரத்து தும்மினாள்.

“தாங்க முடியவில்லை மனோ!”

“என்ன இந்திரா?”

“ஐஸ் பெட்டி பெட்டியாக கொட்ட என் தலைதான் கிடைத்ததா?”

“அடடே குளிரா இந்திரா. ஐயோ என் இதயம் இயங்க மறுக்கிறதே. உன் குளிரைப் போக்காவிட்டால் என் உயிரே போய்விடும் இந்திரா.”

எட்டி அவளைப் பிடித்திழுத்து இறுக அணைத்தான்.

நினைவுகள் அழிவதில்லை. இந்திரா தலையை உதறிக்கொண்டாள். மனத்திரையில் இருந்து சுத்தமாய் துடைத்துவிட்டதாக நினைத்தது எதுவுமே துடைக்கப்படாமல், மீண்டும் மீண்டும் தோன்றி வலிக்கவைப்பதை நினைத்து பெருமூச்செறிந்தாள். காயத்திரி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“ஏமாற்றுகிறான் என்று தெரியாமலேயே ஏமாற்றிவிட்டான் காயத்திரி.”

கண்களில் இருந்து பொலபொலவென்று கண்ணீர் இறங்கியது.

காயத்திரி எழுந்து அருகில் போய் ஆதரவாக தோளில் தட்டி,

“ஓ.கே. புரிகிறது. அதற்காக பழிக்குப் பழிதான் முடிவா இந்திரா? மனோகரின் உயிர்தான் விலையா இந்திரா?”

இந்திரா திகைத்து காயத்திரியை பார்த்தாள். தோளில் இருந்த அவள் கரத்தை தொட்டு விலக்கினாள்.

“மனோகருக்கு காதல் ஒரு தொழில். மனோகர் பெண்களை ஏன் சேகரித்தான் தெரியுமா காயத்திரி?”

“தெரியும்!”

“ஏன்?”

காயத்திரியின் முகத்தில் ஒரு கடுமை வந்தது.

□□

“யெஸ். டி.ஐ.ஜி! காரியவாசத்தை சுட்டது நான்தான்.”

“ஐ.ஸீ.”

“என்னை மட்டுமல்ல, குற்றமற்ற பிரஜைகளையும் கொல்லப்போவதாக மிரட்டினான் டி.ஐ.ஜி. மிரட்டியிருந்தால்கூட மடக்கிப் பிடித்திருக்கலாம். ஆனால் சுட்டுவிடுவான்போல் இருந்தது. சோ நான் முந்திவிட வேண்டியதாகிவிட்டது. ஐ.மீன் சுட்டுவிட்டேன்.”

குலாம்ஷா சொல்வதைக் கேட்ட நிர்மலா திகைத்துப்போனாள்.

பிரியாதானே சுட்டாள்? குலாம்ஷா ஏன் பொய் சொல்லுகிறார்? அதுவும் பொறுப்புள்ள ஒரு இன்ஸ்பெக்டர் தன் மேலதிகாரியிடம் எப்படி பொய் சொல்ல முடியும்? வேலியே பயிர் தின்னலாமா?

நிர்மலாவின் யோசனையைக் கலைப்பது மாதிரி டி.ஐ.ஜி சிரிக்கும் சத்தம் கேட்டது.

“நிர்மலா நீதான் கண்ணால் கண்ட சாட்சி. நீ என்ன சொல்லுகிறாய்? குலாம்ஷா- இந்த கிரைம்புலி சொல்வது ஓகேயா?”

நிர்மலாவுக்கு பயமாக இருந்தது. குலாம்ஷாவை அச்சத்தோடு பார்க்க, அவர் காரியவாசத்தின் உடல் போடப்பட்ட அறைநோக்கி போய்க்கொண்டிருந்தார்.

“நிர்மலா! நான் சொல்வது மாதிரிச் சொல்கிறாயா?”

என்றார் டி.ஐ.ஜி.

அவள் பயத்தோடு தலையாட்டினாள்.

“காரியவாசத்தை சுட்டது நீயேதான்.”

“ஆஆ.!”

அதிர்ந்து வாய்பிளந்தாள் நிர்மலா.

“ஓ.கே. அப்படியானால் உண்மையைச் சொல்லு. காரியவாசத்தை சுட்டது பிரியாவா? குலாம்ஷாவா-?”

நிர்மலா தயங்கி நடந்து டி.ஐ.ஜி. டென்சிலின் அருகே போய் நின்று,

“பி...பிரியா.... தான்.”

என்றாள் திக்கித் திணறியபடி.

உடனே டி.ஐ.ஜி. புன்னகைத்து,

“நோ...யூ ஆ ரோங்.”

நிர்மலா அதிர்ச்சி வாங்கி அவரை சந்தேகமாக பார்க்க,


“யெஸ் நிம்மி. காரியவாசத்தை சுட்டது குலாம்ஷாவேதான். அப்படித்தான் நீ நினைக்கவேண்டும். வெளியே சொல்ல வேண்டும்.”

இப்போது பிரியா- பிரியா பசுபதி வாய்விட்டுச் சிரித்தாள்.


(தொடர்ந்து வரும்)




## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: என்.ரட்னகுமார்
வயது: 26
முகவரி: விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயம், பன்வில, கண்டி.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: எம். இப்றாஹீம்
வயது: 22
முகவரி: இல. 3 B, ஸ்டேசன் வீதி, தெகிவளை.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: குமரன் ராணி
வயது: 32
முகவரி: சந்தைவீதி, செங்கலடி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல்.



பெயர்: பி. லரியா
வயது: 18
முகவரி: நாயக்கர் சேனை, மாம்புரி.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்.



பெயர்: ஜி.சில்வஸ்ரர்
வயது: 28
முகவரி: P.O.BOX-250, JADAWEL INTERNATIONAL DHAHRAN AIRPORT-31932. K.S.A.
பொ.போ: படம் பார்த்தல், பேனா நட்பு.



பெயர்: ஏ. அனீஸ்
வயது: 28
முகவரி: P.O.BOX-28172, EAST RIFFA, BAHRAIN.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை, விளையாடுதல்.

பெயர்: ச. வசந்தகுமார்
வயது: 18
முகவரி: பலாவெல எஸ்டேட், உடநிரி எல்லை, இரத்தினபுரி.
பொ.போ: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். சஹ்ரான்
வயது: 16
முகவரி: 75/65, அப்துல் ஹமீத் வீதி, கொழும்பு-12.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், வானொலி, பத்திரிகை.

பெயர்: என். நந்தகுமார்
வயது: 25
முகவரி: F.A.A.C.Co.W.L.L. P.O.BOX-25809, Code No-13119, Safat, Kuwait.
பொ.போ: பத்திரிகை, சினிமா.

பெயர்: அப்துல் ரஸாக் அப்துல் நிஸ்தார்
வயது: 23
முகவரி: 21, சுவர்ணா ஜெயந்தி மவாத்தை, புத்தளம் வீதி, பத்துல-ஓயா.
பொ.போ: வானொலி, பத்திரிகை மற்றும் கரப்பந்து விளையாடுதல்.

பெயர்: த. தேவராஜா
வயது: 23
முகவரி: புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
பொ.போ: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். முஹ்ஸின்
வயது: 18
முகவரி: அல்லைநகர்-07, தி/தோப்பூர்.
பொழுதுபோக்கு: வழமையானவை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பத்தரை மாற்றுத் தங்கம்

நவரசக் கதை

-திருமலை சுந்தா-



பொன்னுத்துரை இதை எதிர் பார்க்கவே இல்லை. இப்படியான பழி தன்மேல் வருமென அவன் கனவில் கூட நினைக்கவில்லை.

அதுவும் தன் மனைவி ரூபத்தில் அந்த பழி வந்தபோது.... உண்மையில் துடி.... துடித்தே போனான். அவனது இதயமே கனத்தது. பேசக்கூட அவனால் முடிய வில்லை.

மௌனமாக இருந்து யோசித்துப் பார்த்தான். யோசிக்க யோசிக்க இன்னும் வேதனை கூடிக்கொண்டே அவனுக்கிருந்தது.

"உங்கட மௌனம்.... எனக்கு எல்லாம் விளங்கிப் போச்சு... ராட்சதப் பூனை வேடம் இனியும் போடவேண்டாம். உங்களுக்கு ஒரு மனைவி இருக்கு. வருசத்துக்கு ஒன்றாய் ஐந்து பிள்ளைகள் இருக்கு. இதனை நினைத்தாவது உங்கட மனங்களை கட்டுப் படுத்தி வாழமுடியவில்லை என்றால்...... நீங்கள் எல்லாம் என்ன மனிச சாதியோ....?"

பொன்னுத்துரையின் மௌனம் அவனின் மனைவி அன்னலெட்சுமியை பேச வைத்தது. அவனின் குழந்தைகளை முழுசி முழுசி பார்க்க வைத்தது.

தன் மனைவியும், தன் பிள்ளைகளும் தன்னை ஒரு காட்சி விலங்காக்கி கூட்டுக்குள் அடைத்து வேடிக்கை பார்க்கின்ற நிலை.... தன் மௌனம் ஏற்படுத்தி விட்டதே... என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டபோது....

புதியவர்களைக் கண்டதும் பாயும் வெறி நாயாக பாய்ந்தால் என்ன? என்று ஒரு விநாடி நினைத்துப் பார்த்தான். 'கோபக் காரனுக்கு புத்தி மட்டம்' அவனது தந்தையார் அவனுக்கு சொன்னது துணையாக வந்தது. 'மௌனம் கலக நாஸ்தி' என்ற அவன் தந்தையின் போதனையும் கூடஎழுந்தது.

பொன்னுத்துரை மௌனமாக வாய் விட்டு சிரித்தான். விழுந்து விழுந்து சிரிக்க நினைத்தான். அப்படிச் சிரித்தால் தன்னைச் சுற்றி நிற்கும் இவர்கள் எல்லாம் பைத்திய மாக்கிப் போடுவார்களோ என்ற பயமும் அவனுள் எழத்தான் செய்தது.

"என்ன சிரிக்கிறீங்க...? செய்ததை செய்து போட்டு.. மானங்கெட்ட சிரிப்பு சிரிக்கி றீங்களே... என்னால என் பிள்ளைகளால இனி வெளியில தலைகாட்ட முடியுமோ......?" பொன்னுத்துரையின் மனைவி அழத் தொடங்கினாள்.

கூட தகப்பனை முறைத்துப் பார்த்த பிள்ளைகளும் தாயுடன் சேர்ந்து கொண்டார்கள்.

பொன்னுத்துரை அப்போதுதான் வேலையால் வந்திருந்தான். கிராமோதய சபையில் அவன் கிளார்க். நல்ல சிவந்த மேனி. உருளையான உடம்பு. சுருண்ட கேசம். சீரான பல்வரிசை. எந்தவொரு பெண்ணுக்கும் அவன் காதல் இளவரசன் தான். சின்ன புன்னகையால், நாக்கில் தடுக்கி விழும் சில சொற்களால்... எந்தப் பெண்ணையும் அவன் சுண்டி எடுத்துவிடும் ஆற்றல் உண்டென்று அவன் மனைவி மட்டுமல்ல.. எல்லோரும் தான் நினைப் பார்கள்.

இந்த நினைப்புகளுக்கும்... அவனின் அந்த அழகான தோற்றத்துக்கும் எந்த தொடர்புகளும் உண்டா என்பது அது பொன்னுத்துரையினை நன்றாக உரசிப் பார்த்தால் தான் தெரியும்.

மளமளவென்று தன் கையோடு நின்ற சைக்கிளை உருட்டி முள் முருங்கையில் சாத்திவிட்டு வீட்டுப் படியில் ஏறினான் பொன்னுத்துரை.

"உங்களுக்கு ரோசம் ஆவது இருக்கா? நான் இங்கு ஒருத்தி அழுது குளறுகிறன். நீங்க உங்க பாட்டுக்கு சிரித்துக்கொண்டு போறீங்களே... ஒரு வார்த்தை நீங்க எங்க பேசப் போறீங்க.. குற்றம் செய்த விலங்கு உடம்பல்லவா?" அன்னலெட்சுமியின் வார்த்தைகள் போன பொன்னுத்துரையை திரும்ப வைத்தது. நிற்க வைத்தது- பேசவைத்தது.

முட்டி மோதிக்கொண்டு எப்போது புறப்படுவோம் என்ற அம்புகளான அவனின் சொற்கள் இந்தக் கால 'ஷெல்' போல படுவேகமாக குறித்த இலக்குகளை நோக்கி புறப்படத்தொடங்கின. 'ஷெல்'களின் குறி தவறினாலும் பொன்னுத்துரையின் ஷெல் வார்த்தைகளின் குறி தவறாது. மனைவியை மட்டுமல்ல வளவு வேலியில் முளைத்த திடீர் முகங்களைக் கூட அவை தாக்கத் தொடங்கின.

"எனக்கு அழகான மனைவி இருக்கு. அழகான மூளைசாலிகளான பிள்ளைகள் இருக்கு. எனக்கு எந்தக் குறையும் இல்லை. நீங்கள் ஏன் வேலிக்குள்ளால எட்டிப் பார்க்கிறீங்க? எனக்கும் என் பெஞ்சாதிக்கும் உள்ள பிரச்சனை இது."

பொன்னுத்துரையின் வார்த்தைகள் தன்னை வேடிக்கை பார்த்தவர்களைத் தாக்கியது.

'செய்யிறதை செய்துபோட்டு... கதைக் கிறதைப் பார்.. ' 'வேலி முகம்' ஒன்று பேசியது. அது பொன்னுத்துரையின் காதுகளில் விழவில்லை.

"அன்னலெட்சுமி! நீ யாரோட எப்படி எதை பேசுகிறாய் என்றதை நல்லா யோசித்துப் போட்டு பேசு. இந்த பதினைந்து வருட தாம்பத்திய வாழ்க்கையில் நீ என்னை இவ்வளவு தான் புரிந்திருக்கிறாய் என்றதை நினைக்கும்போது... எனக்கு என் மேலதான் கோபமாய் இருக்கு.... கொஞ்சம் யோசித்துப் பார்... எனக்கு இந்தா அந்தா என்று குமராகிற வயசில பிள்ளை இருக்கு. நான் பிழைவிடுவேனோ?

"இது கோணேச மண். பிழை விடுப வர்களை உடனுக்குடன் கேட்கும் மண். பிழைகளை செய்துபோட்டு யாரும் இஞ்ச தப்பமுடியாது..... உன்னட்ட என்னைபற்றி யார் சொன்னது... முதலில் அவையளக் கூப்பிடு......"

பொன்னுத்துரை தன் பேச்சினை முடிக்காது தொடர்ந்தான்.

அன்னலெட்சுமிக்கு தன் புருஷனைப் பற்றித் தெரியும். பிரச்சனை என்று ஒன்று வந்தால் அதை முடிக்காது சோறே சாப்பிட மாட்டார் என்று... இப்ப என்ன செய்வது?

அந்த பிள்ளை ராதாவைக் கூப்பிட்டால் என்ன? நேர வைத்து விசாரித்தால்.. அன்னலெட்சுமிக்கு புத்திசாலித்தனமான யோசனை அந்த நேரம் வந்தது. சீ.. என் புருஷனை நம்பாமல் இதை போய் நேர விசாரித்து... இப்போது அன்னலெட்சுமிக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை.

"கூப்பிடு அவளை... நேர கேட்போம்..." பொன்னுத்துரை ஆவேசம் கொண்டு கத்தினான்.

"இஞ்ச பார்! நாலு நாட்களாகப் பார்க்கிறன். கிணத்தடியில இவள் ராதா பெட்டை குளிக்கிற விதம் எனக்கு பிடிக்க வில்லை. வெள்ளை அண்டஸ்கேட்டை தூக்கி மேல கட்டிக்கொண்டு முக்கால் வாசி தொடை தெரிய குளித்தால் எப்படி இருக்கும்..? வெள்ளை அண்டஸ்கேட்டில தண்ணி நனைய கீழ முக்கால் வாசி தொடை தெரிய இஞ்சேர் அவள் யாரோ பிறத்தி பெட்டை என்றாலும், எனக்கு என்னமோ என்னால பார்க்கவே முடிய வில்லை. அதுதான்.. கிணத்தடியிலேயே வைத்து சொன்னனான், "ராதா உனக் கெண்டு ஒரு சாரம் வாங்கி.. கிணத்தடியில குளிக்கக்க அதை கட்டி குளி" என்று இப்படி குளிக்கிறது அம்மணமாக இருக்கு தென்று, இதைப் போய் அவள்...."

பொன்னுத்துரை தங்குதடையின்றி வார்த்தைகளை அளந்தான்.

"அப்படியா சங்கதி.....?" அன்ன லெட்சுமி அதிர்ந்தே விட்டாள்.

பெண்கள் இப்படித்தான். உணர்ச்சி வசப்படுதலில் ஆண்களைவிட கெட்டிக்காரர் களோ? உடனுக்குடன் தங்கள் நிறங்களைக்கூட மாற்றிக்கொள்வார்கள்.

"அன்னலெட்சுமி...என்ன நடந்தது என்று ஆறுதலாக அமைதியாக என்னிடம் ஏது என்று கேட்டாயா? ஏதோ கோபுரம் சரிந்தே போய் விட்டதென்று அல்லவா அடிச்சு புரண்டாய். யாரோ எவரோ ஆம்பிளைகள் பிழை விடுயினம் என்றதுக்காக அதே கண்ணோட என்னைப் பார்த்தால்... உண்மையை இப்ப சொல்றன்...நான் ஒரு ஆண்மகன் என்ற நிலையில்...

"தற்செயலாக போன.. போன.... புதன் கிழமை...இல்ல...சனிக்கிழமை...சனீஸ்வரர் கோவிலுக்கு போன நாள்..ஓம்... இவள் ராதா கிணத்தடியில குளித்துக்கொண்டு நின்றாள்... நான் பார்த்திட்டன். திரும்பவும் பார்க்க வேண்டும் போல இருந்தது... நான் பார்த்தன். அவள் குளிக்கிற காட்சி... அப்போதுதான் என்ர மனச் சாட்சி வேலை செய்தது... என்னையறியாமல் அவள் எப்படி குளிக்கிறதை தடுக்க வேண்டும் என்ற உணர்வே என்னிடம் வந்தது.

மூன்று நாட்களாகப் பார்க்கிறன். அவள் அப்படித்தான் அதே நேரத்தில் குளிக்கிறாள். எனக்கு ஒரு சந்தேகம்.. துருவிப் பார்த்தான். ராதா குளிக்கிற காட்சியை அனுபவிக்க பலபேர் காத்திருக்கினம் என்று... இவள் பேய்ப் பெட்டை... வஞ்சகம் இல்லாமல் குளிக்கிறாள்... அதுதான் பொறுக்க மாட்டாமல் இப்படி குளியாதை என்று சொன்னனான்..."

........

அன்னலெட்சுமி வாயே திறக்காது தன் கணவனை.....விழித்த கண் மூடாது பார்த்தாள்.

'முழிக்காத...என்னண்டு சென்னாள்...? நான் அடிக்கடி அவள் குளிக்கக்க கிணத்தடிக்குப் போய்..."

பொன்னுத்துரையின் வார்த்தைகள் தொடரா வண்ணம் அன்னலெட்சுமியின் கை அவன் வாயினைப் பொத்தியது.

"இப்ப தெரியுதே உண்மை..?"

"சரி... சரி... இதை இப்படியே விடும்..அப்பா.."

"எப்படி விட.... அதுதான் முடியாது..

"இந்த பிரச்சனைக்கு ஒரு பக்கமாய் உண்மை காண முடியாது. மறு பக்கமும் தேவை...அந்த ராதாவையும் கூப்பிட்டு ஆறுதலா விசாரி. ராதா நல்ல பிள்ளை. அவள் இந்த வயசில இப்படி பேச வைத்து... பின்னால இந்த சமூகத்துக்கு தேவையற்றவள் ஆக்கிவிடக்கூடாது. அதற்கு நாமும் வடிகால் ஆகக்கூடாது...அதுவரை நான் சாப்பிட மாட்டன்... எங்க உண்மை என்றதை..நீ அறிய வேணும்.."

தன் உடுப்புக்களை களைய பொன்னுத் துரை வீட்டுக்குள் ஏறினான். அவனோடு இத்தனை நேரமாக அம்மாவோடு நின்ற பிள்ளைகள்- இப்போது சேர்ந்து கொண்டார் கள். அம்மாவை ஏளனமாக பார்க்கிறார்களா? அவர்கள்..?

அன்னலெட்சுமியை சுற்றி...சுற்றி...

இப்போது 'ராதா' வரத் தொடங்கினாள்.

---

"கதாநாயகியைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் விரும்பினால்..."

# ஆசையே அலை போல

சிலாபம் பொ.புஷ்பராஜ்

காலை 6.10இருக்கும். முத்துக் குமாரி ரயில்-சிலாபத்திலிருந்து கொழும்பை நோக்கி புறப்பட இன்னும் ஒரு சில நிமிடங்களே இருந்தது. முத்துக் குமாரி காலை ரயிலில் எப்போதும் அரசாங்க உத்தியோகத்தர் கள்தான் பயணம் செய்வது வழக்கம். அன்று விடுமுறை தினமாகையால் பயணிகள் வெகு குறைவாகவே இருந்தனர்.

நீலாவும் பயணச் சீட்டை பெற்றுக் கொண்டு வெகு வேகமாக ஓடி ரயிலில் ஏறினாள்.

சுகவீனமுற்று கொழும்பு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தன் தந்தையைப் பார்ப்பதற்காக கொழும்புக்கு போகிறாள்.

ரயிலும் இப்போது நாத்தாண்டிய ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. இன்று நாத்தாண்டிய நகரில் சந்தை நாள். ஆகையால் நிறைய பயணிகள் இங்கு இறங்கினர். இறங்க முற்படும் பயணிகளுடன் முட்டி மோதிக்கொண்டு 30 வயது பெண் ஒருத்தியும் நீலா இருந்த பெட்டியினுள் ஏறினாள்.

அவளும் பெட்டியினுள் அங்கும் இங்கும் சென்று பார்த்தாள்.

நீலாவைத் தவிர வேறு ஒருவருமே இல்லை. நீலாவின் இருக்கைக்கு முன் இருக்கையில் உட்கார்ந்தாள்.

இவள் வேறு யாருமல்ல. பிரபல பாடகி பாஷானியின் ஒரே தங்கை. நாத்தாண்டிய தனியார் ஆடை தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றில் 'ஸ்டோர் கீப்ப'ராக தொழில் புரிகிறாள். இவள் தான் பாடகி பாஷானிக்கு பாடல் எழுதித் தருபவள். பெயர் கீதானி.

நீலாவும் கீதானியும் ஒன்றுமே பேசிக் கொள்ளவில்லை. ஏன் என்று தெரியவில்லை.

ரயில் இப்போது நீர்கொழும்பு ரயில் நிலையத்தில் நின்றது.

ஒரு ஜேம்ஸ்பொண்ட் சூட்கேசுடன் ஒரு முப்பது வயதுடைய வாட்டசாட்டமான இளைஞன் மிகவும் பரபரப்புடன் ஒவ்வொரு பயணிகள் பெட்டியாக பார்த்துக்கொண்டே போனான்.

இதை நீலா அவதானித்துக்கொண்டு இருந்தாள். எதையோ தேடிக்கொண்டு கடைசி பயணிகள் பெட்டிவரை சென்றவன், மீண்டும் திரும்பிவருவதைக் கண்டவுடன் ஒரு புன்னகையை மெதுவாக உதிர்த்தாள்.

எறும்புக்கு கரும்பு கிடைத்ததைப் போல நீலாவின் புன்னகையால் அந்த இளைஞனும் அந்தப் பயணிகள் பெட்டியில் ஏறி நீலாவின் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"ஹலோ"

நீலாவும் பதிலுக்கு "ஹலோ" என்றாள்.

ரயிலும் புறப்பட்டது.

ரயிலும் குலுங்கிச் செல்லும்போது இருவருமே உடலால் மோதிக்கொண்டனர். ஆனால் உள்ளங்கள் மோதிக்கொள்ள வில்லை.



மெதுவாக இளைஞன் நீலாவின் விரல் நுனியில் கிள்ளிவிட்டான். பதிலுக்கு அவளும் கிள்ளினாள். இருவருமே மெதுவாக சிரித்துக் கொண்டனர்.

"உங்கள் பெயர் என்ன?"

"எனது பெயர் விஜயன். நான்தான் டி.வி.யில் தமிழ் நாடகம் தயாரிப்பவன். எனது பெயரை அடிக்கடி டி.வியில் பார்த்திருப்பீர்கள் என எண்ணுகிறேன்."

நீலாவுக்கு ஒரே குஷி. 'ஒரு பிரபல மனிதரையல்லவா அறிமுகமாக்கிக்கொண் டோம்! இன்று யார் முகத்தில் விழித்தோமோ தெரியவில்லையே'

"ஆ...அவர் நீங்கள்தானா?" மிகவும் சந்தோசம்.

"நன்றி."

"போன வாரம்கூட டி.வி.யில் உங்களின் ஒரு நாடகம் காண்பிக்கப்பட்டதல்லவா? நாடகத்தின் பெயர்கூட..." உதட்டில் ஆள் காட்டி விரலை வைத்துக்கொண்டே யோசித்துவிட்டு "ஆமாம்..! ஆமாம்..!" 'மனசை பார்த்து தான் வாழ்வை மாத்துவான்' இச்சா இது நல்ல நாடகம்."

"நன்றி" என்றான் மீண்டும் விஜயன்.

"உங்களின் அடுத்த தயாரிப்பு என்ன?"

"ஆசையே அலை போல' என்ற நாடகம். இதன் படப்பிடிப்பு அனைத்தும் அட்டன் நகருக்கு அருகில் உள்ள டிக்கோயாவில் வைத்துதான் நடைபெறவுள்ளது."

"ஏன் அவ்வளவு தூரம் போகிறீர்கள்? கொழும்பு, சிலாபம், புத்தளம் பகுதிகளில் இயற்கை காட்சிகள் உள்ளதே."

"ஆசையே அலை போல' டி.வி. நாடகம்; மலையக மக்களின் வாழ்வுடன் கூடிய கதை"

"அப்படியா" என்றாள் நீலா.

ரயிலும் வேகமாக ஓடிக்கொண்டி ருந்தது.

இவ்விருவரின் சகல சம்பாசணைகளை யும், அங்கசேஷ்டைகளையும் அமைதியாக கீதானி பார்த்துக்கொண்டிருந்தாள்.

"கதாநாயகியைத்தான் தேடிக்கொண் டிருக்கிறோம். எல்லா நடிகர் நடிகைகளும் தெரிவு செய்யப்பட்டுவிட்டார்கள். நீங்கள் விரும்பினால்.." என்று பேச்சை இழுத்தான் விஜயன்.

"நானா..?"

"ஆமாம். உங்கள் முகவெட்டு எனது கதையின் நாயகிக்கு ஏற்றாற்போல உள்ளது. விரும்பினால் நடிக்கலாம்."

"ஐயோ" நீலாவுக்கு ஒரே சந்தோசம். 'ஆசையே அலை போல' நாடகத்தில் தொலைக்காட்சி கெமராமுன் நடிப்பது போல மனதுக்குள் எண்ணிக்கொண்டாள். நீலா கைக் குட்டையின் ஒரு பகுதியை தன் பல்லினால் கடித்துக்கொண்டே வெட்கத் துடன் தலையை குனிந்தவாறு நடிக்க விருப்பம் என்றாள்.

"மிகவும் சந்தோசம். கொழும்பில் இறங்கியதும் முதலாவதாக எனது காரியால யத்துக்கு சென்று உங்களை எனது நாடக நடிகர், நடிகைகளுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்" என்றான் விஜயன்.

இப்போது ரயிலும் றாகமை ரயில் நிலையத்தை வந்து சேர்ந்துவிட்டது. ரயில் வந்து சேர்ந்த வேகத்துடன் விஜயனும் நீலாவிடம்... "நாடகம் தயாரிப்பதற்காக நீர்கொழும்பில் உள்ள எனது வீட்டை பத்து இலட்சத்துக்கு விற்று பணத்தை இந்த சூட்கேசில் வைத்துள்ளேன். சோடா குடித்து விட்டு வந்து விடுகிறேன். இப்படியே சூட்கேஸ் இருக்கட்டும் பார்த்துக்கொள் ளுங்கள். கவனம். மெத்தனமாயிருந்துவிட வேண்டாம்" என்று அவளின் காதோடு காதாக மெல்லிய குரலில் சொல்லிவிட்டு ரயிலிலிருந்து இறங்கி ரயில் நிலைய கென்டினுக்குள் நுழைந்தான்.

ரயிலும் புறப்பட்டுவிட்டது. விஜயனும் வந்தபாடில்லை. நீலாவுக்கு ஒரே சந்தோசம். சூட்கேசில் பத்து இலட்சம். தன் தலைக்கு மேலே பொதிகள் தட்டில் இருந்த சூட்கேசை வைத்தகண் மாறாது பார்த்துக்கொண்டே யிருந்தாள்.

கீதானியும் நடந்த அனைத்தையும் பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

ரயிலும் கொழும்பில் கோட்டை ரயில் நிலையத்தில் வந்து நின்றது.

பயணிகள் அனைவரும் இறங்கி விட்டனர். நீலாவும், கீதானியும் சூட்கேஸுக் காக வாக்குவாதப்பட்டனர். ரயில் நிலைய பொலிசாருக்கு விசயம் தெரிய, இருவரை யும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணை நடைபெற்றது. இருவருமே சூட்கேஸ் தங்களுடையது என்றனர். சூட்கேசில் பத்து இலட்சம் இருப்பதாக கூறினர்.

செய்வதறியாது நின்ற பொலிஸ் அதிகாரி சூட்கேசைத் திறந்துப் பார்த்தார்.

எல்லோருமே வியப்படைந்தனர்.

ஆமாம். சூட்கேசில் சுமார் ஐந்துநாள் சிசு ஒன்று இறந்த நிலையில் வெள்ளைத் துணியில் சுற்றி வைக்கப்பட்டிருந்தது.

நீலாவும், கீதானியும் கள்ள முழி முழித்தனர். விஜயன் தந்த முகவரியில் பொலிசார் விசாரித்தபோது அசல் நாடக தயாரிப்பாளர் விஜயன் காலமாகி ஆறுமாதமாகிவிட்டதாம்.

ஆமாம்..! 'ஆசையே அலை போல நாம் எல்லாம் அதன் மேலே, ஓடம் போலே ஓடிடுவோமே வாழ் நாளிலே.....!'

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

**தனது சுக-துக்கங்களைக்கூட நிர்ணயிக்க முடியாதளவுக்கு பெண்ணை பலவீனப்படுத்தி வைத்திருப்பதுதான் ஆண்மையின் பலமா?**

# இரசனைகள்

## கலைமலர்-காத்தான்குடி



'சீ' சேய்! இதென்ன வாழ்க்கை?'

என்னுள் மலர்ந்து நின்ற எதிர்பார்ப்புகளையெல்லாம் பூவோடும் பிஞ்சோடும் யாரோ பறித்துவிட்டதைப் போன்ற வேதனையில் மனம் கசந்து கொள்கின்றது.

"ஒரு கவிதையைக்கூட இரசிக்கத் தெரியாத மனமா? எத்தனை எதிர்பார்ப்புக்களைச் சுமந்துகொண்டு இந்த உறவிற்குள் காலடி எடுத்து வைத்தேன். உண்பது உறங்குவது இன்ப துன்பங்களுக்கு முகம் கொடுப்பதென்று சாதாரணமாய்; எல்லோருக்கும் அமைவது போன்று எனது வாழ்க்கையும் அமைந்து முடிந்துவிடுமா? ஓஹ்! திருமணமாகிய இந்த இரண்டு மாசத்திற்குள்ளும் ஒரு நல்ல கணவனாக என்னுடன் பொருந்திய அவரால் என்னோட வித்தியாசமான உணர்வுகளை சிந்தனைகளை வெளிப்பாடுகளை புரிந்துகொள்ள முடியாமலே போய்விடுமா?" நினைக்கும்போதே நெஞ்சு சோர்ந்து போனது. விழிக்கடையில் கசிந்த நீரோடு மனக்கண் நேற்றுக்காலையில் நடந்த சம்பவங்களை அசைபோட்டுப் பார்க்கத் தொடங்கியது.

திவாகர்..; அதுதான் என் கணவரோட பெயர். ஆபிஸுக்குப் போகும் ஆயத்தத்துடன் சாப்பிட்டுக்கொண்டிருந்த சமயம்தான் அந்த வாரத் தினமுரசை ஏந்தியபடி சந்தோஷத்துடன் அவரை நெருங்கினேன்.

"திவா! திருமணமாகி திருமதியானதற்குப் பிறகு முதன் முதலா என்னோட கவிதையொன்று முரசில வெளிவந்திருக்கு. படிச்சுப் பாக்கிறீங்களா?"

புன்னகையுடன் நிமிர்ந்த அவர்..

"ஓஹ்! நிஜமா; என்னோட வாழ்த்துக்கள். ஆனா நித்யா இப்ப படிக்கேலாதேம்மா; ஆபிஸுக்குக் கிளம்பணும். பிறகு பார்க்கலாம் தானே. ம்.."

செல்லமாகக் கன்னத்தில் தட்டிச்சென்ற அவரை நானும் புன்னகையுடனேயே வழியனுப்பி வைக்கின்றேன். வேலைக்குப் போகும் அவசரம்; வந்து ஆறுதலாக இருக்கும் நேரம் மறக்காமல் காட்டிட வேணுமென்று வேலைகளினூடே அடிக்கடி நினைத்துக் கொள்கின்றேன்.

அன்றிரவு எட்டு மணிபோல; ஓய்வாகச் சாய்ந்திருந்த திவாகரிடம் மறுபடியும் பத்திரிகையை நீட்டுகின்றேன். மறுபடியும் அதே ஸாரி..

"ஸாரி; நித்யா டியர். இப்போ கவிதை படிக்கிற மூடில நான் இல்லம்மா. ஒரே தலைவலி. எப்போ வேலையெல்லாம் முடிச்சிட்டு வருவீங்க கொஞ்சம் தலையைப் பிடிச்சு விடச் சொல்லலாம்னு காத்துக்கிட்டிருந்தேன். ப்ளீஸ் நித்யாம்மா; இப்போ இந்தத் தங்கக் கையாலே தலையைப் பிடிச்சு விட்டிங்கென்றா உங்கட ஒரு கவிதையை என்ன; ஆயிரம் கவிதையை படிச்ச சுகம் எனக்குக் கிடைக்கும்....ம்.."

மடியில் சாய்ந்திருந்த அவரது தலையைக் கைகள் பிடித்து விட்டாலும் மனம் மட்டும் பிடிபடாமல்; ஓவென்று அழுது துடித்துக்கொண்டிருந்தது.

அதன் பிறகு திவாகர் அந்தக் கவிதையை கேட்கவுமில்லை; படிக்கவுமில்லை. அந்தச் சம்பவத்தையே மறந்துவிட்டதைப்போலக் காணப்பட்டார். என்னால்தான் அந்த முதல் ஏமாற்றத்தை ஜீரணிக்க முடியாமல் பெரும் அவஸ்த்தையாக இருந்தது. அப்படி அவஸ்த்தைப் படும்பொழுதெல்லாம் மனம் அடிக்கடி தாரணியைத்தான் நினைத்துக் கொள்ளத் தொடங்கியது.

தாரணி... ஊரில் என்னுடன் ஒன்றாகப் படித்தவள். எமது பாடசாலையின் லதா மங்கேஷ்கார். அப்படியொரு குரல் வளம் அவளுக்கு. விழாக்கள், கலை நிகழ்ச்சிகள், ரேடியோ, டி.வி. எங்கே பாடச் சென்றாலும் பரிசையும் பாராட்டையும்தான் அள்ளிக் கொண்டு வருவாள். பள்ளிப்படிப்பு முடித்த கையோடேயே சங்கீத ஆசிரியையாக நியமனமும் பெற்றுவிட்டாள். இரண்டு வருஷம் அவளது தீவிர இரசிகனாக இருந்து காதலித்து அவளைக் கரம் பற்றியவன்தான் மகேஷ். எத்தனையோ பணக்கார வாலிபர்கள் அவளைச் சுற்றி வந்த போதிலும் தன்னுடைய இசையை இரசித்து நேசிக்கின்றான் என்ற ஒரே காரணத்திற்காக சாதாரண தரத்திலிருந்த மகேஷை அவள் ஏற்றுக்கொண்டாள். என்னைச் சந்திக்கும்பேதெல்லாம் அடிக்க கூறிக்கொள்வாள்.

"சமைக்காட்டியும் பரவாயில்ல நித்யா, நான் வீணை மீட்டினா போதும். ஒரு நாளைக்கென்றாலும் நான் பாடிக்கேட்கல்லேன்னா அவருக்குத் தூக்கமே வராதுடி. எல்லாத்தையுமே காஸெட் பண்ணி வைச்சிருக்கா பாரு; அத வைச்சு ஒரு கடையே திறக்கலாம். அவரைப் புருஷனா அடைய நான் ரொம்பவும் கொடுத்து வைச்சிருக்கோணும்டி."

அவள் கூறுவதைக் கேட்க எனக்குக்கூட பொறாமையாக இருக்கும். கொஞ்ச நாட்களின் பிறகு அவள் கணவருக்கு வேறு ஊருக்கு மாற்றலாக அவளும் மாற்றல் எடுத்துக்கொண்டு அங்கேயே போய்விட்டாள். சில வருடங்களின் பின்னால் எனக்கும் திருமணமாகி இந்த ஊருக்கு வந்துவிட்டேன். அதன் பிறகு அவளைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லைன்னாலும் அவளைப் போலவே எனக்கும் ஒரு துணை கிடைக்க வேண்டும் என்று நினைத்ததெல்லாம்கூடப் பொய்யாகிப்போய்விட்டது.

நாட்கள் மெல்ல நகர்ந்துகொண்டிருந்தன. திவாகரும் வேலைக்குப் போனால்; தனிமையின் பொழுதுகள் பெரும் சுமைகளாகப் போயிற்று. மனம் சோர்ந்து போனதாலென்னவோ எழுதுவதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அன்று..; மார்க்கெட் போய் தேவையானதை வாங்கி வந்து சமையலையும் கவனித்துப் போகும் கமலம் அக்கா வந்ததும் நிறுத்தி; அவளுடன்கூட நானும் மார்க்கெட் போக வெளிக்கிட்டேன். மீன், காய்கறி, மளிகைச் சாமானென்று எல்லாவற்றையும் வாங்கிக் கூடையில் அடைத்துக்கொண்டு திரும்ப எத்தனித்த நேரம்தான் அந்த.. அந்த.. முகத்தைக் கண்டேன்.

"தா...தாரணி..!"

தெருவென்பதையும் மறந்து கூவியே விட்டேன். சட்டென்று திரும்பிய அவளின் முகத்திலும் அதிர்ச்சியுடன்கூடிய பிரகாசம்.

"நித்தியா..நீ..நீ.."

இருவரும் கட்டியணைக்காத குறைதான். அத்தனை சந்தோஷம் இருவருக்கும். அதிகம் பழகியிராத ஊரில் அறிமுகமான முகங்களைக் கண்டால் புது உற்சாகமே ஊற்றெடுக்கும் அல்லவா? பக்கத்துத் தெருவிலிருக்கும் அவளது வீட்டுக்கு வரும்படி விடுத்த அழைப்பை என்னால் மீறவே முடியவில்லை. எனக்கும் அந்த மாறுதல் தேவையானதாகவே இருந்ததால், போய் சமையலைக் கவனிக்கும்படி கமலம் அக்காவிடம் சொல்லிவிட்டு தாரணியுடன் புறப்பட்டேன்.

ஓரளவு வசதியாகத்தான் தாரணியின் வீடு அமைந்திருந்தது. அத்தியாவசிய ஆடம்பரப் பொருட்களென்று வீடு நிறைந்திருந்தது. மூன்று வயசும் ஒரு வயசும்போல் இரண்டு குழந்தைகள்.. வேலைக்காரப் பெண்ணொருத்தி. எல்லாவற்றையும் நோட்டமிட்டபடி மௌனமாக அமர்ந்திருந்தேன். தாரணிதான் முதலில் தொடங்கினாள்.

"நாங்க இங்க வந்து ஒரு வருஷமாச்சு நித்யா. நீ இங்க இருக்கிறது தெரியாமலே போச்சு. உன்னோட திருமண அழைப்பிதழ் கிடைச்சும் என்னால வரமுடியல்லடி. ம்...ஹும்; அரேன்ஜ் மரேஜ்தான் என எழுதியிருந்தாய். எப்படி நித்யா..லைவ்-லைஃப் எல்லாம்? பிடிச்சிருக்கா..?" கேள்வியுடன் நிறுத்தி எனது முகத்தைப் பார்த்தாள் தாரணி. இவளின் முன்னால் உடைந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் சந்தோஷமாகப் புன்னகைத்தபடி..

"ரொம்ப நல்லாயிருக்கேன் தாரணி. பார்த்துப் பல வருஷமாச்சு இல்லையா? உன்னோட தோற்றத்திலகூட நிறைய மாறுதல் தெரியுது. நீ எப்படியிருக்கே..?"

மிகவும் சந்தோஷமாக இருப்பாள் என்ற நினைவில் சும்மா ஒரு பேச்சுக்காகத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தேன். ஆனால் மேலே சுற்றும் ஃபானையே பார்த்துக் கொண்டிருந்தவள் கண்கள் மெல்லக் கலங்குவதைக் கண்டதும் எனக்கு தூக்கி வாரிப் போட்டது.

"நல்லாயிருக்கேன் என்று உங்கிட்ட பொய் சொல்ல என்னால முடியல்ல நித்யா, நல்லாயிருக்கிற மாதிரி நடிச்சிட்டு இருக்கேன்."

அழுகையுடன் நிறுத்திய அவளை.. அவளது பேச்சை என்னால் நம்பவே முடியவில்லை. அவளே தொடர்ந்தாள்.

"உன்னால நம்ப முடியல்லயா நித்யா? ம், அவரையும் அவரது ரசனைகளின் நிஜங்களையும் புரிந்துகொண்டபோது என்னாலகூட எதையுமே நம்பமுடியாமல் ஆச்சரியமாகத்தான் இருந்தது. எல்லாமே பொய் வேஷம்.."

அழுகையுடன் துடித்த அவளை இடை நிறுத்தி,

"தாரணி நீ..நீ..என்ன சொல்கின்றாய்? எ..எனக்கு எதுவுமே புரியவில்லையே?" நிறுத்தியவள் தொடர்ந்தாள்.

"மூத்தவள் ஜானகி கிடைக்கு மட்டும் எனது வாழ்க்கையும் சந்தோஷமான சங்கீதத்தைப் போலத்தான் இருந்தது நித்யா... இவ பிறந்து ஆறு ஏழு மாசத்திலேயே இவளுக்கு ஆஸ்த்மா ஏற்பட்டுப்போச்சு. மாசத்தில ரெண்டு தடவையாவது ஆஸ்த்மா வந்து படுத்திடுவாள். நாங்க எதிர்பார்க்காமலே இளையவன் மனோவும் தரிச்சிட்டான். காலையில ஸ்கூல் போகணும். பின்னேரம் முப்பது நாற்பது பிள்ளைகளுக்கு ட்யூஷன் கொடுக்கணும். இதெல்லாம் போதாதென்று ஒவ்வொரு இரவிலும் பரீட்சை எடுக்கும் பிள்ளைகளுக்கு ஸ்பெஷல் கிளாஸ் நடத்தணும். என்னால முடியல்ல.. நித்யா; முடியல்ல இதுயாருமே தலையிட முடியாத, கணவன் மனைவி இருவருமே பார்த்துத் தீர்த்துக்கொள்ளவேண்டிய பிரச்சினை. அழுது கெஞ்சி சண்டை பிடித்து எல்லா வகையிலுமே சொல்லிப் பார்த்திட்டேன். ம்.. எனது சங்கீதக் கலையாலே இன்னும் ஏதாவது வருமானம் வருமென்றால், அதற்கு ஒழுங்கு பண்ணித்தருவாரே தவிர ஏற்கனவே வந்துகொண்டிருக்கும் வருமானத்தில் ஒன்றைக்கூட இழக்க அவர் தயாரில்லை நித்யா.

"என்னோட சங்கீதத்தை இரசித்தது நேசித்தது மதித்தது எல்லாமே பொய் வேஷம். உடம்பிற்கு ஆடை போட்டு மறைக்கிறதைப்போல மனதையும் மறைச்சி என்னை ஏமாத்திப்போட்டார். எந்த சங்கீதத்தை உயிராக மதிச்சேனோ அதையே எனக்கு விலங்காக்கிப் போட்டார். எந்தக் கலையை தெய்வீகமென்று மகேஷ் கொண்டாடினாரோ, அந்தக் கலையையே காசுக்காக விற்கத் துணிந்திட்டார். வெளி உலகத்திற்கு- மனிதர்களுக்கு, நாங்க வசதியானவங்க என்று பிரகடனப்படுத்துவதற்காக அப்படியொரு பிரமையை உண்டு பண்ணுவதற்காக என்னோட ஆத்ம திருப்தியை அமைதியை இழந்திட்டேன் நித்யா..இழந்திட்டேன்.."

சொல்லிவிட்டு குமுறிக் குமுறி அழுதாள் தாரணி. எனது கண்களிலும் ஈரம். இப்படியும் ஆண்கள் இருப்பார்களா..? தன்னோட சுக துக்கங்களைக்கூட தானே நிர்ணயித்துக் கொள்ள முடியாதளவிற்கு பெண்ணைப் பலவீனப்படுத்தி வைத்திருப்பதுதான் ஆண்மையின் பலமா..? ஓஹ்!... திருமணமான புதிதில் ஒருநாள்; திவாகர் என்னிடம் சொன்னது ஞாபகம் வந்தது.

"நித்யா! சின்ன வயசில இருந்து இதிலெல்லாம் இன்ரெஸ்ட் எடுத்து ஈடுபடாததாலோ என்னவோ, இப்பகூட ஒரு கவிதை புரியணுமென்றா அமைதியா இருந்து ஆறுமா அதை ரெண்டு மூன்று தரம் படிச்சுப் பார்க்கணும். ஆனா எழுதுறவங்க பாடுறவங்க ஆடுறவங்க இவங்களை எல்லாம் கண்டா மனசுக்குள்ள ஒரு மதிப்பு ஏற்படும். எல்லோருக்கும் கொடுக்காத ஏதோ ஒரு சக்தியை கடவுள் அவங்களுக்குக் கொடுத்திருக்கார் என்று நினைக்கத் தோன்றும். எனக்கு இன்ரெஸ்ட் இல்லேன்னாலும் பரவாயில்லை. நீங்க நிறைய எழுதணும் நித்யா.."

ஓ! பலவீனத்தின் மீது பலத்தை பிரயோகிக்கத் தெரியாத திவாகர். உண்மையை- இயலாமையை ஒளிக்கத் தெரியாத திவாகர். நிஜத்தை நிஜமாகவே ஏற்றுக்கொண்டு என் ரசனைகளில் குறுக்கிடத் துணியாத திவாகர் உயர்ந்தவர்..மிகவும் உயர்ந்தவர். கலையை இரசிக்கத் தெரிவதற்கு முதல் அதனோட உயர்ந்த தன்மையை உணர்ந்து மதிக்கத் தெரியணும். என்னோட... என்னோட திவாகருக்கு மதிக்கத் தெரியும்.

தாரணியைத் தேற்றிவிட்டு வீடு திரும்பிய எனக்குள் ஒரு உறுதியான தெளிவிருந்தது.

# காதல் ஓய்வதில்லை!

## பூண்டுலோயா மெய்யன் நட்ராஜ்



ஸ்கூல் மாஸ்டர் சின்னத்தம்பி பொழுது விடிஞ்சாச்சென்றால் வழக்கமாக சிம்லாஸ்பெஷலில் எம்.ஜி.ஆர் நகருக்குள் செல்வார். என்றும் அன்புடன் கிழக்கே போகும் ரயிலில் கிழக்குச் சீமையிலிருந்து ரயில் பயணங்களிலே பயணம் செய்யும் அவர் அன்றும் பயணங்கள் முடிவதில்லை என்றெண்ணி பட்டணத்தில் பெட்டியுடன் அண்ணா நகர் முதல் தெருவில் எல்லோரும் நல்லவரே என்றவாறு சென்றுகொண்டிருக்கையில் பிக்பொக்கட் ஒருவன் பின்னால் வந்து "வணக்கம் வாத்தியாரே" என்றது திருடா திருடா என்று எச்சரிப்பது போலிருக்கவே திரும்பிப் பார் என்று சொல்லத் துடித்த மனசை திறக்காமல் மௌன ராகம் பாடினார்.

அவரின் மௌன கீதங்கள் புரியாத அவன் மறுபடியும் "தம்பி ஊருக்கு புதுசோ" என கிண்டலாய் கேட்க மறு பக்கம் திரும்பியவர் "யார் நீ ஊருவிட்டு ஊருவந்து நம்ம ஊரு நல்ல ஊரு என நம்பிக் கொண்டிருக்கும் என்னிடம் திருடன் மாதிரி வந்து தப்புத் தாளங்கள் போடுகிறாய்" என முரட்டுக் காளையைப்போல் பாய்ந்தார்.

அவனோ! அம்மா... பொல்லாதவன் போலிருக்கே என நல்லவன் அவரிடம் மன்னிப்புக் கேட்டு திசைமாறிய பறவையானான். அவன் சென்றதும் சாந்தியில் ஒரு மாணவி என் காதலி பார்ப்பதற்காய் உள்ளே வெளியே நோட்டமிட்டுவிட்டு உள்ளே நுழைந்தார். அங்கே அவரின் வண்ணக்கத்திற்குரிய காதலி, காதல் தேவதை செவ்வந்தி வந்திருந்தாள். அவள் ஒரு ஜீவநதியாக கண்ணுக்கு மையெழுதி வந்திருந்ததை பார்த்தாலே பசிதீரும். பாலும் பழமும் தேவையில்லை. என அவளை அழகே உன்னை ஆராதிக்கிறேன் என்று மனசுக்குள் மத்தாப்பூ சிதறக்கண்டார்.

அந்த நல்ல நேரம் அவரின் காஷ்மீர் காதலி "வா அருகில் வா" என்னருகில் நீயிருந்தால் காலமெல்லாம் உன் மடியில் கவிதைபாடும் அலைகள்" என கண்களால் அழைக்கவே, கண்ணோடு கண் வைத்த அவரும் "உன் வாழ்வு என்னோடுதான். உனக்காகவே வாழ்கிறேன். உன்னிடம் மயங்குகிறேன். கலங்காதே மனமே நானே வருவேன்" என உறுதிமொழி பகர்ந்து அவள் பக்கத்தில் போய் அமர்ந்தார்.

"என் பொட்டுக்கு சொந்தக்காரன் நீ பூமாலை சூடும் நல்லநாளுக்காய் காத்திருப்பேன் உனக்காக. பருவத்தின் வாசலிலே பதினாறு வயதினிலே கன்னிப்பெண் என் காத்திருந்த கண்கள் காதலன் உன் அன்பைத்தேடி வந்தபோது காதலிக்க நேரமில்லை காத்திருக்க நேரமில்லை என அவசர பொலிஸ்போல போனீர்களே உங்களுக்கு கவிதைபாடகூட நேரமில்லையா? என் கேள்விக்கு என்ன பதில்" என்றாள் அவள்.

அவரோ "அன்புள்ள மலரே, காதல் ஒரு கவிதை. என் இதயத்தில் நீ பூ பூவாய் பூத்திருப்பதால் பூங்காவில் நாம் சந்திப்பு நிகழ்த்தி டூயட் பாட உன் அடுத்த வீட்டுப் பெண்ணிடம் தூது போவாயா தென்றலே என தூதுவிட்டு பூங்காவில் காத்திருந்த அந்த ஏழு நாட்கள் நினைத்தாலே இனிக்கும் வசந்தகாலம். நீ வராமல் போனது நான் எதிர்பாராதது. பூந்தோட்டக்காவல்காரன் நல்லவனுக்கு நல்லவன். பூக்களைப் பறிக்காதீர்கள். பூக்கள் விடும் தூதால் தண்டனை எனக்கே! பூவுக்குள் பூகம்பம் வேண்டாம் என்றதால் புதிய பறவை உன்னை அன்பே வா என அழைக்க ஒரு புதுக்கவிதை எழுதினேன். இதோ அது.

*மூடுபனியாய் நூல்வேலி போட்டிருக்கும்*
*உயிரே உனக்காக மெல்லத் திறந்தது*
*கதவு.*

*பூவே இளம் பூவே உத்தமன் நான்*
*பூவிழி வாசலிலே காதல் வரம் கேட்டு*
*ராஜரிஷிபோல் தவம் செய்கிறேன்.*
*நெஞ்சிலோர் ஆலயம் அமைக்க உன்*
*நெஞ்சத்தை அள்ளித்தா. நெஞ்சத்தைக்*
*கிள்ளாதே*
*நீங்காத நினைவில் ஆயிரம் முத்தங்கள்*
*இடுவேன்.*
*மனைவி அமைவதெல்லாம் இறைவன்*
*கொடுத்தவரம்*
*மனைவி சொல்லே மந்திரம்*
*மனைவி ஒரு மந்திரி என அறிந்*
*திருந்ததால்*
*உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்.*
*சம்சாரம் அது மின்சாரமாகாமல்*
*சம்சாரம் என்பது வீணையாகி*
*சம்சார சங்கீதம் பாடி வா தென்றலே*
*இதயக் கோயிலில் தீபம் ஏற்றுகிறேன்.*

கவிதையை அவர் வாசித்து முடிந்தபோது கறுப்பு வெள்ளை படம் ஓட ஆரம்பித்தது. இடைவேளையுடன் எழுந்து வந்துவிட்ட அவர்கள் வெளியே வந்து கிழக்கு வீதியில் நுழைந்தபோது எதிரே வந்த அவளின் அன்புள்ள அப்பா இருவரையும் ராஜபார்வை பார்த்தபோது முதல் மரியாதை செய்தார்கள். அந்த ஜஸ்டிஸ் கோபிநாத்தின் பார்வையின் மறுபக்கத்தில் தென்றல் சுடும் தீ எரிந்தது. அப்போதே அவளை இழுத்துச் சென்றவர் அவரின் வசந்த மாளிகையில் பொன் வண்டு அவளை சிறை வைத்தார்.

"அன்றிலிருந்து நியாயம் கேட்கிறேன் என் காதல் கண்மணிக்கு காதல் விடுதலை தாருங்கள்! இல்லாவிட்டால் இதோ இன்னொரு தேவதாஸ் என என்னை எண்ணிக்கொள்ளுங்கள். நான் குடித்துக் கொண்டே இருப்பேன் என நீலக்கடலின் ஓரத்திலே தணியாத தாகத்தோடு" மதுக்கவிதை எழுதும் சின்னவர் போராட்டம் செய்கிறார்.

மனிதனாக இருந்த வாலிபன் நான் சிகப்பு மனிதன் என்னும் அதர்மம் கொண்டவனாய் மாறுமுன் நியாயம் வந்தால் காதல் ஓய்வதில்லை. அன்றேல் வசந்தகால பறவை அவளின் கண்ணீரும் ஓய்வதில்லை.





# இலக்கிய நயம்

# இனியவர் ஏன் எனை வெறுத்தார்?

அரசி பொற்கொடி தேவி சிம்மாசனத்தை அலங்கரித்துக்கொண்டிருந்தாள்.

பதினெட்டு வயதானபோதே அரச பதவி இளம் தோள்களில் ஏறி அமர்ந்தது.

தந்தை களத்திலே வீரச்சாவை விரைந்தழைத்தபோது, மன்னன் தரித்த முடி மகளின் சிரசேறியது.

இளம் கன்று பயமறியாது. பொற்கொடி புயலாய் மாறி களம் புகுந்த காட்சிகள் கவிஞர்களின் கருப்பொருளாகியதுண்டு.

ஆணின் கரத்திற்குள் சிக்கி, சிந்தைக்கு களிப்புத் தருவதற்குத்தான் பெண்ணுக்கு சிற்றிடையை பிரமன் படைத்தான் என்று சொன்னவன், பொற்கொடியை பார்க்கவில்லை. புயலாக மாறி அவள் போரிடும் கோலத்தை காணவில்லை என்றுதான் அர்த்தம்.

வளையல் அணிந்து அழகு பார்க்கவே வனிதையர் கரம் என்று நினைப்பவர்கள், பொற்கொடி வாளேந்தி பகைவன் சிரம் சீவும் களவீரக் காட்சி கண்டபின்னால் தம் நினைப்பை மாற்றிக்கொள்வர்.

அன்ன நடைப் பெண்களால் கன்னல் மொழி பேசி இதழ் கிண்ண அமுதரசம் தரமட்டுமே முடியும் என்று கவி செய்தவர்கள், பொற்கொடி அந்நியர் படை சூழும் செங்களத்தில் அவர்களைப் பந்தாடி வெற்றிச் செருக்குடனே "நிமிர்ந்த நடையோடு நேர்கொண்ட பார்வையோடு" வரும் வேக காட்சிகண்டால் தம் கவிகள் தப்புக் கவிகள் என்று ஒப்புக்கொள்வர்.

அந்தப் பொற்கொடி இப்போது தன் அந்தரங்க ஆலோசனை மண்டபத்திற்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்துகொண்டிருந்தாள்.

உள்ளத்தின் உள்ளே புயல்வீசிக் கொண்டிருந்தது. அது அவள் நடையில் தெரிந்தது.

தோழிப் பெண்ணுக்கு அர்சியின் நிலைகொள்ளாத் தவிப்பு புரிந்தது.

'என்ன பலமான யோசனை அரசியாரே?'

என்று கேட்கலாம். தய்க்கமாக இருந்தது. அரசியின் தவிப்புக்கு என்ன காரணம் என்று தோழிப் பெண்ணால் ஊகிக்க முடிந்தது.

□

"உங்கள் விடுதலைக்கு உடனடி ஏற்பாடு செய்யப்படும் இளவரசே."

போரில் கைதியான தர்மபுரி இளவரசன் தயாளதேவனிடம் அரசி பொற்கொடி அந்தச் சேதியைச் சொன்னாள். சொல்லிவிட்டு அவன் முகத்தை நோக்கினாள்.

விடுதலைச் செய்தி அவனுக்கு களிப்பாக இருக்கும் என்று எதிர்பார்த்தாள்.

தயாளதேவன் முகம் கல்லாக இருந்தது. முகபாவ மாற்றம் ஏதும் காணாத அரசி வினா தொடுத்தாள்,

"இளவரசருக்கு விடுதலைச் செய்தி இனிப்பாய் இல்லைப் போலிருக்கிறது!"

தயாளதேவன் அப்போதும் முகத்தை கல்லாகவே வைத்துக்கொண்டு உதடுகளை மட்டும் அசைத்தான்.

"தயாளதேவன் கோழையல்ல."

தந்தை காலத்துப் பகை. மன்னர்களுக்குரிய மதம் பக்கத்து நாட்டை பணியவைக்கத் தூண்டியதால் மூண்ட போர்- நியாயமில்லாத ஆக்கிரமிப்பு.

வாலாட்டினால் ஒட்ட நறுக்குவது நியாயம்.

ஆனால் வம்புக்கே வராத நாடுமீது ஆள்-அம்பு-சேனை கொண்டு போர் தொடுத்தது அநியாயம்.

பொற்கொடிக்கு தயாளதேவனின் நாட்டு மக்களது கோபம் சரியென்று பட்டது.

சிறைபிடிக்கப்பட்ட தயாளதேவனை சிறையில் இருந்து விடுவிக்கலாமே என்று அமைச்சர் சொன்ன யோசனை பிடித்திருந்தது.

தயாளதேவனையும் பிடித்திருந்தது. இருட்சிறையில் இருந்து விடுதலை.

இதயச் சிறையில் மட்டும் அயுள் கைதியாக இருக்கவேண்டும் இளவரசன்!

அதுதான் பொற்கொடியின் ஆசை. ஆனால் இளவரசனோ வார்த்தைகள் என்னும் வாளால் அந்த ஆசையை வெட்டிச் சாய்க்க வன்றோ அவசரப்பட்டுக்கொண்டிருந்தான்.

பொற்கொடி கனிவான குரலில் கண்களில் கனவோடு அவனை நோக்கியபடி பேசினாள்,

"இளவரசே, நடந்தவை யாவும் கனவாகப் போகட்டும். நடக்கப்போவது இனிய கதையாக மாறட்டும். நம் தந்தையர் காலத்தில் பட்டுப் போன உறவை நாம் நட்பெனும் நீரூற்றி வளர்த்துவிடுவோம்."

இளவரசன் நிமிர்ந்து இகழ்ச்சி விழிகளில் தெரிய அரசியை நோக்கினான்.

"உங்கள் தந்தையர் காலத்தில் தூஷிக்கப்பட்ட மக்களை தாங்கள் நேசிக்கிறீர்களா அரசியாரே?"

"முற்றிலும் உண்மை. நேசிப்பது மக்களை மட்டுமல்ல"

கடைசி வார்த்தையைக் கூறும்போது அரசி தலைகுனிந்து தன் முகத்தின் வெட்கம் மறைத்துக்கொண்டாள்.

"புரியவில்லை."

"மக்களின் மனம் கவர்ந்த மன்னனின் மகனை, தர்மபுரி மண்ணின் மைந்தன் தயாளதேவரையும் நேசிக்கிறேன்."

பொற்கொடி சொன்னதும் அந்த மண்டபமே நடுங்கும் இடியென நகைத்தான் இளவரசன் தயாளதேவன். நகைத்து முடித்துவிட்டு,

"நினைத்தேன்!"

என்றான். பொற்கொடி அவன் நகைப்பை அவமானமாய் கருதவில்லை. மாறாக காதல் மயக்கத்திலே கட்டுண்டு பேசினாள்,

"நானும் நினைத்துக்கொண்டுதான் இருக்கிறேன். தங்களை-தங்கள் வீரத்தை வியப்புக்குரிய தங்கள் தாயக நேசத்தை!"

"தெரியும்."

"எதிரியின் மார்பிலிருந்து பாயும் செந்நீரை இரசித்துப் பழக்கமே தவிர, எதிரியிடம் எனக்காக அனுதாபக் கண்ணீரை யாசித்துப் பழக்கமில்லை."

"யார் எதிரிகள் இளவரசே?"

பொற்கொடியின் கேள்வியில் கோபம் இல்லை. தவிப்புத்தான் இருந்தது. ஆனால் அதை இளவரசன், கவனிக்கவேயில்லை.

"தாங்களும்-தங்கள் சேனையும்."

"தவறான கணிப்பு....."

"....என்று சொல்வது உங்கள் பேச்சிலே உள்ள இனிப்பு."

பொற்கொடி தயாளதேவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

"மன்னிக்க வேண்டும் அரசியாரே வேல் முனையிலும், வாள் முனையிலும் வென்றெடுக்கக்கூடிய இழந்த சுதந்திரத்தை தங்கள் விழிகள் வீசும் கருணைப் பார்வையிடம் கையேந்திப் பெறும் கையாலாகாதவனல்ல நான்."

இளவரசன் திரும்பி நடந்தான்.

"நில்லுங்கள் இளவரசே!"

நின்று நிதானமாய் திரும்பி அமைதியாக நோக்கினான்.

"அளவற்ற அன்பை அனுதாபம் என்கிறீர்கள். கரைகாணா என் காதலை கருணை என்கிறீர்கள். நிகரில்லா என் நேசத்தை நான் போடும் வேசம் என்கிறீர்கள். பெயரில் மட்டும் தயாளத்தை வைத்துக்கொண்டு பேச்சிலும், செயலிலும் ஈவிரக்கமின்றி ஏனிப்படி நடக்கிறீர்கள்?"

"அற்புதமான பேச்சு."

"ஆழமான உண்மைகளை காண நேரும்போது அற்புதமாகத்தான் இருக்கும் இளவரசே."

"வெளிப்பகட்டும் வியக்கவைப்பதுண்டு அரசியாரே."

"குருட்டுத்தனமான வாதம் செய்கிறீர்கள்."

"இல்லை அரசியாரே இல்லை. துள்ளும் விழி, துடிக்கும் இதழ், தொங்கும் கனி, துவளும் இடை, மருளும் மான்போல் வெட்கிச் சிவக்கும் வதனம், பூவாகி, காயாகி கனிந்த இளம் பருவம் அனைத்துமே என் விழிகள் அறியும். ஆயினும் அதனை நாடா நாட்டுப்பற்று தெளிவும் மதியும், பொறியில் சிக்காத புலனும் எனக்குள் வளர்க்கும். வருகிறேன் அரசியாரே."

இளவரசன் மண்டபம் விட்டு வெளியேறினான். வெளியே காத்துநின்ற காவலர்கள் சிறைக்கூடம் நோக்கி அழைத்துச் சென்றனர்.

□

அரசியின் தவிப்பின் காரணம் நேற்றைய நிகழ்வு என்பது புரிந்த தோழிப் பெண் தயக்கம் துறந்து,

"அரசியாரே..."

என்று அழைத்தாள். நின்று தோழிப் பெண் முகம் நோக்கினாள் அரசி பொற்கொடி.

"எடுத்தெறிந்து பேசிச் சென்ற பின்னரும் அவரையே நினைத்திருந்தால் துன்பம் அன்றோ தொடர்ந்திருக்கும்."

பொற்கொடி முகம் வாடியபடியே தோழிப் பெண்ணிடம் சொன்னாள்,

"முற்பிறப்பில் என்ன பிழை செய்தேன் நான். அரசியானபோதும் நான் செய்த வினை எதுவும் நல்வினையாய் இல்லாமல் போனதோ...என் செய்வேன் என் நெஞ்சு வெந்துகொண்டிருக்கிறதேயடி."

"என்னம்மா வார்த்தை இது? மக்கள் போற்றும் மகராசி மனம் ஒடிந்து பேசல் முறையோ?"

"போடி அடி பைத்தியக்காரி. இனியவர் என நினைத்து உருகியபடி நானிருந்தும் அவரால் விரும்பப்படாவிட்டால் அது நான் நல்வினை செய்தேன் அல்லள் என்பதுதான் அர்த்தமடி.

திருவள்ளுவரே தெளிவாக சொன்னாரடி என் போன்ற பெண் நிலையை. அதைத்தான் சென்னேன் நான்."

தோழிக்கு திருவள்ளுவர் சொன்ன குறள் என்னவென்று தெரியவில்லை. கேட்கவும் தயக்கம் விடவில்லை.

பொற்கொடி நினைத்து தன்னோடு ஒப்பிட்ட அந்தக் குறள் இதுதான்.

**"வீழப் படுவார் கெழீஇ இயிலர் தாம் வீழ்வார்**
**வீழப் படாஅர் எனின்"**

குறள்-1194-அதிகாரம்-120

## குறுக்கெழுத்துப் போட்டி இல-70

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 |
| | ■ | | ■ | 5 | | |
| | 6 | | | | ■ | |
| ■ | 7 | | | | | ■ |
| 8 | ■ | 9 | | | ■ | 10 |
| | ■ | | ■ | ■ | 11 | |
| 12 | | | ■ | 13 | | |

### இடமிருந்து வலம்

1. ஏழு வர்ணங்களின் ஜாலம்.
3. ஐம்புலன்களில் ஒன்று.
5. இதன் காம்பு வளர்த்த மரத்தையே வெட்டுவதுண்டு.
6. உடலுக்குள் இதுவும் அடக்கம்.
7. சகாதாரத்திற்கு இது அவசியம்.
9. முதுகிலே இது அதிகமானால் மூச்சும் திணறும்.
12. இதற்காகத்தான் சிவபெருமான் மண சுமந்தார் என்பார்கள்.
13. இதற்குக் கெரய்யாப்பழம் என்றால் பிரியம்.

### மேலிருந்து கீழ்

1. மாதத்திற்குள் இதுவும் அடக்கும்.
2. கதைகளைச் சுவையாகச் சொல்ல இது ஒரு சிறந்த வழியாகும்.
4. இதிலும் சிலர் கலப்படம் செய்கிறார்கள். (துலைகீழாக உள்ளது)
8. சிரசிற்கு அழகென்று சிலர் இதனைத் தேர்ந்தெடுப்பர்.
10. இதைத் தொட்டதால்தான் துச்சாதனனுக்கு அழிவு வந்தது.
11. நீதி கேட்ட பசு இதனைத்தான் அடித்தது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 15.10.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-70**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.**

### குறுக்கெழுத்துப் போட்டி இல-68க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கே | ளி | ர் | ■ | 2 கு | ரு | 3 வி |
| ச | ■ | ■ | 4 மு | க் | கர் | டு |
| ம் | 5 ப | 6 அ | ■ | ■ | ■ | க |
| ■ | ல் | று | ■ | 7 க | ழு | தை |
| 8 பொ | லி | சு | ■ | ரு | ■ | ■ |
| ம் | ■ | 9 வை | ப | வ | ம் | ■ |
| 10 மை | னா | ■ | 11 தி | றை | சே | ரி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.68இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. செந்தில்குமார் நாவலப்பிட்டிய.
2. றிசானா லதீப் கிண்ணியா-05.
3. மனோகரி ராஜசிங்கம் கொழும்பு-06.
4. எவ்.எம்.நியாஸ் புத்தளம்.
5. கா.சந்திரகாந்தன் பண்டாரவளை.
6. ருஸ்னா நயீம் கந்தறை.
7. செல்வி.பல்கிஸ் கல்முனை-06.
8. பி.ரமணன் திருகோணமலை.
9. செல்வி.எம்.ஆப்தீன் அக்குரஸ்ஸ.
10. எம்.திருச்செல்வன் கொலன்னாவ.

**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

## ஸ்போர்ட்ஸ்

# ஒத்திவைக்கப்பட்ட சுற்றுப்பயணம்

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தோன்றிய கொள்ளை நோய் காரணமாக, இவ்வாரம் இந்தியாவுக்கு வருவதற்கிருந்த வெஸ்ற் இண்டீஸ் (மேற்கிந்திய) கிரிக்கெட் அணியினரின் வருகையும் போட்டிகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. ஒரு வாரத்தின் பின்னர் போட்டி விளையாட்டுகளுக்கான புதிய அட்டவணை வெளியிடப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பரோடா நகரில் ஆக்டோபர் 12ம் திகதி இந்தியாவுக்கும் வெஸ்ட் இண்டீசுக்குமிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டி ஆரம்பமாகும் என்றும் இதில் பங்குபற்றும் வெஸ்ட் இண்டீஸ் அணியினர் அக்-5ம் திகதி இந்தியா வந்து சேர்வார்கள் என்றும் திட்டமிடப்பட்டிருந்தது. பரோடா நகருக்கு அணித்தாகவுள்ள பிரதேசத்திலேயே 'பிளேக்' என்னும் பயங்கரக் கொள்ளைநோய் பரவியுள்ளமையினால் தமது வீரர்களின் உடல் நலப் பாதுகாப்புக் கருதி விளையாட்டினை ஒத்திப்போடும்படி வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் சபை அதிகாரிகள் கேட்டுக்கொண்டதனை இந்திய அதிகாரிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்தியாவிலுள்ள 26 மாநிலங்களில் 7 மாநிலங்களில் நோய்த் தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு 2,500 பேர்வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 50 பேர் வரை இந்நோயினால் உயிரிழந்திருப்பதாக இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

முக்கோண நிலைப் போட்டிகளாக நடைபெறவிருக்கும் போட்டிகளில் இந்தியா மற்றும் வெஸ்ட் இண்டீசுடன் நியூஸிலாந்து அணியும் பங்கேற்கவிருக்கிறது. இந்த அணியினர் அக்டோபர் கடைசியிலேயே போட்டிகளில் கலந்துகொள்ளவிருப்பதால் அவர்களுடைய ஆட்டங்கள் திட்டமிட்டபடி நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநில அரசுகளின் அதிகாரிகளைக் கலந்த பின்னரே இறுதி முடிவெடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# காப்ரன்களின் ஒற்றுமை

இலங்கையில் அண்மையில் நடைபெற்று முடிந்த சிங்கர் உலக கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொண்ட நான்கு அணிகளில் மூன்று அணிகளை வழி நடத்திய காப்ரன்களுக்கிடையில் பல ஒற்றுமைகள் நிலவுவதை அவதானிக்க முடிகிறது. இம்மூன்று பேரும் ஒரே வயதினர் என்பதுதான் பிரதானமானது.

ஆசிய நாடுகளைச் சேர்ந்த இந்த 3 காப்ரன்களும் 1963ம் அண்டு பிறந்தவர்கள். இந்திய அணியின் தலைவர் அஸாருதீன் பெப்ரவரி 8ம் திகதி பிறந்தார். இதே ஆண்டு, ஏப்ரல் 16ம் திகதி பாகிஸ்தான் அணித்தலைவர் சலிம் மாலிக் பிறந்தார். நமது நாட்டு அணித் தலைவரான அர்ஜுன ரணதுங்க பிறந்தது டிசம்பர் முதலாம் திகதி. அவுஸ்திரேலிய அணியின் காப்ரன் மார்க் ரெய்லர்தான் வயதில் இளையவர். இவர் 1964ம் ஆண்டு அக்டோபர் 27ல் பிறந்தார்.



சிங்கர் போட்டிகளில் அர்ஜுன 82 ஒட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காதிருந்தார்.

அதேவேளை சலிம் மாலிக் 53 ஓட்டங்களை எடுத்தார். இவ்விரு காப்ரன்களுமே 50க்கு மேலான ஓட்டங்களை எடுத்தனர். இலங்கை அணி மூன்று தடவைகள் முதலாவது துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தைப் பெற்ற போதும் எதிரணியினரையே முதலில் ஆடுவதற்கு அர்ஜுன வாய்ப்பளித்தார். இந்த மூன்று ஆட்டங்களிலும் இலங்கை அணியே வெற்றி வாகை சூடியது. காப்ரன்களில் இவ்வாறு அர்ஜுன ரணதுங்கா மட்டுமே நடந்துகொண்டுள்ளார் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்துள்ளது. இறுதி போட்டியில் எதிரணியினர் முதலில் ஆடுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றனர். அனால் இலங்கை அணியினரை ஆடும்படி கேட்டுக்கொண்டார்கள். இருப்பினும் இந்த ஆட்டத்தில் இலங்கை அணி தோற்க நேர்ந்தது.

இப்போட்டிகளில் பங்கேற்ற அணிகளின் தலைவர்களில் அஸாருதீன் நல்ல உயரமானவர். அதேவேளை இலங்கை அணித் தலைவர் அர்ஜுனதான் குள்ளமானவர்.

**இவ்வாரம் (09.10.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 49

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** சொக்கட்டா னாட்டத்தில் சகுனி சூதாடினான்! துரியன்தான் வென்றாலும் பாண்டவர்க்குத் தோல்வியில்லை! பாரத தேசத்தின் பண்டைப் பெயரும் புகழும் சீரும் சிறப்புகளும் சீரழிந்து போயினவே! பாஞ்சாலியின் சீற்றம் சாபமதாய்ச் சூழுமென அஸ்தினாபுரி அரசன் அஞ்சி நடுங்கி நின்றான். சூதில் வென்றெடுத்த சொத்துக்களத்தனையும் மீதி எதுவுமின்றி பாண்டவர்க்கே அளித்தான். துரியோதனன், சகுனி, துச்சாதனன், கர்ணன் துடிதுடித்தே துவண்டார்கள்- மன்னவன் தன் செயல்கண்டு.

-காட்சி மாற்றம்-

துரியோதனன், கர்ணன், சகுனி ஆகியோர் இருக்குமிடத்திற்கு கோபமாக வருகிறான் துச்சாதனன்.

**துரி:** தடுமாற்றத்துடன் காணப்படுவதேன் தம்பி துச்சாதனா?

**துச்:** பாண்டவர்கள் போகிறார்கள் மீண்டும் தம்பதிக்கு!

**துரி:** போகட்டும் தம்பி போகட்டும்! கண்முன்னே அவரைக் கண்டாலுமென் கண்கள் கனலாய்க் கொதிக்கிறது.

**துச்:** போவது சரிதானண்ணா! ஆனால் நாம் வென்றுவிட்டதத்தனையும் கொண்டல்லவோ செல்கின்றார். அப்பாவிடம் நான் எதையும் கூறிடவே அஞ்சுகிறேன்.

**சகுனி:** உன் அப்பன் கண்மட்டும் குருடல்ல! கருத்திலும் கபோதியடா! முட்டாளென்றாலும் முழுமையாகப் பொருந்தும். தன் சொந்த மகன்களுக்கு சேரவேண்டிய சொத்தனைத்தும் எந்த மகன்களுக்கோ வாரி வழங்கிவிட்டார்.

**கர்ண:** கைவிரல்களில் சூதுக் கலை நளினம் கொண்ட தாங்கள் கவலை கொள்ளலாமா- மாமா?

**சகுனி:** அங்க தேச மன்னா! அத்தனையும் உண்மை! சத்தியத்துக்காங்கே சார்பு மொழியேது? பயன்படுத்தப்பட்டிடாத பகடை பல உண்டு இங்கே!

**கர்ண:** அப்போ நான் போகின்றேன் அருமை நண்பா விடை தருவாய்!

சகுனி தடுக்கிறான்.

**சகுனி:** அங்கத்துக்கதிபா! அவசர மேனப்பா? உண்மையினை நீ இன்று உரைத்திட வேண்டும் வா! என் பகடை வீரர்கள் என்னைக் கைவிடவில்லை. கண்களால் நீ கண்ட காட்சி இதுவன்றோ? வெற்றிமேல் வெற்றியினை வாரிக் குவித்தார்கள்! பாஞ்சாலி புகுந்ததனால் பதைபதைத்தார் மைத்துனரும். அச்சமது கொண்டதனால் அபகரித்ததத்தனையும் அளித்துவிட்டார் அவர்களுக்கே!

**துரி:** என்ன செய்யலாமிப்போ..?

**சகுனி:** பாண்டவர்களோடு மீண்டுமொரு தடவை தாயமாட நேர்ந்தால் மீண்டிடலாமத்தனையும்!

**துரி:** இனி ஒருமுறையாட அனுமதியார் அப்பா!

**கர்ண:** அருமை நண்பா துரியோதனா! உன் தந்தை உன்மீது வைத்திருக்கும் அன்பதனை நீ அறிய மாட்டாயா? உன் உள்ளம் விரும்பியதை மறுக்காமல் உடன் அளிப்பார். ஆச்சாரியார் இருவர், அறிவிலுயர் பீஷ்மர் ஆகியோரைத்தான் இங்கு அடக்குவது கடினம்!

**சகுனி:** அஸ்தினாபுரி அரசின் அரியணையின் காலில் கட்டுண்டு செயலிழந்த சிங்கங்கள் அம்மூன்றும். எனதருமைத் தங்கை காந்தாரி மற்றும் வினையுணர்ந்த விதுரர் இருவரும்தான் என் கவலை! மாமன்னரிடம் கூற மார்க்கமொன்று தேடுகிறேன்..பொறுத்திருங்கள்!

**கர்ண:** பாண்டவரின் நிலையதனை நானடைய நேர்ந்திருந்தால் படை நடத்திக்கட்டாயம் பழி துடைக்க வழி சமைப்பேன். அவமதிப்பை அகத்திருத்தி அமைதியோடிருப்பரென்றே அஞ்சாதிருக்காதீர்! அத்தினாபுரி யதனை அடிமை கொள்ளும் ஆர்வம் அவர்க்கிருக்கும் நிச்சயமாய்!

**துரி:** என் எண்ணமும் அதுவே! என்ன செய்யவேண்டுமிப்போ?

**கர்ண:** படை நடத்திப் பாண்டவர்கள் பாயு முன்னே நாமெழுந்து தடைபோட வேண்டும் இடை நடுவே உடனடியாய்!

**சகுனி:** சிறப்பான வார்த்தைகளை சிந்தித்தே இன்று முதன் முதலிலே உதிர்த்தாய் அங்கத்தின் மன்னா! அருமை மிகு மருகா துரியோதனா! உனக்கு அரியபணி ஒன்றுண்டு! கங்கையின் மைந்தர்தனை கட்டி அணைத்திடப்பார். பீஷ்மரை மடக்கிவிட்டால் பீடையெதுவுமில்லை!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் அரண்மனை- துரோணாச்சாரியாருடன் இருக்கிறார்.

**துரோ:** யுதிஷ்டிரரை தாங்கள் காணவில்லையோ ஐயா!

**பீஷ்ம:** எப்படி நான் காண்பேன்? எது கூறி அரவணைப்பேன்? வளர்ந்தவர்கள்- பண்பில் உயர்ந்தவர்கள்! சூதினைப் பற்றி அவர் சொல்லுரைக்கப் போவதில்லை! ஆனாலும் அவருள்ளம் பழி வாங்கும் எண்ணத்தால் பதைபதைக்கும்- அதை அறிவேன்.

துரியோதனன் வருவதாக காவலன் கூற அழைத்துவரும்படி பீஷ்மர் சொல்கிறார்.

**பீஷ்ம:** வா மகனே வா! இந்தப் பின்னிரவு வேளையிலே எனைத் தேடி வருவதற்கு என்னதான் காரணமோ?

**துரி:** வணக்கம் பிதாமகரே! வணக்கம் குருதேவா! சூதாடுமண்டபத்தில் நடந்துவிட்ட சம்பவத்தால் நானாடிப் போகவில்லை. அடிமைதனை எப்படியும் ஆட்டிப் படைத்திடவே அளவிட முடியாத உரிமை பலவுண்டு. பாஞ்சாலியை அவள் கணவன் பந்தயமாய் வைத்தாடத் துணிந்தானே! அவனுக்கே தலை குனிவு!

**துரோ:** பீடிகையை விட்டுவிடு; பிரச்சனையை கூறிப்போ!

**துரி:** ஒரே காட்டில் இரு சிங்கம் ஒன்றுபட்டு வாழ்ந்ததில்லை! அதேபோன்று பாண்டவரும் கவுரவரும் ஒரே இடத்தில் அரசிருத்தல் அமைதி வழிக்குதவாது. நல்ல தீர்வு காண்பதற்கு நல்லவழி இரண்டுண்டு! பாண்டவர் தம் நாட்டை படைபலத்தால் வெல்வதற்கு ஈண்டு விடை அளிக்க வேண்டுகிறேன்! இல்லையெனில் மீண்டுமொருதடவை சொக்கட்டானாட்டத்தில் பாண்டவர்களுடனாட விடை கொடுக்க வேண்டுகிறேன். பகடையில் தோற்பவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள்தான் வனவாசம் போக வேண்டும்! பதின்மூன்றாம் ஆண்டதனில் அடையாளம் காணாமல் அஞ்ஞாதமுடன் எங்கோ அலைந்திடவும் வேண்டும். அடையாளம் கண்டு கொண்டால் தடையின்றி மற்றுமொரு வனவாச வாழ்வுதனை ஏற்றாக வேண்டும். இரண்டில் ஒரு மார்க்கமதில் எவ்வழியினை ஏற்று என் அவாவினைத் தீர்க்க வழி கண்டு விடையிறுங்கள்!

**துரோ:** சூதாட்டம் மீண்டும் சிறந்த வழியல்ல!

**பீஷ்ம:** விடை உடனே பகர்வதற்கு உனது வினா சுலபமல்ல..!

**துரி:** தெரியும் பிதாமகரே! எமது குருவானவரும் பெரியவர் எம் தாத்தாவும் பாண்டவரின் பக்கமே பெரும் சார்பு கொண்டவர்கள். குறைகூறவில்லை இப்போ! விடை கோரி நிற்கின்றேன். இருவழிகள் கூறியுள்ளேன்! ஒருவழியைக் கூறுங்கள்! தெரிவு செய்வதெவ்வழியை?

**பீஷ்ம:** உரிய வழி தெரிவு செய்ய ஒருவருக்கே உரிமையுண்டு. மாமன்னரல்லாமல் மற்றெவர்க்கும் முடியாது.

**துரி:** அப்படியே ஆகட்டும். அவரிடமே போகின்றேன்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டினர் அரண்மனை- காந்தாரி வருகிறார்.

**காந்:** மன்னவரே! எமது மருமகளாம் ஏந்திளையாள் திரௌபதியும் எமது குரு வம்சத்தின் பெரும் புகழும் சிறுமைக்கிரையாகி சீரழிந்து போவதற்கு எப்படித்தான் இடமளித்தீர்?

**திருத:** உண்மைதான் காந்தாரி! உற்றதொரு வேளையிலே உணர்வினை நான் இழந்துவிட்டேன். புதல்வன் மீது வைத்த பாசப் பெரும் தீயில் புத்தியினை இழந்தேன். பெரும் பழிதனை அணைத்தேன். பார்வை இழந்ததற்காய் இன்று பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றேன். பாஞ்சாலி தன்னைப் பார்த்திடவும் வேண்டாமே! பாவையவள் பார்வையினைப் பார்க்காதிருப்பதுவே பாவிக்குப் போது மன்றோ!

காவலன் வருகிறான். பீஷ்மருடன் துரியோதனன் வருவதாகக் கூறுகிறான்.

இருவரும் எழுந்து பீஷ்மருக்கு வணக்கம் கூறி வரவேற்கின்றனர்.

**திருத:** ஆசனத்தில் அமருங்கள்! அழைப்பு விடுத்திருந்தால் அங்கேயே வந்திருப்பேன்! அவசரம் தானென்ன..? அறியலாமோ பிதாமகரே?

**பீஷ்ம:** மகனைக் காண்பதற்காய் வரவில்லை நானின்று! மன்னவரைக் காணத்தான் வந்துள்ளேன் இங்கிப்போ! மகனே துரியோதனா! உனை வாட்டும் பிரச்சனையை உன் தந்தையிடம் கூறு..!

**துரி:** ஒரு காட்டில் இரு சிங்கம் அரியணையில் அமராது. கவுரவரும் பாண்டவரும் ஒரே புலத்தில் உலவுதற்கு அருகதையுமில்லை; அனுமதியுமில்லை.

**காந்:** அண்ணன் தம்பி நீங்கள் அருகருகே இருப்பதனால் அரிய துணையாகு மன்றோ?

**துரி:** இணைந்து வாழ அவர்க்கு இணக்கமிருந்தாலும் சேர்ந்து வாழும் எண்ணம் சிறிதுமில்லை எனக்கு. நாட்டைப் பிரித்து நல்லிணக்கம் காண்பதற்கு போட்ட திட்டம் எனக்குப் பெருந்தீங்கானதல்லால் நன்மைகளைத் தரவில்லை! சதுரங்க ஆட்டத்தில் சகல வற்றையும் பறித்தோம். நீதிக்குப் புறம்பாக நேர்மை வழி தவறி அத்தனையும் எடுத்தே அப்பா கொடுத்துவிட்டார். பெற்ற மகனுக்கே பெருந்தீங்கினை விதைத்தார்.

**காந்:** பிதாமகரே! மைந்தன் நீதிதனை உணர நிதான நெறி கூறுங்கள்!

**துரி:** பிதாமகருக்கு இதில் பிரவேசம் தேவையில்லை! நன்றாகக் கேளுங்கள்! என் ஆசை தீர்வதற்கு இரு வழிகள் தானுண்டு. இந்திரப் பிரஸ்தத்தை என்னுடையதாக்குதற்கு படை திரட்டிச் சென்று போர் புரிய வேண்டும்! படை நடத்தத் தடை விதித்தால், பகடை விளையாட அனுமதியைத் தாருங்கள். போட்டியிலே தோற்றவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் ஏகிடவும் அடுத்து வரும் ஓராண்டில் அஞ்ஞாதவாசத்தில் அலைந்திடவும் வேண்டும்! அக்காலம் தன்னில் அடையாளம் கண்டுகொண்டால் அடுத்தும் அதே காலம் அலைந்திடவே வேண்டும்!

**காந்:** ஆனால் மகனே..!

**துரி:** வேறேதும் தேவையில்லை..! அம்மா! துடிதுடிக்கும் என் மனதின் துயரமதை உணருங்கள்! பார்க்குமிடமெல்லாம் பார்த்தனவன் தோற்றம் பரிதவிக்க வைக்கிறது. அர்ச்சுனனின் நாமம் அகரத்தில் தோன்றுவதால் அகரத்திலே வெறுப்பு அடிமனத்தை அரிக்கிறதே!

**காந்:** இவ்விரண்டு வழிகளையும் விடுத்துவிட்டு மூன்றாவது மார்க்கம் வேறேதும் கூறாயோ?

**துரி:** மூன்றாவது மார்க்கம் ஒன்றுண்டு தாயே! மாண்டு மடிவதுதான் மாற்றுவழி ஒன்று!

**திருத:** இல்லை..இல்லவே இல்லை..!

**துரி:** என்னுயிரை இழப்பதற்கு இங்கிருப்போர் இணங்கமாட்டார்! என்பதால்தான் நான் முன்னிரண்டு வழிகளையும் முன்மொழிந்தேன்! போர் முனைக்குச் சென்றிடவா? பகடை வழி பார்த்திடவா?

**பீஷ்ம:** இரண்டு வழிகளையும் ஏற்க முடியாது.

**திருத:** என் மகன் தன்னுயிரை இழப்பதையும் ஏற்க மாட்டேன்!

**பீஷ்ம:** மகன்மீது கொண்டுள்ள தனிப் பாசம் தன்முன்னால் தர்மநெறி அத்தனையும் அரசியலில் அரசனவன் அணிந்துள்ள அறவொழுக்கம் அனைத்தையும் மறந்தீரே?

**திருத:** பிள்ளைமீது உள்ள பாசப் பிணைப்பதனை பிள்ளைகளைப் பெற்றெடுத்துப் பேணி வளர்க்காத பிதாமகருக்குத் தெரியாது. மைந்தனின் மகிழ்ச்சிதான் தந்தைக்குப் பெரும் செல்வம்!

**பீஷ்ம:** மகனொருவன் தந்தைக்கு முன்னால் நான் நிற்கவில்லை. மாபெரிய தேசத்தின் மன்னவர்முன் நின்று சத்திரிய தர்மத்தின் மகத்துவத்தை வினவுகிறேன்! துரியோதனன் வீரன்! சூதுக்கும் சூழ்ச்சிக்கும் சொக்கட்டான் கட்டைக்கும் தீது வழிவேண்டாம். போர்முனைக்கு ஏகட்டும். பக்கத்தில் நானிருப்பேன்! துரோணரும் அவர் மகனும் அங்கத்தின் அதிபனும் அருந்துணைவராயிருக்க துரியோதனன் போர்முனைக்கு புறப்படுவதே சிறப்பு!

**திருத:** வேண்டாம் போர் முழக்கம்! பெரியப்பா இது ஆணை! மகனே மறவாதே! போர் முனையை மறந்துவிடு! ஒரு தடவை மட்டும் சதுரங்கம் ஆட அனுமதி தந்தேன் மகனே!

**காந்:** வேண்டாம் ஐயா வேண்டாம்! மீண்டுமொரு தடவை வேண்டாத விளையாட்டால் பாண்டவர்க்கும் கவுரவர்க்கும் நீண்டுறவு நிலைத்திருக்க கட்டிவைத்த கூட்டுறவை வெட்டிவிட வேண்டாம்.

**திருத:** பேரழிவுப் பாதையிலே பாரதம் போவதானால் போகட்டும் விட்டுவிடு. சீரழிவுக்காலத்தை சீரமைக்க முடியாது! நாசமது விளைந்தாலும் நாம் தடுக்க வழியில்லை. விதிப்படியே ஆகட்டும், வருந்துவதால் பயனில்லை!

**பீஷ்ம:** விதி அதுதான் என்றுரைத்து விலகி ஓடமுடியாது. நாட்டின் தலைவிதிக்கு நீரேதான் முழுப் பொறுப்பு! பிள்ளைமீது வைத்த கொள்ளை ஆசையின் விளைவால் பெரும் பழியைத் தேடிவிட்டு ஊழ்வினையைச் சாடுகிறீர்! ஆண்டவனை அவமதித்தல் அடுக்காது! ஆகாது!

ஆவேசத்துடன் பீஷ்மர் வெளியேறுகிறார்.

-காட்சி மாற்றம்-

யுதிஷ்டிரர் அமைதியிழந்திருக்க தம்பிமார் சிந்தனையுடன் உலவ திரௌபதி வருகிறாள்.

**யுதி:** கூந்தல் குலைந்து குரூரமாகத் தோன்றுவதேன்?

**திரௌ:** துச்சாதனன் என்னும் துரோகி அவன் கையால் தொட்டே இழுபட்டு தூய்மை கெட்ட கூந்தலினை தொட்டே இழுத்து முடிந்திடவும்நான் துணியேன்! வில்லேந்தும் வீரர்களில் வீரனென்றும் சூரனென்றும் சொல்லால் புகழோங்கும் நாயகரும் அவர் அண்ணன் மல்லுக்கு முன்னோனும் மலை நிகர்த்த தோளோனும் இல்லாள் இவளுக்கு நேர்ந்த இடர்களைய பொல்லாங்கு புரிந்தோனின் பெரு மார்பினைப் பிளந்து பெருகிவரும் குருதி யினைக் கொண்டுவரவேண்டும்! குலைந் துள்ள கூந்தலினை அக்குருதியிலே தோய்த்து கோதி இழுத்து குலப் பெருமைதனைக் காப்பேன்.!

**யுதிஷ்:** துச்சாதனனும் தூரத்தவனல்ல! சொந்தச் சகோதரன்தான் மன்னித் தருளம்மா!

**பீமன்:** மன்னிக்கும் எண்ணம் எனக்கே வரப்போவதில்லை. பாஞ்சாலி எவ்வாறு பொறுத்தருளப்போகின்றாள்?

**அர்ச்:** சூதாடும் சபைதனிலே சூதறியா திரௌபதிக்கு பாதகர்கள் செய்த வினை பாவையவள் மறப்பதெப்போ? மறந்துவிடு என்றும் மன்னித்தருளென்றும் பகர்வதற்குத்தான் முடியும்! பாவையவள் பட்ட துயர் புரையோடிப்போன புண்ணாகிவிட்டதன்றோ? தங்களால் தானும் அத்துயரக் காட்சிகளை தாங்கிக்கொண்டிருக்கும் தாற்பரியம் தானுளதோ?

**பீமன்:** அண்ணன்முன் நின்று ஆர்ப்பரிக்கும் அர்ச்சுனா! அடக்கடா உன் வாயை! வீரனென்றால் அடக்கம், விவேகமுடன் பொறையும் அண்ணன் முன் அடங்கும் அறிவுடைமையும் வேண்டும்!

**திரௌ:** குலைந்து விழுந்து கோரவுருக்காட்டுமென் கூந்தலினைப் பாருங்கள்! கோதி முடித்திட அத் துச்சாதனன் குருதி கை நிறைய் அள்ளிக் கொண்டு வந்து தாருங்கள்! கோழைகளல்ல என் கணவர் கொள்கையிலே கோமான்கள் என்று எண்ணிக் குதூகலிப்பேன்!

யுதிஷ்டிரரின் கண்கள் கண்ணீர் சொரிகின்றன.

**திரௌ:** (தொடர்ந்து) பெயருக்கும் பெருமைக்கும் பெருந்தீங்கு விளைத்துவிட்ட அஸ்தினாபுர நாட்டில் அடி பதிக்க முடியவில்லை. அழைத்து உடன் செல்லுங்கள். அவகாசம் தேவையில்லை!

**யுதிஷ்:** புறப்படுவோம் பாஞ்சாலி..!

**தாதி:** மாமன்னரிடமிருந்து செய்தி ஒன்று கொண்டு வந்தேன்! சூதாடும் சபைக்கு சமூகமீயவேண்டுகிறார்!

யாவருக்கும் அதிர்ச்சி ஏற்படுகிறது.

**யுதிஷ்:** பெரியப்பாவின் கட்டளை! மீற முடியாதே! போயாக வேண்டும் பாஞ்சாலி!

**அர்ச்:** மீண்டும் சதுரங்கம் ஆடுவது இல்லையென்று வாக்களித்துவிட்டுப் போங்கள் எம் அண்ணா..!

**யுதிஷ்:** கட்டளையா வேண்டுகோளா விடுகின்றாய்? கட்டளைதானானாலும் பெரியப்பா சொல் வார்த்தை கட்டாயம் ஏற்பதொன்றே கடமையதாகுமன்றோ?

**திரௌ:** மீண்டுமொருதடவை எமைப் பணயம் வைத்தாட துணிவதில்லை என்று ஆணையிட்டுப் போங்கள்!

**யுதிஷ்:** தம்பிமார் தன்னையும் தாரமான உன்னையும் தாயத்தில் வைத்தாட இனித் துணியமாட்டேன்! இது உறுதி!

**அர்ச்:** பாஞ்சாலி! பாரில் நடப்பவற்றை நடவாமல் தடுப்பதற்கு பார்த்தனாலும் முடியாது; அண்ணன் கதந்தானும் தடுக்காது. பொன் மான் பிடித்துவர தன் கணவன் இராமனையே கானகத்தில் ஏவிவிட்ட ஜானகிக்குத் தெரியாதா- கபடமான் அதுவென்று? காணாதிருந்தாளா? காலத்துக்கேற்ற கோலங்கள் சூழுவதை ஞாலத்தில் தடுப்பதற்கு கடவுளாலும் முடியாது. பெரியப்பா காத்திருப்பார்! பெரியோரை காக்க வைத்தல் பெரும் பாபமாகிவிடும்! தயங்காமல் வா போவோம்.

-காட்சி மாற்றம்-

சதுரங்க ஆட்டத்துக்கான இடம். பாண்டவர்களுடன் பாஞ்சாலியும் வருகின்றாள். இதனை எதிர்பார்க்காதோர் திகைக்கின்றனர். பாண்டவர்கள் திருதராட்டினரையும் பெரியோர்களையும் வணங்கி ஆசி பெறுகின்றனர்.

**திருத:** எம் முன்னோர் எமக்களித்த இம்முது பெரும் நாட்டில் என்றும் அமைதி நிலைபெறவே ஆசையுடன் காத்திருந்தேன். நாட்டைப் பிரித்தளித்தால் நன்மை பயக்குமென்று . நம்பிக்கை கொண்டிருந்தேன். நடக்கவில்லை; என் மகனும் கூடி வாழ்வதிலுள்ள கூட்டுப் பெருமையினை நாட மனம் ஒப்பாமல் தனி வழியை நாடுகிறான். ஒருவரின் ஆதிக்கம் உருவாக வேண்டுவதே துரியனவன் ஆசை! ஆதலினால், பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் ஏகிடவும் பதின்மூன்றாம் ஆண்டில் பதுங்கி ஒளித்தேயிருக்கும் அஞ்ஞாத வாசமும் அரும் பணயமாக வைத்து சொக்கட்டான் ஆடுதற்கு ஆயத்தமாகுங்கள்!

**யுதிஷ்:** தம்பிக்குப் பதிலாக தாய்மாமன் தானாட நம்பிக்கை வைத்தனரோ? பெரியப்பா பகருங்கள்!

**திருத:** துரியோதனன் தான் அதற்கு விடை பகரவேண்டும்!

**யுதிஷ்:** புரிகிறது பெரியப்பா! பந்தயத்தின் பாங்கதுவும் புலப்பட்டு விட்டதன்றோ..!

பரஸ்பரம் முகமன் கூறியபின் பகடை மேடையில் பாண்டவரும் திரௌபதியும் அமர்கின்றனர்.

**துரியோ:** அண்ணி! தாங்களும் இம்மேடைதனில் தானிருக்கும் எண்ணமுண்டோ?

**திரௌ:** பணயமாக என்னை இங்கு வைத்தாடிய பாங்கதனைப் பார்வையிட வந்துள்ளேன். என் கணவர் ஐவருடன் அமர்ந்திங்கு இருப்பதனால் அங்க நாட்டு அதிபதிக்கு ஆட்சேபமேதுமுண்டோ..?

**கர்ண:** அத்தகைய ஆட்சேபம் எதுவுமில் எந்தனுக்கு..!

**துரி:** பந்தயத்தின் பொருளதனைப் புரிந்து கொண்டீர்! இருந்தாலும் தந்தையவர் ஒன்றுகூற மறந்துவிட்டார்! பதின்மூன்றாம் ஆண்டுதனில்- கரந்துறையும் காலமதில் அடையாளம் கண்டாலும் அகப்பட்டுக்கொண்டாலும் மீண்டும் வனவாசம்; மீண்டும் மறைந்திருத்தல், இன்றிலிருந்து இனிமேல்' வருங்காலமதில் என்றும் நாம் காணும் வாய்ப்பே எமக்கில்லை!

**பீமன்:** நிபந்தனையை ஏற்கின்றோம், ஏனென்றால் என்றேனும் உம்மை நாம் காண்பதற்கு எள்ளளவும் வாய்ப்பிருந்தால் துச்சாதனன் மார்பைக் கிழித்தெறிவேன்! சீறிவரும் குருதியினை திரௌபதியாள் சிரசிலிட்டு சிகையை அலங்கரிக்க சிறப்புடன் வாய்ப்பளிப்பேன்!

**அர்ச்:** சூது விளையாட்டின் சூதினை நாம் நன்கறிவோம். இருப்பினும் இங்கின்று தனித்தே விளையாடத் துணிந்து வந்தோம்!

**சகுனி:** அரசர்க்கரசே! ஆரம்பியுங்கள் உங்கள் அருமையான ஆட்டமதை!

**யுதிஷ்:** தங்களுடன் போட்டி என்றால் தயங்காமல் ஆடுவேன்! தம்பியுடன் தான் போட்டி என்பதனால் அவன்தான் ஆட்டத்தைத் தொடங்கட்டும்.

சகுனி பகடையைக் கையில் எடுக்கிறான்.

**சகுனி:** மருமகனே துரியா! மகிழ்ச்சியுடன் கேளப்பா! நீ வேண்டும் எண் என்ன?

**துரி:** பன்னிரண்டைப் போட்டு பகடையை உருட்டுங்கள்.

சகுனி பகடையை உருட்ட 12 விழுகிறது.

**துரி:** அடுத்து நான் கோருவது ஆறாவது எண்ணை!

சகுனியின் பகடை எட்டைக் காட்டுகிறது. துச்சாதனன் காய்களை யுதிஷ்டிரரிடம் தருகிறான்.

**யுதிஷ்:** பார்த்தா! பகடையை இங்கே கொடு பார்ப்போம்! நகுலா! வேண்டும் எண் என்ன விளம்பிடப்பா!

**நகுல:** பன்னிரண்டே வேண்டும் பகடையிலே அண்ணா!

பகடை பன்னிரண்டைக் காட்டுகிறது. 12 பொற் காசுகளை வைக்கின்றனர். மகிழ்ச்சியில் பாண்டவர்கள் திளைக்கின்றனர்.

**யுதிஷ்:** நகுலா! அடுத்ததாக எந்த எண்ணைத் தரவேண்டும் நானிப்போ?

**நகுல:** ஆறாவது எண்ணை உருட்டுங்கள் அண்ணா!

பகடை ஏழாக விழுகிறது. அர்ச்சுனன் காய்களை சகுனியிடம் தருகிறான்.

**துரி:** எட்டாம் எண்ணை உருட்டுங்கள் என் மாமா!

பகடை ஆறாக விழுகிறது.

**சகுனி:** என்னுடைய பகடைக்கு என்ன நடந்ததிப்போ?

**நகுல:** அண்ணா! ஏழதனை எண்ணியுள்ளேன்!

**யுதிஷ்:** எண்ணியது போலிங்கு ஏழுதனைப் பெற்றுவிட்டோம்!

அடுத்து எட்டுப்போடும்படி நகுலன் கோர எட்டே விழுகிறது. துரியோதனன் வைத்த பந்தையப் பொருளை அர்ச்சுனன் எடுக்கிறான். பாண்டவர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

**நகுல:** அடுத்ததாக எண் நாலுதனைப் போடுங்கள் அண்ணா!

பகடையில் 5 விழுகிறது.

**துரி:** மாமா! ஒன்பதை வேண்டுகிறேன். உருட்டுங்கள் இப்போதே!

ஒன்பதே விழுகிறது. துரியோதனன் மகிழ்ச்சியடைகிறான்.

இவ்வாறு யுதிஷ்டிரரும் சகுனியும் மாறி மாறி வெல்வதும் தோற்பதுமாய் பலதடவை ஆடுகின்றனர். சகுனி சில தடவைகளில் கேட்ட இலக்கம் விழாவிட்டால் துரியோதனன் கோபமடைகிறான்.

**சகுனி:** பதட்டமடையாதே பொறுத்திரடா மருமகனே! பகடைப்போர் வீரர் என்னை பதைபதைக்க விடமாட்டார்! இறுதி வெற்றி எமக்கேதான்! எத்தனை எண் வேண்டுமிப்போ எடுத்துச் சொல் இக்கணமே!

**துரி:** பதினொன்று தாருங்கள்!

**சகுனி:** நாட்டைவிட்டு நீ ஓட நான் வழியும் விடுவேனோ! பொறுத்துப் பாரிங்கே பதினொன்று தானுருளும்!

**கர்ண:** பதினொன்றுதான் வேண்டும்! பகடைதனை உருட்டுங்கள்!

**துச்சா:** அன்புள்ள மாமா பதினொன்று தான் தேவை!

**சகுனி:** பகடைப் போர் வீரர்களே! இதுவே என் இறுதி நிலை! உறுதியாக இந்த உதவிதனைத் தாருங்கள் பதினொன்று காட்டி பெருமைதனை நாட்டுங்கள்.

பகடை உருட்டப்படுகிறது. பதினொன்று விழுகிறது.

**துரி:** வென்றுவிட்டோம் மாமா! வென்றுவிட்டோம்.

**திருத:** விதுரரே! வெற்றி யாருக்கு? என் மகன் வென்றானா?

**விதுர:** வென்றுவிட்டான் உங்கள் மகன்! ஆனால், வெட்கித் தலை குனிந்து வேதனையை அணைக்கிறது வேளம் நிகர் நாடு! வீழ்ந்து விட்டது வீரம்! வீழ்ந்துவிட்டது பெருமை! வெங்கொடுமைச் சாக்காடாய் விளைகிறது வெம்பகைதான். அஸ்தினாபுரி நாட்டின் அருமை பெருமையெலாம் அழிந்தொழிந்து சிதைந்தனவே!

**துரி:** என் அருமை மாமா! எனக்கே பெருமைதனை அள்ளி அள்ளிக் குவித்து அரிய வழி கண்ட உம்மை அள்ளி அணைத்திடுவேன்! அரிய முத்தம் தந்திடுவேன். பாண்டவர்க்கு இங்கு பதவியில்லை! பொதுவிலிங்கு தங்குதற்கோரிடமுமில்லை! கானகத்துக்கேகட்டும்! கடிய வழி போகட்டும். பதின் மூன்று ஆண்டுகளை பல திசையில் வாழட்டும்!

<u>பின்னணிப் பாடல்:</u>

தர்மமது தலைகுனிந்து
தடுமாற்றம் கண்டதிங்கு!
கர்மாவின் நிலையிதனை
தடுப்பதற்கு நியதியுண்டோ?

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்

436331



பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு




# தமிழன் என்பதால்தானோ?

பராசக்தியில் குணசேகரனாக கலைஞர் கருணாநிதியின் வசனத்தை பேசியபடி திரையுலக இரசிகர்களுடன் ஆரம்பமான இயக்கம்.

போடாத வேசமில்லை. அவர் நடித்த படங்கள் சில தோல்வியடைந்திருக்கலாம். ஆனால் அவர் ஏற்ற எந்தப் பாத்திரமும் தோல்வியடைந்ததில்லை.


கட்டபொம்மனையும்-வ.உ.சி.யோட்டிய தமிழனையும் சிவாஜி மூலமே நாம் உணர்ந்தோம். கால் சொன்னது போல-இந்தத் தலைமுறையில் எந்த நடிகனிலும் அவர் பாதிப்பு இல்லாமல் போகாது.

அவரால் முதலில் தமிழ் பேசும் உலகிற்கு பெருமை. நடிப்புலகிற்கு சாபம். ஆயினும் அவர் பிறந்த நாட்டில் உரிய கௌரவம் கிடைக்காதது சோகம்.

எந்த விருதைக் கொடுத்தாலும் அந்த விருதுக்கு விலாசம் கிடைக்கக்கூடிய சிவாஜி செய்த தவறு தமிழனாகப் பிறந்தது என்று அவரை நேசிப்போர் வருத்துவது நிஜம். பிரான்ஸ் அரச செவாலியர் விருது கொடுத்துள்ளது. இந்திய அரசோ அந்த நடிப்புலக பல்கலைக் கழகத்தை சிறப்பிக்காமல் இன்னும் யோசிப்பது கொடுமையல்லவா?

நாம் கேட்பது விருது கொடுத்து சிவாஜியைக் கௌரவப்படுத்தவல்ல. சிவாஜிக்கு கொடுப்பதன் மூலம் விருதுகளுக்கு கௌரவம் கொடுக்க.


Kala JEWELLERY



புன்னகை சிந்தும் பெண்ணும் மின்னிடும் பொன்னகை பேரு

433686

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## நம்மவர் சாதனை

வெளிநாட்டவரின் சாதனைகளை மட்டும்தான் வியக்க முடியுமா? விளம்பரமாக்க முடியுமா? நம்மவர்கள் பலர் சாதனை படைத்தும் எடுத்துக்காட்டப்படாமல் மூலையில் கிடக்கிறார்கள்.



படத்தில் இருப்பவர் லூகான் பெர்னாண்டோ. 17 வயதில் இருந்தே கால்பந்தாட்டத்தில் வைத்தியம். சாதனை வெறி. 38 வயதில் இவர் படைத்த சாதனை 500 கோல்கள் போட்டது. உள்நாட்டு, வெளிநாட்டு கால்பந்தாட்டக் கழகங்கள் இடையே நடைபெற்ற போட்டிகளில் எட்டிய சாதனை அது. கொழும்பு கொட்டாஞ்சேனை "சன்னி மவுண்ட்" கழகத்துக்காக ஆடி வருகிறார். →

ஜேர்மன், இங்கிலாந்து, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளோடு இலங்கை அணியின் வீரராக போட்டிகளில் பங்கேற்றுள்ளார். தனது 500வது கோலை இவர் ஜூன் 2, 1993 அன்று அடித்தார்.

லூகான் கால்பந்தாட்டத்தில் மட்டுமல்ல, கரத்தில் தூரிகையை எடுத்தால் பிரமாண்டமான 'கட் அவுட்'டுக்கள் வரைவதிலும் கெட்டிக்காரர். மறைந்த ஜனாதிபதி பிரேமா போன்ற அரசியல் தலைவர்களை வரைந்துள்ளார் லூகான்.

## மற்றொரு பூலான்தேவி



## அங்குபோனாலும் அசத்தல்தான்

துபாயிலுள்ள ஆடைத்தொழிற் சாலைகளில் பணி யாற்றும் இலங்கைப் பெண்கள் அண்மையில் துபாயிலுள்ள அல்-ஷபா பூந்தோட்டத்தில் தங்களது வருடாந்த உற்சவத்தை கொண்டாடினார்கள். கொண்டாட்டத்துக்கான படத்தில் இவ்வருடப் போட்டியில் அழகிப் போட்டியில் தெரிவானோரை காணலாம். (படப்பிடிப்பு-ஏ.எல்.எம். நயீம்)



தினமுரசு வாரமலர்

## குற்றமென்ன செய்தோம் நாங்கள்?

போரின் வேகத்தில் விளைவுகள் தெரியாமல் வெற்றியை குறிவைத்து அமெரிக்காவும்-வியட்நாமும் மோதின. வியட்நாமை ஒரு வழி பண்ண, காடுகளை அழித்து கெரில்லாக்களை கொல்லி எறிய அமெரிக்கா பாவித்த சில இரசாயன மருந்துக்கள் இப்போது அமெரிக்க குழந்தைகளையே பாதிக்கின்றன. நாடு திரும்பிய அமெரிக்க வீரர்கள் மூலம் இரசாயன தாக்கம் ஏற்பட்டு இன்றுவரை தொடர்கிறது.



## நறுமண நங்கை




வாசனை பொருள் விளம்பரத்திற்காக இப்படியொரு போஸ் தேவைப்பட்டது...